1557

தொகுதி 11.] 1932௵ ஜுலை௴ [பகுதி 6.

மனமோகினி.

ஆசிரியர்:
ஆரணி குப்புசாமி முதலியார்

8 SEP 1932

பிரசுரகர்த்தா
நா. முனிசாமி முதலியார்,
ஆனந்த நிலையம், சென்னை.

மாதவி மாதவன் 2-பாகம்

ஓர் துணிகரமான சாமர்த்திய ரெயில்வேக் களவு

இன்பரசம் பொருந்தியது; படிக்கப் படிக்கப் பேரவாக் கொடுக்கக் கூடியது; தேன்போல் தித்திப்பது; பொருள் நிரம்பியாது; இதுவரையில் வெளிவராதது; சாமர்த்திய சம்பவங்கள் பொதிந்தது; அழகிய கடிதத்தில் அச்சிடப்பட்டது. இரண்டு பகமும் சேர்ந்து விலை ரூ. 2—0—0.

இரத்தினபுரி ரகசியம் 6-பாகம் விலை ரூபா 11-10-0

அமராவதி 2-பாகம்.

ஆரணி-குப்புசாமி முதலியா ரவர்க ளியற்றியது.

இது மிக்க பிரமையை யுண்டாக்கும் அற்புத சம்பவங்கள் நிறைந்த நாவல். ஒரு மனிதன் சுய நம்பிக்கையும், நேர்மையான நடக்கையும், ஊக்கமு முடையவனுயிருந்தால், அவன் தான் கோரிய காரியத்தில் கட்டாயம் ஜெயம் பெறுவான் என்பதும், எத்தகைய ஆபத்துக்களிலும் தப்பித்துக்கொண்டு கீர்த்தியும் மேலான பதவியும் அடைவானென்பதும் இதில் நன்ருய் நிரூபிக்கப்பட் டிருக்கின்றன. அசம்பாவிதமெனத் தோன்றும் அநேகம் சம்பவங்கள் இதில் உண்மையாகவே நடைபெறுவது வாசிப்போர்க்கு அளவற்ற மன மகிழ்ச்சியை யளிக்கும். 2-பாகமும் விலை ரூபா 4.

இராஜாமணி

அல்லது

ஓர் அபூர்வ மர்மம்

கற்புக்கரசியாகிய ஓர் உத்தமியின் சரித்திரத்தை மெத்தத் தெளிவாக விளக்கிக் காட்டக் கூடியது. இராஜாமணி யென்னும் பெண்மணி, பெருந்திருட்டும், மிகுந்த கொலைத் தொழிலுமுடைய ஒருவனுக்கு மகளாயிருந்தும், அவனைப்போலவே பெரும் பாதகச் செயல்களையுடைய ஒரு முரடனுக்குச் சகோதரியாயிருந்தும் அவர்களிடம் அகப்பட்டுப் பெரிய ஆபத்திற் சிக்கிய பூபாலம்பிள்ளை, யென்பவரைக் காப்பாற்றி அவருடன் தானும் வெளியேறி அவரை மணந்து கொள்வதும், மிக்க அதிசயம் பொருந்திய செயல்களாயும் படிப்போர் மனத்தைக் கவரக்கூடியதாயும் இருக்கும்.

இதன் விலை ரூபா 2-0-0.

ஆனந்தபோதினி ஆபீஸ், சௌகார்பேட்டை, மதராஸ்.

8 SEP 1932

அப்போது கோகிலம் நிதானமாக, ஆம்; அம்மா! ஒரு தாராள நோக்கமுடைய சினேகிதர் என்னிடம் அபிமானம் வைத்து எனக்கு உதவி செய்வதாக வாக்குறுதி யளித்துள் ளார். இதோ இப்போதே என்னிடம் பணமும் இருக்கிறது ஆனால் அது எவ்வளவென்று எனக்குத் தெரியாது? என்று சொன்னாள்.

அப்போது தாய் இன்னும் அதிக ஆத்திரமடைந்து தன் படுக்கையில் சாய்ந்த வண்ணம், 'பணமா?' என்று சொன் னாள். அதற்குக் கோகிலம், 'ஆம். இதோ பார்! என்னி டம் இருக்கும் காகிதப் பொட்டலத்தைத் திறக்கிறேன். ஓ! சாவரன்! ஐந்து சாவரன்களிருக்கின்றன' என்று சொன் னதும் அவ்வளவு பெரிய தொகையை அவள் கண்டதால் ஆச்சர்யத்துடன் மெய்மறந்து நின்றாள். அப் பவுன்களைக் கண்ட தாயாரும், 'பெண்ணே! இப்போது நீ கடவுளின் முன் நின்று கொண்டிருப்பதாக நினைத்து உண்மையைச் சொல். அப்பவுன்கள் உனக் கேது? என்று துக்கத்துடன் கேட்டாள். அப்போதுதான் தன் தாயாரின் மனத்திலிருக் கும் சந்தேகத்தைத் தெரிந்துகொண்டு, 'ஓ, தாயே! உனது குமாரியைப்பற்றி இவ்வளவு கேவலமாக நினைக்கிறாயா! அவ் வாறு ஒரு போதும் நினைக்கவேண்டாம். கடவுள் கிருபை யால் நான் பரிசுத்தமாகவே இருக்கிறேன்! என்று சொன்ன துடன் தன் தாயார் தன்னைப்பற்றி அவ்வளவு கேவலமாக நினைத்து விட்டதற்காக மனமார வருந்தி அப்படுக்கையின் அருகில் முழங்காலிட்டுப் பணிந்து நின்று அலறி அழு தாள். இத்தகைய சத்தத்தால் அந்த ஆண் குழந்தை விழித் துக்கொண்டு அழத் தொடங்கிற்று.

18570

அச்சமயம் தாயும் தன் குற்றத்தை யுணர்ந்து, 'பெண்ணே ! ஏதேனும் தவறுதலாகச் சொல்லி விட்டிருந்தால் மன்னித்துப் பொறுத்துக் கொள்' என்றுதெரிவித்தாள்.

அப்போது கோகிலம் மனவெறுப் படைந்தவளாய் 'ஐயோ, நான் ஒன்று மறியாதவளாயும், பரிசுத்தமானவளாயும், கற்பிற் சிறிதும் தவறாதவளாயும் இருக்கின்றேனே! அப்படி யிருந்தும், என்னைப் பெற்றெடுத்த தாயே என்னைப் பற்றிக் கேவலமாக நினைத்தால் நான் என் செய்வது? ஆ, தெய்வமே! இதுவும் என் தலைவிதியா ?' என்று அலறி அழுதாள். தன் குமாரியின் அழுகையைக் கேட்ட தாய் மனக் கலக்க முற்று, 'பெண்ணே! இப்போது நீ என்னைக் கடிந்து கொண்டதால் நான் பைத்தியம் பிடித்தவள்போல் அவஸ்தைப்படுகிறேன்' என்று தெரிவித்துக் கொண்டாள். அப்போதும் கோகிலம் ஆறுதலடைந்தவளாய், 'ஆ, பாழாய்ப் போன செல்வம்! இச்செல்வம் இல்லாவிட்டாலும் வாழ்க்கையில் துன்பம் காணப்படுகிறது. அது கிடைத்து விட்டாலோ வாழ்க்கைத் துன்பம் இன்னும் இரட்டிப்பாக அதிகரிக்கிறது. தாயே! நீ என் விஷயத்தில் பெரிய தவறு செய்து விட்டாய். இதனால் என் மனம் பிளந்து போய் விட்ட தென்றே சொல்லலாம். என்னைப் பெற்றெடுத்த நீயும் இவ்வாறு என்மீது பழி சுமத்துவாய் என்று நான் கனவிலும் கருதவில்லையே! என்று கூறிக்கொண்டே இன்னும் அதிகமாக அழ ஆரம்பித்தாள்.

இதை யெல்லாம் கவனித்துக் கொண்டிருந்த அச்சிறுவன் தன் தமக்கையைப் பார்த்து, 'சகோதரியே! எனதன்புள்ள சகோதரியே! நமது பிரியமுள்ள தாயை அவ்வாறெல்லாம் கடிந்து பேசவேண்டாம்,' என்று சொன்னான். உடனே கோகிலம் அப்பையனை மார்போ டணைத்துக்

கொண்டு, 'ஓ, என தன்புள்ள சகோதரனே! சிறிது நேரத்துக்கு முன் வரை, உனக்கு நல்லகாலம் ஏற்படலாமென்று நம்பி யிருந்தேன். ஆனால் இப்போதோ எல்லாம் ஒரே இருட்டாக இருக்கின்றது. என் தாய்க்கே என்னிடம் சந்தேகத்தை உண்டாக்கிய இப்பணம் பாழாய்ப் போகட்டும்,' என்று சொல்லிக்கொண்டே எதிரில் படுக்கையின் மீது போட்டிருந்த ஐந்து பவுன்களையும் எடுத்து ஜன்னலின் வழியாக வெளியே எறியப் போனாள். அச்சமயத்தில் அவளுடைய தாய் ஏதோ மூர்ச்சை யடைந்ததுபோல் படுக்கையில் சாய்ந்ததால் பவுனை எடுக்காமல் தன் தாயை பார்த்து,'தாயே! நான் இப்போது என்ன செய்து விட்டேன். நீ ஏன் இவ்வாறு மூர்ச்சையாய் விழவேண்டும்?' என்று கேட்டாள்.

அப்போது தாய், 'அம்மா! இன்னும் சொற்ப நேரத்தில் எனக்கு ஒன்றும் இராது. குடிப்பதற்குச் சிறிது ஜலம் கொடு' என்று கேட்டாள். கோகிலமும் தன் தாயின் வெளுத்துப்போன முகத்தின் மீது சிறிது ஜலத்தைத் தெளித்துக் குடிப்பதற்கும் சொற்ப ஜலம் கொடுத்த பிறகு அவள் ஒருவாறு மூர்ச்சைதெளிந்து, 'அன்புள்ள கோகிலமே! நான் உனக்கு ஒரு பெரிய அபசாரம் செய்து விட்டேன். நான் உயிர் விடும் வரை இதற்காக அல்லும் பகலும் வருந்திக் திக் கொண்டிருக்க வேண்டியதே. நமக்குள்ள துயரத்தின் அளவு மிகப் பெரியது. அதனால் பல கஷ்டங்க ளுண்டாகின்றன. பட முடியாத இனி இத்துயரம், பட்டதெல்லாம் போதும் போதும். என்றுதான் நாம் இத் துயரத்தினின்றும் விடுபடுவோமோ தெரியவில்லையே' என்று இன்னும் ஏதோ சொல்ல முயன்றபோது, கோகிலம், 'தாயே! நாம் இனி இதைப்பற்றிப் பேசவேண்டாம். எனது அருமைத் தாயாகிய நீயும் இவ்வாறு என் மீது சந்தேகங் கொண்டது என்னை

மிக துக்கத்துள் ஆழ்த்தி விட்டிருக்கிறது. ஆயினும் என் செய்வது? எனக்கு உதவி செய்தது யாரென்று சொல்லி விடுகிறேன் கேள். எல்லாம் வல்ல இறைவன் என் பரிதாப நிலையைக்கண்டு இரக்கங்கொண்டு தாராள புத்தியும், பச்சாதாப குணமுமுடைய நாடக உலகில் பெயர்பெற்ற ராஜலட்சுமியை எனக்குத் துணையாக அனுப்பி யுள்ளார், என்று தெரிவித்தாள்.

இதைக் கேட்டதும் அவளது தாய், 'பெண்ணே! என்னை மன்னித்து விடு ஏதோ அறியாமையால் செய்து விட்ட இப்பிழையைப் பொறுத்துக் கொள். இந்தச் சொற்ப நேரத்துக்குள் எவ்வளவு அசம்பாவிதங்கள் நிகழ்ந்து விட்டன. ஆ, தெய்வமே! என்னை மன்னித்துக் கொள்! என்று தான் செய்த குற்றத்தை உணர்ந்தவள்போல் மன்றாடிக் கேட்டுக் கொண்டாள். அப்போது கோகிலம், 'நானாவது உன்னை மன்னிப்பதாவது? இனி அப்படிப்பட்ட பேச்சைப் பேச வேண்டாம்? என்று கூறிக்கொண்டே தன் தாயின் கழுத்தில் கையைப் போட்டு அன்புடன் தழுவிக் கொண்டாள். தன் தாயும் சகோதரியும் சமாதான மடைந்து அன்புடன் ஒருவரை யொருவர் தழுவிக் கொண்டதைக்கண்டு அச்சிறுவனும் ஆனந்தக் கண்ணீர் வடித்தான். பிறகு அவள் அன்றிரவு நாடகக் கொட்டகையில் நடந்த விவரங்களை யெல்லாம் தன் தாயினிடம் சொல்லிக் கொண்டாள். தன் குமாரியின் அருங்குணத்தை யறிந்த தாய் பலமுறை அவளைத் தழுவிக்கொண்டு தன்னை மன்னிக்கும்படி கேட்டுக் கொண்டாள்.

கோகிலம் தெரிவித்தபடி இந்தப் பாழும் செல்வம் கிடைத்தாலும் கஷ்டமாக இருக்கிறது. கிடைக்கா விட்டாலும் கஷ்டமாக இருக்கிறது. பொருளிலார்க்கிவ்வுலக மில்லை என்பது போலும், பசிக்கு முன் பத்தும் பறக்கும் என்பது

போலும் பணம் இல்லாவிட்டால் வாழ்க்கைக்கு இன்றியமையாததான சௌகரியங்களையும் பெற முடியாமல் அல்லற்பட வேண்டியதாய் இருக்கிறது. அந்த சௌகரிய மில்லையே, இந்த வசதி யில்லையே என்று சதாகாலமும் வருந்த வேண்டியிருக்கிறது. எப்படியாவது கஷ்டப்பட்டுப் பணத்தைப் பெற்றாலோ, அப்பணம் எப்படி கிடைத்தது. ஏதோ அயோக்கியத்தனத்தின் மூலமாகத்தான் கிடைத்திருக்கிறது எனப் பெயர் வைத்துவிடுகின்றனர். இன்னும் பணத்தால் நேரும் தொல்லைகள் பல. ஆயினும் ஒவ்வொருவரும் உண்மையுடன் உழைத்து வாழ்க்கைக்கு அவசியமான செல்வத்தைச் சம்பாதிக்க வேண்டியது அவசியமாகும். இன்றேல் இல்லானை இல்லாளும் வேண்டாள் என்பதுபோல் உலகில் யாருமே மதிக்கமாட்டார்கள்.

23-வது அத்தியாயம்

——:o:——

உதவிக்கு வந்தவர்.

நாம் மேலே கூறிய விவரம் நடந்த மறுநாள் காலை கோகிலம் எங்கேயோ வெளியே போய்ச் சில சாமான்களை வாங்கிக்கொண்டு சுமார் பதினொரு மணிக்கு வீட்டுக்குத் திரும்பினாள். அப்போது அவள் சந்தோஷமாகவும், உற்சாகத்துடனும் இருந்தாள். சிறிது நேரத்துக்கு முன் தன் தாய்க்கும் தனக்கும் நடந்த சம்வாதம் நடவாமலிருந்திருக்குமாயின் அவள் இன்னும் அதிக சந்தோஷத்துடன் இருந்திருப்பாள். கோகிலம் தன் தாய் அவ்வாறு தன்மீது சந்தேகப்பட்டதற்காக அவளை மன்னித்துவிட்டதுடன் இனி அதைப்பற்றிப் பேசுவதுமில்லையென்று முடிவு

செய்திருந்தா ளென்றாலும் தன் தாயே தன்மீது சந்தேகம் கொண்ட அச் சம்பவத்தை மட்டும் மறக்க அவளால் முடியவேயில்லை. ஆதலின் அவள் அடிக்கடி தனக்குள், 'என் தாய் என்மீது சந்தேகங் கொண்டாள். ஆதலின் அவளுக்கு என்னுடைய கற்பில் பூரண நம்பிக்கை யில்லைபோலும்!' என்று சொல்லிக் கொள்வாள்.

ஆயினும் அவள் வெளியில் சென்று திரும்பியதும் எதிரில் இருந்த தன் சகோதரனுடைய கள்ளங்கபடமற்ற முகத்தைப் பார்த்தாள். சந்தோஷமடைந்து தான் கொண்டு வந்த சாமான்களை யெல்லாம் மேஜையின்மீது வைத்தாள். அச்சாமான்களில் தன் தாய்க்கு வேண்டிய சில சாமான்களும், அச்சிறுவனுக்கான புதிய உடைகளும் இருந்தன. அவள் எல்லாச் சாமான்களையும் எடுத்து வைத்த பின்னர் தாய் அவளை ப்பார்த்து, 'குழந்தாய்! இது என்ன ஆச்சரியம்! உனக்கு வேண்டிய சாமான்களைதையும் வாங்கவில்லையே!'' என்று வியப்புடன் கேட்டாள்.

அதற்கு அவள், 'அம்மா! இப்போது எனக்கு ஒன்றும் தேவையில்லை. தம்பி! இந்தப் புதிய உடையை அணிந்துகொள்' என்றாள். பிறகு கோகிலம் மனப்பூர்த்தியாகத் தன் சகோதரனுடைய பழைய ஆடைகளைக் கற்றிவிட்டுப் புதிய உடைகளை அணிந்த அச்சிறுவன், சிறுவர்களுக்குள்ள இயற்கையான முறையில் சந்தோஷக் கூத்தாடினன். பிறகு அவள் அவனது தலைக்குத் தைலம் தடவிக் கூந்தலை வாரிவிட்டாள். குழந்தையின் அழகைக் கண்டு தாயும் மகளும் சந்தோஷப்பட்டுக் கொண்டிருந்தபோது யாரோ தங்கள் அறையை நோக்கிவரும் காலடிச் சத்தம் கேட்டது, மறு நிமிஷமே, 'அம்மையே! இனி நீ வழிகாட்ட வேண்டியதில்லை. இவ்வளவுதூரம் வந்ததே போதும். இதோ உன் சிரமத்துக்

காக இந்த தட்டை எடுத்துக்கொள். இனி நானே அந்த அறைக்குச் சென்றுவிடுவேன்' என்று கூறும் சப்தம் கேட்டது. வந்தவரை வழிவிட்டவள் அந்த வீட்டின் சொந்தக்காரி. அவள் பிறருடைய விஷயங்களை அறிந்து கொள்வதில் மிக ஆர்வமுடையவள். புதிதாக வந்தவர் கோகிலத்தின் தாயாருடன் என்ன பேசப்போகிறார் என்பதை அறிய வேண்டுமென்னும் எண்ணத்துடன் மாடிமீது வர முயற்சித்தாள். எனினும் வந்தவர் அவளுக்குச் சிறிது பணம் கொடுத்து அவள் கீழேயே தங்கிவிடும்படி செய்துவிட்டார். உடனே அவர் கோகிலத்தின் அறையினருகிற் சென்று கதவைத் தட்டினார். உடனே கோகிலமும் கதவைத் திறந்தாள். வயதானவரும் குள்ளமாகவும் பருத்த சரீரமுடையவராகவும் இருந்த ஒரு பெரியவர் நின்றிருப்பதைக் கண்டாள்.

உடனே அவர், 'அம்மா! உன் பெயர்தான் கோகிலாம்பாளோ!' என்று கேட்டுக் கொண்டே எதிரில் படுக்கையில் சாய்ந்திருந்த மாதைக் கண்டு, 'அம்மணி! என்னைப்பற்றிக் கவலைப்பட வேண்டாம். நான் எத்தகைய விரோத எண்ணத்துடனும் இங்கு வரவில்லை. அதற்குப் பதிலாக ஏதேனும் நன்மை செய்யலாமென்றே வந்திருக்கிறேன்' என்று கூறிக்கொண்டே அறையில் நுழைந்தார். அவர்தான் ராஜலட்சுமியால் அனுப்பப்பட்ட மனிதராக இருக்க வேண்டுமென்று நினைத்த கோகிலம் அவருக்கு மரியாதையாக ஒரு ஆசனம் அளித்துவிட்டு அறையின் கதவை உட்பக்கம் சாத்திக்கொண்டாள். அவளுடைய தாயும் சகோதரனும் அவர் யாரோ எதற்கு வந்தாரோ என்று ஆவலுடன் அவரது முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

அவர் கோகிலத்தைப் பார்த்து, 'அம்மா! இன்று காலை யாரேனும் இங்கு வரலாமென்று நீ எதிர்பார்த்திருந்தாயல்

லவா? நேற்றிரவு உனக்கும் ராஜலட்சுமிக்கு மிடையில் நடந்த விஷயங்களையெல்லாம் நான் அறிவேன். அவள் எனக்கு அதிக நாட்களாகவே தெரியும். உன் நிலைமையைப் பற்றியும், உனக்கு அவள் நேற்று செய்த உதவியைப்பற்றி யும் என்னிடம் தெரிவித்தாள். அவள் கொடுத்த பணத்தில் ஒரு பாகம் இச் சிறுவனுக்குப் புதிய உடை வாங்குவதில் செலவழிந்துவிட்டது போலும்! அப்பையன் அழகுள்ளவ னுகவே இருக்கிறுன். தம்பி உன் பெயர் என்ன?' என்று கேட்டார். உடனே அச்சிறுவன் அதிக சந்தோஷத்துடன் 'ஐயா, எனது பெயர் சங்கரன் என்பார்கள்' என்றுன். அவர் தம்பி! நீ உன் சகோதரியிடம் அதிக பிரியமுடன் இருக் கிறுயல்லவா?' என்று கேட்டார். அதற்கு அப் பையன், 'ஐயா நான் பிரியமாகத்தான் இருக்கிறேன். எனது சகோ தரியும் என்னிடம் அன்புடனும் நல்லவிதமாகவும் நடந்து கொள்கிறுள். இதோ பாருங்கள்! இபபோதுதான் எனக் குப் புதிய ஆடைகள் வாங்கினுள்' என்றதும் அவர் அப் பையனை அருகில் அழைத்து, 'தம்பீ! நீ நல்ல பையன். அழ காகத்தான் இருக்கிறுய். ஆனுல் உன் மூகம்தான் கொஞ்சம் வெளுத்திருக்கிறது. சரி, பார்ப்போம் இருக்கட்டும். அம்மா! உங்களுக்கு உடம்பு சரியாயில்லை போலும்! அதிக நாளாக இப்படி இருக்கிறதோ?' என்று கேட்டார்.

அதற்கு அம்மாது, 'ஆம். ஐயா' பல மாதமாகவே நான் பெரிதும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறேன். அதோ நிற் கும் என் அருமைக் குமாரி இல்லாவிட்டால் என் கதியும், என் பையன் கதியும் யாதாக முடிந்திருக்குமோ இறைவன் தான் அறியவேண்டும்' என்று சொல்லிக் கொண்டே கண் ணீர்விட்டாள். உடனே அவர் கோகிலத்தைப் பார்த்து, 'பெண்ணே! நீ நாடகத் தொழிலில் மாதம் என்ன சம்பாதிக்

கிறாய்?' என்று கேட்டார். அதற்கு அவள் பணிவுடன், மாதம் இரண்டு பவுன் கிடைப்பதாகத் தெரிவித்ததும் அவர் முதல் நாள் இரவு ராஜலட்சுமி கொடுத்த பணத்தை எப்படிச் செலவழித்தாள் என்று கேட்டு விவரம் தெரிந்துகொண்டார். அதில் அவள் ஒரு பைசாவையாவது தனக்காகச் செலவு செய்யாமல் பெரும்பாலும் தன் தாய்க்காகவும் தம்பிக்காக வுமே செலவு செய்திருப்பதைக்கண்டு அவளுடைய தாராள புத்திக்காக அவளைப் பாராட்டினார். மேலும் சொற்ப தொகை யையும் வீண் விரயஞ் செய்யாமல் எல்லாவற்றையும் அவசிய மான வழியிலேயே செலவழித்ததைக்கண்டு சந்தோஷப் பட்டார்.

பிறகு அவர், 'அம்மா! நீ சொன்னதெல்லாம் சரிதான். ஏதேனும் சாமான்களை அடகு வைத்திருக்கிறீர்களோ!' என்று கேட்டார். அதற்கு அவள், 'ஆம். எல்லாச் சாமான்களும் அடகு வைக்கப்பட்டிருக்கின்றன' என்று தெரிவித்தாள். அவர் அதெல்லாம் தனக்குத் தெரியா தென்றும், சுமார் எவ்வளவு தொகைக்கு அடகு வைக்கப் பட்டிருக்கு மென்றும் விசாரித்தார். பல விலை யுயர்ந்த சாமான்கள் அடகு வைக்கப்பட்டிருக்கிற தென்பதை யறிந்து அவள் ஒரு காலத்தில் பணக்காராகவே இருந்திருக்க வேண்டு மென்று யூகித்தார். அவர் அக்குடும்பத்தின் உள் வயணங் களை யெல்லாம் விசாரித்தபோது அவர் நல்லெண்ணத்துட னேயே அவ்வாறு விசாரித்தா ரென்றாலும் தாய்க்கும் மக ளுக்கும் சிறிது கஷ்டமாகத்தான் இருந்தது. தங்கள் கேவல மான நிலைமைகளைச் சொல்லிக்கொள்ள வெட்கப்பட்டார் கள். ஆனால் அவரோ அவர்களுடைய வெட்கம் முதலிய எதையும் கவனிக்கவில்லை. எந்தெந்த சாமான்களை அடகு வைத்திருக்கிறார்களோ அவற்றின் ரசீதுகளை யெல்லாம் எடு த்து ஒரு காகிதத்தில் சுற்றி மடித்து வைத்துக்கொண்டார்.

அதன் பின்னர் அவர், 'இவைகளை யெல்லாம் நான் வைத்துக்கொண்டு அது விஷயமாய்ச் செய்யவேண்டியதைக் கவனிக்கிறேன். கோகிலம்! நீ இன்னும் சொற்பகாலம் நாடகத்திலேயே இருக்கிறாயா? அல்லது அதை விட்டுவிட வேண்டுமென்று விரும்புகிறாயா?' என்று கேட்டார். அந்தக் கேள்வியைக் கேட்கும்போதே அவள் மனம் மிக்க வருத்தப்பட்டதால் அவள் கண்ணீர்விட்டழுதாள். உடனே கோகிலத்தின் தாயார், 'ஐயா, என் குமாரி அந்தப் பாழும் நாடகத் தொழிலிலிருந்து விடுபடக்கூடிய உதவியைச் செய்யும் உத்தமரை நான் எக்காலும் மறக்கமாட்டேன். அவளும் அத் தொழிலை அதிகம் வெறுக்கின்றாள். எங்களுக்குக் கஷ்டம் ஏற்பட்ட ஆரம்பகாலத்தில் அவள் தையல் வேலையைத் தான் செய்தாள். ஆனால் அதில் தக்க ஊதியம் கிடைக்காமற்போனதால் அதை விடவேண்டியதாயிற்று ? என்று தெரிவித்தாள்.

அதற்கு அவர், 'ஆம்; கஷ்டம்தான். நீங்கள் இந்த நெருக்கடியான இடத்தில் சுகாதாரமற்ற வாழ்க்கையை நடத்துவதை விடச் சௌகரியமான இடம் கிடைத்தால் அந்த இடத்துக்குச் செல்ல விரும்பமாட்டீர்களோ' என்று பரிவுடன் கேட்டார். அதற்கு அம்மாது அதிக துக்கத்துடன் அவ்விடத்தை விட்டுச் செல்ல அவர்கள் எப்போதும் தயாராக இருப்பதாகவும், தன் வியாதி குறையாமல் இருப்பதற்குச் சுகாதாரமற்ற அந்த இடமே காரணமென்றும், கவலையே அவர்களை அதிகம் வாட்டி வருவதாகவும் தெரிவித்தாள். அப்போது கோகிலம் தன் தாயின் முகத்தையும் வந்தவர் முகத்தையும் மாறி மாறிப் பார்த்தாள். பிறகு அவர், 'சரி. அப்படியானால் இனி என்ன செய்யவேண்டு மென்பதைப் பற்றிக் கவனிப்போம். 'கோகிலம்! நீ உத்தம குணங்களை

யுடைய பெண்ணாக இருக்கிறாய், உன் கையில் பணம் கிடைத்ததும், தற்காலத்திய பெண்கள் சிலர் செய்வதேபோல் உன்னை அழகுபடுத்திக்கொள்வதில் அதைச் செலவிடவில்லை. நீ உன் தாய், சகோதரன் ஆகியவர்களின் சௌகரியத்தையே பெரிதாகக் கவனித்தாய். அதைக் கவனிக்கும்போதுதான் எனக்குச் சந்தோஷமாக இருக்கிறது. இதற்குமேல் இப்போது எதையும் நான் சொல்ல முடியாது. மறுபடியும் என்னிடமிருந்து உங்களுக்கு ஏதேனும் தகவல் கிடைக்கும்' என்று சொல்லிவிட்டு அங்கிருந்து புறப்பட்டார்.

அவர் அவ்விடத்தை விட்டுச் சென்றதும், கோகிலத்தின் சகோதரன் அவளுடைய கையைப் பிடித்துக்கொண்டு, 'சகோதரி! அந்தப் பெரியவரைப் பார்த்தால் எனக்குப் பிடிக்கவில்லை. அவர் கோபக்காராகவும், எதையும் அதிகமாக விசாரிப்பவராகவும் இருக்கிறார்' என்று கூறினான். அதற்கு அவள், 'தம்பி! அப்படியல்ல. அவர் பார்வைக்கு அவ்வாறு தோன்றினாலும் உண்மையில் மிகவும் நல்லவர். அவரை நீ விரும்பாமல் இருக்கக்கூடாது. தாயே! அவரது வருகையால் நமக்கு ஏதோ நன்மை உண்டாகிற காலம் நெருங்கி யிருக்கிறதென்று தெரிகிறதல்லவா?' என்று கேட்டாள். அதற்கு அம்மாது, 'ஆம்; எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது. நமக்கு நற்காலம் பிறக்கவேண்டுமென்றே நானும் கடவுளைப் பிரார்த்திக்கின்றேன்' என்று சொன்னாள்.

இந்த சம்பாஷணை முடிந்ததும் கோகிலம் தன் தயாருக்காக நல்ல புஷ்டியான ஆகாரத்தைத் தயாரித்தாள். அப்படித் தயாரிக்கும்போது முன்னாள் இரவு நடைபெற்ற சம்பவங்கள் அவளது ஞாபகத்துக்கு வந்தன. தன் தாய் தன் மீது சந்தேகங் கொண்டதற்காக அவளை மன்னித்துவிட்டிருந்தாலும், அப்படி சந்தேகப் படும்படியான சந்தர்ப்பம்

நேர்ந்ததே என்று விசனித்தாள். சிறிதும் சந்தேகமே தோன்றாதவாறு தன்னுடைய நடத்தை இல்லையோ என்னமோ என்று விசாரமடைந்தாள். அப்படி அவளுடைய மனதில் பலவித எண்ணங்கள் தோன்றி அவளது முகத்தில் விசனக் குறி காணப்படுவதையும், அவளுடைய தாய் கவனித்தாளென்றாலும், அதைப்பற்றி அப்போது எதையேனும் பேசி அவளுடைய துக்கத்தை அதிகப்படுத்தக் கூடாதென்னும் எண்ணத்துடன் ஒன்றும் பேசாமல் இருந்துவிட்டாள். மேலும் அப்போது அவ்வீட்டுக்கு வந்துவிட்டுப் போன பெரியவர் ஏதேனும் உதவி செய்து அதனால் அவளுக்கு இந்த விசனமெல்லாம் ஒழிந்து விடுமென்றும் யோசித்தாள்.

அன்று, பல நாட்களாக உட்கொள்ள முடியாமற் போன நல்ல உண்டியை அக் குடும்பத்தினர் அனைவரும் மனமார திருப்தியுடன் அருந்தினார்கள். வரும்படி மிக்க குறைவாய் இருந்ததால் பலநாளாக நல்ல உண்டி அருந்த முடியாமற் போய்விட்டது. அந்த உணவைக் கோகிலமே தன் கையால் எல்லாருக்கும் பரிமாறினாள். குழந்தை சிறுவன் திருப்தியாகச் சாப்பிட்டதைக் கண்டு கோகிலம் மனம் பூரித்தாள். அவன் சந்தோஷமாக இருந்ததில் கோகிலத்துக்கு அவளுடைய துக்கமெல்லாம் மறந்துவிட்டது. சாப்பாடு முடிந்து சொற்ப நேரத்துக்குள் யாரோ ஒருவர் அவ்வறையின் கதவைத் தட்டும் சத்தம் கேட்டது. அப்போது பையன் புஷ்டியான ஆகாரம் அருந்திவிட்டுத் தெம்பாக இருந்ததால் அவனே ஓடிப்போய்க் கதவைத் திறந்தான். உடனே மார்வாரிகளிடம் வேலைசெய்யும் குமாஸ்தா ஒருவர் சிறு மூட்டையுடன் உள்ளே நுழைந்தார். தன் மூட்டையை அவிழ்த்துப் பல சாமான்களை ஒவ்வொன்

ளாக எடுத்துக் கீழே வைத்தார். தான் முன்பு வறுமை காரணமாக அடகுவைத்த சாமான்களெல்லாம் திரும்பவும் தன்னிடம் வந்துவிட்டதுபற்றிக் கோகிலம் அளவிலா ஆனந்தமடைந்தாள். தனக்கும் தெரியாமல் ஆனந்த பாஷ்பத்தைச் சொரிந்தாள்.

அப்போது அந்த குமாஸ்தா, 'அம்மா! யாரோ ஒரு பெரிய மனிதர் எங்கள் கடைக்கு வந்து இந்தச் சாமான்களையெல்லாம் மீட்டுக்கொண்டதுடன் இன்று மாலை ஐந்து மணிக்குமேல் ஆறு மணிக்குள் இவ்விடம் வருவதாகவும், நீங்கள் வேறு சௌகரியமான இடத்துக்குக் குடிபுகத் தயாராக இருக்கவேண்டுமென்று உங்களிடம் தெரிவிக்கும்படியும் கூறினார்,' என்று தெரிவித்தார். இதைக் கேட்டுக் கோகிலம் அதிக சந்தோஷமடைந்தாள். அச் சாமான்களையெல்லாம் கொண்டுவந்த அவருக்கு சொற்ப தொகையைச் சன்மானமாகக் கொடுக்கப்போனாள். இதற்கு அவர், அந்தப் பெரிய மனிதரே வேண்டிய அளவு சன்மானம் செய்திருப்பதாகவும் மீண்டும் இங்கு பெற்றுக்கொள்வது நியாயமல்லவென்றும் சொல்லிவிட்டுப் போனார்.

அவர் சென்றதும் கோகிலத்தின் தாய், 'குழந்தாய்! நமது வாழ்க்கையில் ஏதோ நல்ல மாறுதல் ஏற்படப்போகிறது. எல்லாம் இறைவன் கிருபை' என்று சொல்லும்போதே சந்தோஷ மிகுதியால் களைப்படைந்தாள். உடனே கோகிலமும் தன் தாய் படுக்கையில் சாய்ந்துவிடாதபடி அவளைப் பிடித்துக்கொண்டு, 'அம்மா! நீ கூறியபடியே நமது வாழ்க்கையில் ஏதோ மாறுதல் ஏற்படப்போகிறது. உன் சாமான்களெல்லாம் வந்துவிட்டன. இனி நீ நல்ல ஆடை ஆபரணங்களை அணிந்துகொண்டு சௌகரியமாக வெளியில் செல்லலாமல்லவா?' என்று கேட்டாள். அப்போது அம்

மாது தன் மகளையும் மகனையும் மார்புடன் தழுவிக்கொண்டு, ‘என தன்புள்ள குழந்தாய்! நான் சொல்வதை நம்பு. இவ்வளவு சௌகரியங்களையும் பெற்றதில் உனக்காகவே நான் சந்தோஷப்படுகிறேன். அன்புள்ள கண்மணி! இதையெல்லாம் கேட்டதும் நான் தேகவலிமையிலும் உற்சாக உணர்ச்சியிலும் மிக்க இளமையானவளைப் போலவே கருதுகிறேன்.

இவர்கள் அவ்வாறு பேசி முடிப்பதற்குள் மற்றும் ஒரு மணிநேரம் கழிந்துவிட்டது. தாயும் மகளும் சிறிது உற்சாகத்துடனேயே இருந்தார்கள். எல்லாரும் புதிய ஆடைகளை அணிந்துகொண்டு திருப்தியாக இருந்தார்கள். கோகிலம் முன்னாள் இரவு நாடகக் கொட்டகையில் இருந்ததைப் போல் கவலையுடன் இருக்கவில்லை. அவளது வெளுத்த கன்னங்கள் சிறிது இரத்தத்தைப் பெற்றதுபோல் சிவப்பு நிறத்தையடைந்தன. அவளுடைய முகத்தில் சிறிது ஒளி வீசிற்று, கண்கள் பிரகாசித்தன. பொதுவாக அவளுடைய புதிய உடை அவளுக்கு அதிகமான அழகையே தந்ததென்பதில் சந்தேகமில்லை. அதைக்கண்டு அவளுடைய தாயும் சந்தோஷமடைந்தாள்.

அப்போது சங்கரன் என்னும் அப் பையன், ‘சகோதரியே! நீ இப்போது பார்வைக்கு நன்றாய் இருக்கிறாயே-இந்தப் புதிய ஆடைகள் உனக்கு அழகைத் தந்திருக்கின்றன. நீயும் நமது தாயாரும் இந்த உடைகளைப் பெற்றதில் எனக்குச் சந்தோஷமாகவே இருக்கிறது’ என்று தெரிவித்தான். உண்மையிலேயே அச் சிறு குடும்பத்தைச் சேர்ந்த அம்மூவரும் அச்சமயத்தில் துயரமென்பதை மறந்து சந்தோஷத்துடனும் திருப்தியுடனும் இருந்தார்கள். கோகிலமும் தன்னை வாட்டிவந்த பல கவலைகளையும் மறந்து இனி இன்பமாக வாழ்க்கையை அனுபவிக்கக்கூடிய நற்காலம் பிறக்கப்போகிற

தென்னும் நம்பிக்கையைக்கொண்டு மனத் திருப்தியுடன் இருந்தாள். அப்போது சுமார் மணி மூன்று இருக்கும். அவர்கள் அடகுவைத்த சாமான்களில் விலையுயர்ந்த கடிகாரமும் ஒன்று. அந்தப் பெரியவர் எல்லாச் சாமான்களையும் மீட்டுக் கொடுத்ததால் அக் கடிகாரமும் மீட்கப்பட்டிருந்தது. அது கிடைத்ததும் கோகிலம் சரியான மணியில் திருப்பிச் சாவி கொடுத்திருந்ததால் அதைப் பார்த்து அப்போது மூன்று மணி என்று தெரிந்துகொண்டாள்.

அச்சமயம் கோகிலம் திடீரென்று எதையோ ஞாபகப் படுத்திக்கொண்டவள்போல், 'ஓ, நான் இன்று மாலை மூன்று மணிக்கு நாடக மேடைக்கு வருவதாக என் எஜமானரிடம் வாக்களித்திருந்தேன். இப்போது மணியாய்விட்டதே. என்ன செய்வது?' என்று சொன்னாள். அப்போது அவளுடைய தாய், 'அம்மா! நமது வீட்டுக்கு இப்போது வரப் போகும் அப்பெரியார் நீ இனியும் நாடகமேடைக்குச் செல்வது விரும்பவில்லையென்றால் நீ இப்போது உன் வாக்கின்படி போகாததற்காகக் கவலைப்படவேண்டியதில்லை' என்றாள். அதற்கு அவள், 'அது சரிதான். எனக்கு இவ்வளவு உபகாரம்செய்த அந்தப் பரோபகாரியான ராஜலட்சுமிக்கு வந்தனக் கடிதத்தையாவது அனுப்பவேண்டாமா? ஒருவர் செய்த உதவியை மறப்பது மகா பெரிய பாவமாயிற்றே. ஆகவே சொற்ப நேரத்தையும் வீணாக்காமல் உடனே அக் கடிதத்தை எழுதுகிறேன்' என்றாள். அதைக்கேட்ட தாய், 'குழந்தாய்! உனக்கு ராஜலட்சுமி இருக்கிற வீடு தெரியாதே. நீ எப்படி இக்கடிதம் அனுப்ப முடியும்' என்று கேட்கவும், அவள் எதிர்பாராமல் ஏமாற்றமடைந்தவள்போல், 'ஆம், தெரியாதுதான். என் செய்வது? ஆயினும் எங்கள் நிலைமையை இக் கனவானுக்குத் தெரியப்படுத்தி எங்களுக்கு உதவி

செய்யும்படி தூண்டிய அப் பெருந்தன்மை மிக்க மாதரசியை நான் எப்படி பாராட்டாமலிருக்க முடியும்? என் மனப்பூர்த்தியான வந்தனத்தை அவளுக்குத் தெரிவிப்பதில் நான் எவ்வளவு சந்தோஷமடைவேன் தெரியுமா ?' என்றாள்.

அதற்குத் தாய், 'அப்படியே செய். உன் இஷ்டப்படியே கடிதம் எழுதி வை. இப்போது வரப்போகும் கனவானிடத்தில் கொடுத்தால் அவர் அதைக் கொண்டுபோய்ச் சேர்த்துவிடுவார்' என்று கூறியதும் கோகிலம், 'இல்லை, இல்லை. நான் வேறு உபாயம் செய்திருக்கிறேன். இப்போது உடனே அக் கடிதத்தை எழுதிக்கொண்டு நாடக மேடைக்குச் செல்கிறேன். அங்கே ராஜலட்சுமியும் வந்திருப்பாள். அவளிடம் இக்கடிதத்தைச் சேர்ப்பித்துவிடுகிறேன். இதனால் எனது எஜமானருக்கும் திருப்திபடுத்தலாம். வீணாக அவர் மனதுக்குக் கஷ்டம் வரும்படி ஏன் நடந்துகொள்ளவேண்டும்' என்று சொன்னாள். அதைக் கேட்டதும் அவளுடைய தாய்க்குச் சிறிதும் விருப்பமில்லை. ஏதோ வறுமை பொறுக்கமுடியாமல் அங்குச் சென்றுவது ஏதேனும் சம்பாதிக்கட்டும் என்று பொறுத்திருந்தாள். மீண்டும் அவள் அங்குச் செல்வதில் தாய்க்குக் கஷ்டம் ஏற்பட்டுவிட்டது. அதனால் அவளது முகத்திலேயே ஒருவித விசாரக் குறி தோன்றலாயிற்று.

ஆயினும் கோகிலம் அதைக் கவனியாதவள்போல் இருந்து தான் நினைத்தபடியே கடிதம் எழுதலானாள். அக் கடிதத்தில் அவள் மனமாரத் தன் நன்றியைத் தெரிவித்திருக்தாள். அதில் மிகைப்பட்டதாகவோ, உண்மைக்கு மாறானதாகவோ ஒன்றும் இருக்கவில்லை. தன் மனதில் தோன்றியதை மறைக்காமல் எழுதினாள்: பிறகு அவள், மீட்கப்பட்ட உடையில் சிறந்த சிலவற்றை அணிந்துகொண்டு நாடக

மேடைக்குச் செல்லப் புறப்பட்டாள். அப்போது அவள் தன் தாய்க்கும் சகோதரனுக்கும் முத்தம் கொடுத்தாள். அவள் புறப்படவேண்டிய சமயத்தில் அவளது தாய் அவளைப் பார்த்து, 'குழந்தாய்! சங்கரனையும் உன்னுடன் அழைத்துக்கொண்டு போகலாகாதா?' என்று சந்தோஷத்துடன் கேட்டாள். தங்களுடைய நிலைமை சிறிது சிர்ப்பட்டதாலும், கோகிலமும் விரைவில் மிகக் கேவலமான நாடகத் தொழிலை விட்டுவிடக்கூடிய காலம் வந்துவிட்டதாலும், பையனும் நல்ல உடையில் தெம்பாக விளங்கியதாலும் அம்மாதுக்குச் சந்தோஷம் அதிகரித்திருந்தது.

கோகிலமும் முதலில் மிகத் திருப்தியுடன் அப்படியே அழைத்துச் செல்வதாக ஒப்புக்கொண்டாள். ஆனால் மறு நிமிஷமே வேறு எதையோ நினைத்துக் கொண்டவள்போல், 'இல்லை. அழைத்துச் செல்ல முடியாததற்காக வருந்துகிறேன். நான் இன்று நாடகக்கம்பெனி முதலாளியுடன் சில விஷயங்களைப் பேசவேண்டியிருக்கிறது. மேடையில் திரைக்குப் பின் யாரையும் அழைத்துக்கொண்டு செல்ல முடியாது. இதனால் சங்கரன் கஷ்டப்பட மாட்டானென்று நான் நினைக்கிறேன். நான் மிக விரைவில் வந்து விடுகிறேன் பிறகு நாம் அனைவரும் சேர்ந்து வேறு சௌகரியமான இடத்துக்குச் செல்லலாம்' என்று கூறினாள். பிறகு கோகிலம் மீண்டுமொருமுறை தன் தாய்க்கும் சகோதரனுக்கும் ஒரு முத்தம் கொடுத்துவிட்டு அங்கிருந்து புறப்பட்டாள். அவள் மாடியைவிட்டுக் கீழே இறங்கியபோது வீட்டுக்காரி, அவளுடன் பேசி எப்படியாவது அவ்வீட்டுக்கு வந்த அப்பெரியவர் யார் என்று தெரிந்துகொள்ள வேண்டுமென்று விரும்பினாள். ஆனால் அம்மாதுடன் பேசுவதற்குக் கோகிலத்துக்குச் சாவகாசமில்லை யாதலால் அவள் மரியாதையாகத் தன் சந்தர்ப்பத்தை தெரிவித்து விட்டுப் போய் விட்டாள்.

கோகிலம் வெளியே சென்றதும் அவளுடைய தாயும் சகோதரனும் மட்டும் தனியாக அவ்வறையில் இருந்தார்கள். அப்போது தாயின் மனத்தில் மீண்டும் பலவிதமான யோசனைகள் தோன்றலாயின. திடீரென்று தோன்றிய சந்தோஷமெல்லாம் மறைந்து விசனத்துள் மூழ்கலானாள். தன் குமாரி நல்ல உடையுடன் நாடகமேடைக்குப் புறப்பட்டதால் அவளுக்கு வேண்டிய பல இளைஞர்கள் அவளைக்கண்டு களிக்கும் பொருட்டே அவ்வாறு செல்கிறாளோ என்று மீண்டும் சந்தேகிக்கலானாள். கோகிலம் ஒழுக்கத்திற் சிறந்த உத்தமியாக இருந்தும், அவளது தாயாரும் முன்பு ஒருமுறை இவ்வாறு சந்தேகித்து விட்டுப் பிறகு தன் குற்றத்தை உணர்ந்து வருந்தியிருந்தும் மறுபடியும் சந்தேகித்தது பெரிய தவறேயாகும். பாவம்! கோகிலம் அன்று காலை புதிய சாமான்களை வாங்கப் போனபோதும் தன் தாய்க்கும் சகோதரனுக்கும் மட்டும் வாங்கினாளேயொழியத் தனக்காக எதையும் வாங்கவில்லை. தன்னை அலங்கரித்துக்கொண்டு பிற ஆடவர்களை மயக்க வேண்டுமென்னும் ஆசை இருந்தால் அவள் தன் கைக்குப் பணம் கிடைத்ததும் தனக்கு வேண்டிய ஆடை ஆபரணங்களையே முதலில் வாங்கியிருக்க மாட்டாளா? கோகிலத்தின் தயார் அநாவசியமாகத் தன் குமாரியின் மீது சந்தேகப்படும் அவ்வளவு கொடியவளல்ல. ஆயினும் என் செய்வது? அவள் தன் சிந்தனையை அடக்கிக் கொள்ளும் சக்தியற்றவளாய் விட்டாள். நீண்ட காலத்திய நோய் ஒருபுறம், மனோவியாகூலம் மற்றொருபுறம், தாங்க முடியாத வறுமை வேறொரு புறம். இவ்வாறு அவள் அவஸ்தைப்பட்டதால் தன் சிந்தனையை அடக்கிக் கொள்ளவும் சக்தியில்லாதவளாய்ப் போனாள்.

இவ்வாறு சிந்தனையிலேயே ஒருமணி நேரம் கழிந்து

விட்டது. அப்போது அம்மாது, 'சரி, ஒரு மணி நேரமாகி விட்டது. நமது குமாரி திரும்பி வரவேண்டிய சமயம்' என்று சொன்னாள். ஆனால் வரவில்லை. மற்றும் அரை மணி நேரம் கழிந்தது. அப்போதும் வரக்காணோம். தன் கையிலிருந்து கடிகாரத்தில் மணியைக் கவனித்துக்கொண்டு வந்தாள். அந்தக் கடிகாரமும் அடகு வைக்கப்பட்டிருந்து அன்றுதான் மீட்கப்பட்டிருந்தது. அதே கடிகாரம் அம் மாதுக்கு ஒரு சமயத்தில் சந்தோஷத்தையும், மற்றொரு சமயத்தில் துக்கத்தையும் கொடுத்தது. மீட்டுக்கொண்டு வந்ததும் அதைக்கண்டு அம்மாது அதிக சந்தோஷமடைந்தாள். ஆனால் இப்போது கோகிலம் சொன்னபடி குறித்த வேளையில் நாடகக் கொட்டகையி னின்றும் திரும்பி வாராததால் அப்பெண்ணின் மீது அவளுக்கு மீண்டும் சந்தேகம் அதிகரித்து விடவே, 'இந்தப் பாழும் கடிகாரம் நமக்கேன்? இதுபோன்ற சாமான்களை வைத்துக் கொள்வதற்காகத்தானே எனது அருமைக் குமாரி தனது விலையிலா மாணிக்கமாகிய கற்பையும் விற்க வேண்டியதாயிருக்கிறது?' என்று நினைத்து வருந்தினாள். இதனால் உலகமக்களாகிய நாம் ஒரு படிப்பினையை அறிந்து கொள்கிறோம். அதாவது எப்படிப்பட்டவர்களுக்கும் அவர்களுடைய சந்தோஷமே ஒரு காலத்தில் துக்கமாகவும், துக்கமே ஒரு காலத்தில் சந்தோஷமாகவும் தோன்றுவது சகஜம் என்பதேயாம்.

மாலை மணி ஐந்தரை ஆகிவிட்டது. அப்போதும் கோகிலம் திரும்பி வரக்காணோம். அவள் வீட்டை விட்டுச் சென்று இரண்டு மணிநேரமாகிவிட்டதால் அம்மாதுக்குக் கவலையும் விசாரமும் அதிகரித்துவிட்டது. மனோவியாகூலம் அதிகப்படவே அவளது நோயும் அதிகரித்ததுபோல் தோன்

நிற்று. ஆனால் படுக்கையில் படுக்கவும் மனம் வரவில்லை. அருகிலிருந்த சங்கானுக்குத் தன் தாய் அடகு வைக்கப்பட்ட சாமான்களை யெல்லாம் மீட்டுக்கொண்டு புதிய ஆடைகளுடன் விளங்கும்போதும், இன்னும் சொற்ப நேரத்துக்குள் சௌகரியமான வேறு வாசஸ்தலத்துக்குச் செல்வதாக இருக்கும்போதும் அவள் கவலைப்படவேண்டிய அவசியமென்ன இருக்கப்போகிறது என அச் சிறுவன் நினைத்துத் தன்மட்டும் அருகிலிருந்த புஸ்தகத்தில் காணப்பட்ட படங்களைக் கண்டு களித்த வண்ணமாக இருந்தான்.

அச்சமயத்தில் யாரோ ஒருவர் படிக்கட்டுகளின்மீது ஏறி அவ்வறையை நோக்கி வரும் சத்தம் கேட்டது. தன் மகள்தான் வருகிறாளோ என்று அம்மாது ஆவலுடன் எதிர் பார்த்தாள். ஆனால் சில நிமிஷங்களுக்குள், அன்று காலையில் அங்கு வந்துபோன பெரியார் அவர்கள் முன் தோன்றினார். அவர் அவ்வறையில் நுழைந்ததும், 'அம்மா, நீ உற்சாகத்துடனும் புதிய ஆடைகளுடனும் வீற்றிருப்பதைக் காண நான் சந்தோஷப்படுகிறேன். அடா! தம்பீ! நீ இங்கு இப்படங்களைப் பார்த்துக்கொண்டிருப்பதைக் காண நான் ஆனந்தமடைகிறேன். உன் சகோதரி எங்கே?' என்று இருவருடனும் பேசினார். உடனே அம்மாது, 'ஐயா! தனக்கு உதவிய ராஜலட்சுமிக்கு வந்தனம் செலுத்திவிட்டு வரும்பொருட்டு அவள் சிறிது நேரத்துக்குமுன் நாடகக் கொட்டகைக்குச் சென்றாள்' என்று பதில் கூறியதும் அப் பெரியவர், 'ராஜலட்சுமிக்கு வந்தனம் கூற வேண்டியது அவசியம்தான். ஆனால் அக் கடிதத்தை என்னிடம் கொடுத்திருக்கக்கூடாதா?' என்று கேட்டார்.

அதற்கு அம்மாது, தானும் அவ்வாறே யோசனை கூறியதாகவும், ஆனால் கோகிலம் தானே நேரில்போய் வரவேண்டு

மெனச் சொல்லிப் போனதாகவும், அவள் போய் இரண்டு மணி நேரத்துக்கு மேலாகிவிட்டதால் உடனே திரும்பி விடுவாளென்றும், அவர் உதவி செய்ய முன் வந்ததற்காக மீண்டும் மீண்டும் வந்தனம் செலுத்துவதாகவும் கூறினாள். அப்போது அப்பெரியவர், தனக்கு வந்தனம் எதுவும் தேவையில்லை யென்று கூறிவிட்டு சங்கரன் என்னும் அச்சிறுவனை யழைத்து, 'தம்பீ! உன் சகோதரி வருகிறவரையில் நாம் இருவருமாகச் சேர்ந்து அப் புஸ்தகத்திலுள்ள படங்களைப் பார்த்துக் கொண்டிருப்போம், வா' என்று கூறினார். அவர்கள் அவ்வாறு பார்க்க ஆரம்பித்து அரைமணி நேரம் கழிந்தது. அப்போதும் அப் பெண் வாராமையால் தாய்க்குக் கவலையும் ஆத்திரமும் அதிகரித்தது. அப் பெரியவரும் பொறுமை இழந்தவராய் 'இன்னும் வரவில்லையே, இன்னும் வரவில்லையே' என்று பலமுறை சொன்னார். இவ்வாறே மணி ஏழாய்விட்டது. அதுவரை தன் துக்கத்தை மறைத்துக்கொள்ள முயற்சித்துக் தன் கண்களினின்றும் நீர் வடிவது யாருக்கும் தெரியலாகாதென அடிக்கடி வேறு பக்கமாகத் திரும்பி முகத்தைத் துடைத்துக் கொண்டிருந்த அம்மாது திடீரென்று அப்போது அழத் தொடங்கிவிட்டாள். அத்துடன் நிற்காமல் தன் மனத்திலுள்ள விசாரத்தையும் வெளியில் தெரிவித்துவிட்டாள்.

அப்போது அப்பெரியவர் அம்மாதைத் தேற்ற முடியாதவராய்த் தானே நேரில் நாடகக்கொட்டகைக்குச் சென்று உண்மையான விஷயத்தை அறிந்து வருவதாகச் சொல்லி அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டார். அவர் வெளியே போனதும் அம்மாதுக்குத் துக்கமும் அதனால் தலைவலி முதலிய நோயும் அதிகரித்து விட்டதால் அவள் படுக்கையில் சாய்ந்தாள். அப்போதுதான் சங்கரனுக்கும் விஷயம் தெரிந்

தது. தன் தாய்க்கு மீண்டும் ஏதோ துக்க சம்பவம் ஏற்பட்டிருக்கிறதென்று நினைத்தான். பெரியவர் போய் அரை மணி நேரத்துக்குள் திரும்பி வந்தார். அவர் முகத்தில் சந்தோஷக் குறி காணப்படவில்லை. அம்மாதும் திருப்திகரமான பதில் இல்லையெனத் தெரிந்துகொண்டு விசனப்பட்டாள். உடனே அவரும் 'அம்மா! உன் குமாரி சுமார் நான்கு மணிக்கு நாடகக்கொட்டகைக்குச் சென்று தன்னிடமிருந்த கடிதத்தை அக்கம்பெனியின் தலைவரிடம் கொடுத்து விட்டு அங்கிருந்து புறப்பட்டு விட்டாளாம். அவள் கொட்டகையிலிருந்து வெளியே வந்ததும் அவளுடன் யாரோ ஒரு ஆடவர் சேர்ந்து கொண்டதாகவும், இருவருமாகப் போனதாகவும் தெரிகிறது. ஆனால் அவர் பெயர் எனக்குத் தெரியவில்லை' என்று சொன்னார்.

இதைக்கேட்டதும் அம்மாது ஓவென்று வாய்விட்டலறிக் கீழே மூர்ச்சையாக விழுந்தாள். அம்மாது மயக்க முற்றதும் பெரியவர் அவள் முகத்தின் மீது தண்ணீர் தெளித்தார். சங்கரனை கீழ்க்கட்டிலிருந்த அவ்வீட்டுக்காரியை அழைக்கச் சென்றான். இதற்குள் அம்மாது மயக்கம் தெளிந்து எழுந்தாள். ஆனால் அவள் அபாயகரமான ஜுரத்துடன் காணப்பட்டாள். ஆகையால் உடனே ஒரு டாக்டரை அழைத்து வரும்படி ஆளை அனுப்பினார்கள். அந்த டாக்டர் அங்கு வந்து அப்போதுள்ள நிலைமையில் அம்மாதை அங்கிருந்து அப்புறப்படுத்தலாகாது என்று கூறி விட்டார். ஆதலால் அம்மாதை அன்றே வேறு இடத்துக்கு அழைத்துச் செல்வதென்னும் யோசனை கைவிடப்பட்டது. அப்பெரியவரும் கோகிலம் திரும்பி வருவாளென்னும் எண்ணத்துடன் இரவு ஒன்பது மணி வரையில் அங்கேயே காத்திருந்தார். ஆயினும் அப்பெண்மணி வரக்காணோம். கோகிலம் ஏதோ

ஒரு புருஷனுடன் ஓடிப்போ யிருக்கவேண்டும் என்று முடிவு செய்து அம்மாது கவலை யென்னும் பெரிய சமுத்திரத்தில் மூழ்கலானாள். அப்போது அம்மாது, 'நான் என் அருமைக் குமாரியின் மீது சந்தேகப்பட்டேன். அவளைக் கண்டித்தேன். அதனால் அவளது மனம் புண்பட்டு விட்டது. அதனாலேயே அவள் வருத்தப்பட்டுக் கொண்டு போய்விட்டாள் போலும்! தன் மீது அநாவசியமாகச் சந்தேகங்கொண்ட தாயுடன் இருக்க அவளுக்கு மனம் வரவில்லை. தனக்கு எவ்வித நன்மையையும் அளியாத அக்கறைபை வைத்துக்கொண்டு என்ன செய்வது என்று அவள் கருதி விட்டாள் போலிருக்கிறது. ஆகவே மனக் குழப்பத்தால் தான் செய்வது இன்னதென்றே தெரியாமல் தவறான செய்கையில் இறங்கி விட்டாளென்றே நினைக்கவேண்டி யிருக்கிறது' என்று மெதுவாகச் சொல்லிக் கொண்டாள்.

அவள் கூறியதன் கருத்தை யறியாத அப்பெரியவர் விவரத்தை விசாரிக்க அம்மாதும் அன்று விடியற்காலை தன் குமாரி, ராஜலட்சுமியினிடமிருந்து சில பவுன்களைக் கொண்டு வந்தபோது நடந்த வாக்குவாதங்களைப் பற்றித் தெரிவித்தாள். அதற்கு அவர், 'அம்மணி! கவலைப்படாதே. பொறுமையுடன் இரு. உன் குமாரி அறிவும் நிதான புத்தியு முடையவள். ஆத்திரப்பட்டு ஒரு காரியத்தையும் செய்துவிட மாட்டாள். நான் இனி உங்கள் குடும்பத்துக்கு உதவி செய்வதினின்றும் தவறிவிட மாட்டேன். நான் நாளை காலை மறுபடியும் இங்கே வருகிறேன். இதற்குள் கோகிலம் வந்துவிட்டால் உடனே எனக்குத் தகவல் சொல்லி யனுப்புங்கள். இதோ என் விலாசம் இருக்கிறது' என்று கூறிக்கொண்டே தன் விலாசத்தைக் கொடுத்தார். பிறகு அவர் சங்கரனுக்கு ஒரு முத்தம் கொடுத்துவிட்டு அவ்விடத்தை விட்டுப் புறப்

பட்டார். அவர் போகும்போது வீட்டுக்கார மாதினிடம் சொற்ப தொகையைக் கொடுத்துவிட்டுக் கோகிலத்தின் தாய், சகோதரன் ஆகியவர்களுக்கு வேண்டிய சௌகரியங்களைக் கவனிக்கும்படி சொல்லிவிட்டுப் போனார்.

ஆனல், யார் செய்த பாவமோ தெரியவில்லை. அக்குடும்பத்தில் மறுபடியும் துக்கம் என்னும் சனியன் புகுந்து கொண்டது. இம்முறை வறுமை காரணமாகத் துக்கம் ஏற்படவில்லை. ஆனல் அக்குடும்பத்துக்கே ஒரு பெரிய அரண்போலிருந்த கோகிலம் காணமற் போனதே துக்கத்துக்குக் காரணமாய் இருந்தது. அந்த ஏழைக் குடும்பத்துக்கு உதவி செய்ய முன் வந்த அப்பெரியவர் மூலக் கொத்தளத்தில் வசித்து வந்த செல்வநாதர் என்று அவர் கொடுத்துவிட்டுப்போன அவரது விலாசத்தால் தெரிய வந்தது.

24-வது அத்தியாயம்

—:o:—

ஆசிரியரும் மாணவியும்

நாம் இதற்கு முன் சிற்சில இடங்களில் மோகனதாஸ் என்பவனைப்பற்றிப் பிரஸ்தாபித் திருப்பது நேயர்கள் நினைவி லிருக்கலாம். அவனைப்பற்றிச் சிறிது விஸ்தாரமாகக் கூற விரும்புகிறோம். அவன் சுமார் இருபது வயதுடைய வாலிபன். அவனது கூந்தல் கருமையாக நாகப்பழம்போல் இருந்தது. சிறிய மீசையை யுடையவனயிருந்தான். அவனது மீசை சிறியதாக இருந்த தென்றாலும் அதனல் அவன் முகத்தில் ஆண்மை அதிகமாகப் பிரகாசித்தது. அவனுடை யமைக்கண்கள் சூரியனைப்போல் ஜ்வலித்தன, அவன் உயரமான தோற்றமுடையவனயும், அழகிய

ரூபலாவண்யத்தை யுடையவனாயு மிருந்தான். அவனைப் பார்க்கும் போதெல்லாம் அவன் புன் சிரிப்புடன் இருப்பது போலத் தோன்றும். அவன் சிரிப்பதைக் காணும்போதே அவன் தாராள நோக்க முடையவனாகவும், நற்குண முடைய வனாகவும் இருக்கிறான் என்பதை அறியலாம்.

அவன் எப்போதும் பெரிய மனிதர்களுக்குரிய உடைகளையே அணிவான். அதிக விலை யுயர்ந்த ஆடைகளை ஆடம்பரமாகவோ அல்லது மிக்க கேவலமான உடைகளையோ எக்காலும் அணிய மாட்டான். எனினும் அவனைக்காண்போர் எவரும், அவன் உயரியதும் செல்வத்தை மிகுதியாக யுடையதுமான குடும்பத்தைச் சேர்ந்தவனே என்று நினைப்பார்கள். ஆனால் அவன் அப்படி யல்லவென்பதும், அவன் பலருக்கும் சித்திரம், சங்கீதம் முதலிய இனிய கலைகளைக் கற்றுக் கொடுத்து அதனால் கிடைக்கும் வருவாயிலேயே தன் ஜீவனத்தை நடத்தி வந்தா னென்பதும் நேயர்களுக்குத் தெரிந்த விஷயம்.

ஒருநாள் பகல் மோகனதாஸ், சந்திரசேகரம் பிரபுவின் சித்தியான மதனவல்லிச் சீமாட்டியின் மாளிகைக்குச் சென்று அம்மாளிகையின் கதவைத் தட்டினான். ஒரு சேவகன் அக்கதவைத் திறந்தான். அச்சேவகனிட மிருந்து மோகனதாஸ் அம்மாளிகையில் ஷண்பகவல்லி இருக்கிறாளா என விசாரித்து அறிந்து கொண்டான். அவள் மாளிகையில் இருந்ததால் அச்சேவகன் அவனை மாடிக்கு அழைத்துச் சென்று ஷண்பகவல்லி தனியாக உட்கார்ந்திருந்த ஒரு அறையில் விட்டான். உடனே அவள் மிக மரியாதையாக எழுந்து தன் ஆசிரியனை முறைப்படி வரவேற்றாள். பின்னர் அவர்களிருவருக்கும் பின்வருமாறு சம்பாஷணை நடைபெற்றது:—

ஷண்ப:—ஐயா! நான் இன்னும் என் சித்திரத்தை

முடிக்கவில்லை. நீங்கள் அன்று வந்து போன பிறகு நான் அதிகமாகச் சித்திரத்தை எழுத முடியவில்லை. இன்றுதான் சிறிது அதிகமாக எழுதவேண்டும்.

மோகன:—நான் முந்தாநாள் வந்து போனபிறகு நீ அதைத் தொடவேயில்லை யென்று தெரிகிறது. இன்றைய தினம் ஒருமணி நேரமாவது என்னுடன் இருந்தால் ஏதேனும் அதிகமாக அவ்வேலையைச் செய்து முடிக்கலாம்.

ஷண்ப:—அதைச் சீக்கிரத்தில் முடிக்கவேண்டும். எனது சித்தியும் அதை யாரோ தனது நண்பருக்குப் பரிசு அளிக்க வேண்டுமென்று விரும்புகிறார். ஒருமணி நேரமல்ல. இரண்டு மணி நேரமாயினும் தங்களுடன் இருந்து விடுகிறேன். எப்படியாவது அவ்வேலை முடிந்தால் போதும். இரண்டு மணி நேரம் இங்கு இருப்பதால் தங்களுக்கு ஏதேனும் அசௌகரியம் ஏற்படுமோ?

மோகன:—எனக்கென்ன அசௌகரியம். நான் வேறு எங்கேயாவது போகவேண்டி யிருந்தாலும் அதையும் உனக்காக நிறுத்திக்கொண்டு விடுகிறேன்.

இவ்வார்த்தைகளைக் கேட்டதும் ஷண்பகவல்லியின் முகத்தில் ஒருவிதமான நாணக்குறி தோன்றியது. ஏனெனின் அவன் மேற்படி வார்த்தைகளைச் சொன்ன போதே அவன் உள்ளத்தில் தோன்றிய அன்பு அவளுடைய ஆன்மாவைத் தாக்கிற்று. அவன் அவளை நேசிக்கிறான் என்பதையும் அவள் அறிவாள். மோகனதாஸ் ஷண்பகவல்லியை நேசிப்தில் சிற்சில சமயங்களில் அவனுக்குத் தெரியாமலே வெளியாகும் சில உதாரணங்களில் இதுவும் ஒன்று.

மோகனதாஸ் தன்னை நேசிக்கிறான் என்பதைக் கள்ளங் கபடமற்ற அவள் எப்படித் தெரிந்து கொண்டாள். அவன் எப்

போதாவது தன் ஆசையை வெளிப்படுத்தினுனே? இல்லவே இல்லை. அத்தகைய வார்த்தைகளைப் பேச அவனுக்குத் தைரியம் உண்டானதுமில்லை. அவளும் அப்படிப்பட்ட தைரியத்தைத் தூண்டியதுமில்லை. ஆனல் உண்மையாகக் காதலிக்கும் இருவர் பகிரங்கமாகப் பேசவேண்டிய அவசியமில்லை. 'கண்ணெடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச் சொற்கள் என்ன பயனுமில' என்பதுபோல் அவர்களுடைய கண்கள் பரஸ்பரம் சந்தித்து உறவாடும்போது எல்லா விஷயங்களையும் பேசிக்கொண்டு விடுகின்றன. ஆதலின் வெளியிலிருந்து பார்ப்பவர்களுக்கு எவ்வித பேச்சு வார்த்தையும் இல்லாதவர்களைப் போலக் காணப்பட்டாலும் அவர்களுக்குள் உண்மையான அன்பும் விசுவாசமும் பெருகிக் கொண்டே இருக்கும். காதலனும் காதலியும் பரஸ்பரம் சந்திக்கும்போது பெருமூச்சு விடுவார்கள்; கனைப்பார்கள். அவர்களுடைய முகத்தில் ஒருவித சந்தோஷக் குறி தோன்றும். அது மட்டுமல்ல இயற்கையிலேயே பரஸ்பரம் காதலால் கண்டுண்ட இவருடைய நேசத்தையும் பற்பல விதங்களாலும் பெருகச் செய்ய வேண்டியது மறை பொருளாக இருந்து நற்காரியத்தைக் கூட்டுவிக்கும் இறைவனது கடமையல்லவா?

நாம் மேலே கூறிய காதல் சம்பந்தமான விஷயங்களை அறிந்தவர்கள் மோகனதாஸ் ஷண்பகவல்லியை நேசிப்பதை அவள் அறிந்து கொண்டதில் ஆச்சர்யமொன்று மில்லையென்று அறியலாம். மோகனதாஸ் கூறிய சொற்களைக் கேட்டதும் ஷண்பகவல்லியின் முகத்தில் வெட்கக்குறி தோன்றியதாலும், அவள் வெட்கத்தால் தலைகுனிந்து கொண்டபடியாலும் அவன் அதைத் தெரிந்துகொண்டு அவள் என்ன நினைப்பாளோ எனக்கருதி அவளிடம் மன்னிப்புக் கேட்டுக்கொள்

ளும் எண்ணத்துடன், 'அம்மணி! நீ என்னை மன்னிக்க வேண்டும். நான் ஏதோ தவறுதலாகப் பேசி விட்டேன்போ லிருக்கிறது. ஆயினும் நான் மரியாதைக் குறைவாக எதை யும் பேசிவிடவில்லை யென்பதை நீயே அறிந்திருக்கலாம்' என்று கூறினன். அப்போது அவள், 'இல்லை, இல்லை. நீங் கள் மரியாதைக் குறைவாக ஒன்றும் பேசிவிடவில்லை. அப் படிப் பேசவும் உங்களுக்குத் தெரியாதே' என்று கூறிக் கொண்டே தனது தலையைச் சிறிது உயர்த்திக்கொண்டு மோகனதாஸின் முகத்தை நோக்கினள். அதைக்கண்ட அவன், 'நான் தவறுதலாக நடந்துகொள்ள மாட்டேனென்று நீ நிச்சயமாகத் தெரிந்து கொண்டிருப்பதற்காக மிக்க சந் தோஷம். நான் கூறியது என்னவென்றால், நான் எப்போ தும் உனக்கு வேண்டிய வேலைகளைச் செய்யச் சித்தமாக இருக்கிறேன். அப்படிச் செய்யவேண்டிய காலத்தில் வேறேதேனும் வேலை நேர்ந்தாலும் அதையும் ஒத்திவைப் பேன் என்பதே' என்று விளக்கமாகத் தெரிவித்தான்.

இதைக்கேட்ட பிறகு ஷண்பகவல்லி, தன் சித்திரத்தை எழுதத் தொடங்கினள். ஆனல் அவள் எவ்வளவு சமாளித் தும் முடியாமல் கை நடுங்கியதால் சித்திரம் எடுக்கும் போதே கெட்டுப் போயிற்று. அதைக்கண்ட மோகனதாஸ், 'ஆஹா! உன் சித்திரத்தை நீ கெடுத்து விட்டாயே. நீ தீட்டிய வர் ணத்தை ஒழுங்காக எடுத்துவிட வேண்டும். ஆதலால் அந் தப் பிரஷை இப்படிக்கொடு' என்று கேட்டான். ஆனல் அதை அவளது கையிலிருந்து வாங்கிக்கொள்ள வேண்டு மென்னும் ஆவலுடன் அவன் கையை நீட்டியதாலும், அவ ளும் அதைக் கொடுக்கக் கையை நீட்டியதாலும் இருவ ருடைய கைகளும் ஒன்றோடொன்று முட்டிக்கொண்டதால் ஷண்பகவல்லியின் கையிலிருந்த பிரஷ் அந்த சித்திரத்தின்

மீது விழவே சித்திரம் முழுதும் பாழாயிற்று. உடனே மோகனதாஸ், அக்குற்றம் முழுதும் தன்னுடையதே யெனக்கருதி, 'நான் ஆத்திரப்பட்டு என் கையை நீட்டியதற்காக என்னை மன்னிக்கும்படி ஆயிரம் முறை கேட்டுக் கொள்கிறேன்' என்றான்.

உடனே ஷண்பகம், 'அது உங்களுடைய குற்ற மல்ல' எனக்கூறிக்கொண்டே தான் கோபித்துக் கொள்ளவில்லை என்பதற்கு அறிகுறியாக அவள் தனக்கும் தெரியாமலும் மெய் மறந்தும் தன் கரத்தை நீட்டினாள். உடனே மோகனதாஸும் அம்மெல்லிய கரத்தைத் தன் கையால் பிடித்து அழுத்தித் தன் பிடியிலேயே சொற்பநேரம் ஏந்திக்கொண்டான். அப்போது அவன் தேகம் முழுதும் புளகாங்கிதத்தால் நடுங்கியது. அந்த நிமிஷமே அவன் சுவர்க்க போகத்தை அனுபவிப்பதுபோல் கருதினான். பிறகு இருவருடைய ஆத்மாக்களுமே ஒன்றாக லயித்தன எனக் கூறுவது மிகையாகாது. இருவரும் தங்கள் செயல்களால் உண்மைக் காதலை வெளிப்படுத்தினர். மோகனதாஸ் காதல் என்னும் கள் உண்டவன்போல் களியாட்டங்களில் இறங்கலானான். ஆனால் காம விகாரமென்னும் பேய்க்கு அவன் இடம் தரவில்லை. உண்மையான, இனிய காதல் தெய்வத்துக்கே கட்டுப்பட்டவனாக இருந்தான். அவன் தன் கையிலிருந்த அவளது கரத்தை மெதுவாக உயர்த்தித் தன் வாயினிடம் கொண்டுபோய் அக்கரத்தின் மீது உண்மை அன்புடன் கூடிய ஒரு இனிய முத்தத்தைத் தந்தான்.

உடனே தன் குற்றத்தை உணர்ந்தவன்போல் அவன் அவள் முன் முழங்காலிட்டுப் பணிந்து, 'அம்மணி! என்னை மன்னிக்கவேண்டும். தயவு செய்து மன்னித்துவிடு' என்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டான். அந்தத் தடபுடலில் அவன்,

அவளுடைய காத்தையும் தன் கையிலிருந்து விட்டுவிட்டிருந்தான். ஆனால் அவள் மிக அவசரமாகத் தனக்கும் தெரியாமல் தன் காத்தை மீண்டும் அவனிடம் நீட்டிக் கொண்டே, 'ஐயா! எழுந்திருங்கள். ஐயோ பாவமே! இப்போது யாரேனும் இங்கே வந்துவிட்டால் என்ன நினைப்பார்கள்? ஆதலின் உடனே எழுந்திருங்கள். என்னை வேறொருவருக்குக் கலியாணம் செய்து கொடுக்க நிச்சயித்திருப்பதால் ஒரு ஆடவராக நீங்கள் இவ்வாறு பணிந்திருந்தால் ஏதேனும் நினைக்கமாட்டார்களா?' என்று வாய் குழறக் கூறிக் கொண்டே துக்கம் அதிகரித்ததால் வாய்விட்டலறி அழுதாள். தனக்குச் சிறிதும் சம்மதமில்லாத, தன் மனதில் சிறிதளவு அன்பும் உதிக்காத ஒருவனைத் தான் மணந்து கொள்ள வேண்டுமே யென்னும் நினைவுதான் அவள் அவ்வாறு அழுவதற்குக் காரணமாய் இருந்தது.

உடனே மோகனதாஸ் தான் முழங்காலிட்டுக் கிடந்த இடத்தினின்றும் எழுந்து ஷண்பகவல்லியின் பக்கத்திலிருந்த ஒரு ஆசனத்தில் அமர்ந்து, 'ஓ, நீ அழுகின்றாயே! எனக்குத் துக்கமாய் இருக்கிறது. இப்போது நீ கூறிய வார்த்தைகளிலிருந்து நான்கொண்ட நினைவுகளெல்லாம் கனவாகப் போய்விடும்போ லிருக்கிறதே! நம்பிக்கைக்கு ஏதேனும் வழியில்லையோ?' என்று துக்கத்துடனும் கவலையுடனும் கூறினான். அதற்கு அவள் அவனது முகத்தைப் பார்த்துக் கொண்டே, 'ஐயா மோகனதாஸரே! நான் துர்ப்பாக்கியசாலி! சிறிதும் சந்தோஷமே இல்லாதவள். தயவு செய்து என்னை விட்டுவிடுங்கள். என்னுடைய இந்த பலஹீனத்தை மறந்துவிடுங்கள்' என்று மேலும் மேலும் கூறினாள். அதற்கு அவன், துக்கத்துடனும், ஆத்திரத்துடனும், 'உன்னைவிட்டுப் பிரிந்து போகும்படியா கூறுகிறாய்? ஆகாயமே இடிந்து என்

தலைமீது விழுவதுபோன்ற சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கும் இவ் வேளையிலா நான் உன்னைவிட்டுப் பிரிவது?' என்றான். அப்போது அவள் தாங்க முடியாத துக்கத்துடன், 'நான் என் மனதிலுள்ளவைகளை யெல்லாம் உங்களிடம் சொல்லிவிட்டால்தான் என் மனமும் நிம்மதியடையும். ஆனால் அதைச் சொல்வதற்கு என் நா எழவில்லையே! ஆதலின் என்னைத் தயவுசெய்து விட்டுவிடுங்கள்' என்று அழுதுகொண்டே தெரிவித்தாள். அப்போது நொந்துபோன மனத்துடன் அவன், 'இப்போது உன்னைவிட்டுப் பிரிந்தால் நான் மீண்டும் உன்னை விரைவில் சந்திக்க முடியுமோ?' என்று ஆவலுடன் கேட்டான்.

அப்போது ஷண்பகவல்லி அவசரமாகத் தன் கண்ணீரை வழித்துப்போட்டுச் சிறிது துணிவுடன் இனி அவர்களிருவரும் எக்காலத்திலும் சந்திக்காமலிருப்பதே நலமெனக் கூறச் சென்ற சமயம், அவள் அவ்விளைஞனது முகத்தைக் கண்டதும் அவளுடைய துணிவெல்லாம் மாயமாய்ப் பறந்தோடியது. அந்த மோகனதாஸின் அழகைக் கண்டு அவள் பலமுறை மகிழ்ந்திருக்கிறாளென்றாலும் அப்போது பார்த்த போதுதான் அவளுக்கு அவனது அழகு என்றுங் காணாத காட்சியாய்க் காணப்பட்டது. ஆகவே அவன்பால் அவளுக்கு எல்லைகடந்த அன்பும் ஆர்வமும் அதிகரித்து விட்டதால் விசனமும் துக்கமும் அதிகரித்தது. ஆகவே அவள், 'அன்புள்ள ஐயா! நான் என்ன சொல்லவேண்டுமென்று நினைத்தேனோ அதைச் சொல்ல என்னால் முடிவதில்லை. அந்த விஷயமே என் சந்தோஷத்தைக் அடியுடன் ஒழிப்பதாக இருப்பதால் அதைச் சொல்லவும் என் நா எழமாட்டே னென்கிறது' என்று சொன்னாள்.

அதைக்கேட்ட மோகனதாஸனும், 'உன்னைப் போலவே

18570

காணும் எனது இன்பங்களையெல்லாம் இழந்துவிட்டதாகவே கருதவேண்டியவனுயிருக்கிறேன். இனி உன்னைப் பார்ப்பதில்லையென்றால் என் வாழ்க்கையின் இன்பமே அழிந்து போயிற்று என்றே கருதவேண்டும். என் நம்பிக்கைகளையெல்லாம் இழந்து துக்க சாகரத்தில் மூழ்கவேண்டியதாயிருக்கிறதே. இனி என் வாழ்க்கையே இருளடைந்ததாக முடிந்துவிடும் போலிருக்கிறது' என்று கூறினான். அவன் கூறியதைக்கேட்ட எவரும் அவனது நிலைமையைக் கண்டு வருத்தப்படுவார்களென்பதில் ஐயமில்லை. அப்படியிருக்க அவனிடம் பூரண காதல்கொண்ட ஷண்பகவல்லி வருத்தப்படுவதில் ஆச்சர்யமொன்றுமில்லை. தினகரம் பிரபுவுக்கே மணந்துகொள்வதென்னும் உறுதி கொண்டவளாக அவள் இருந்தபோதிலும் மோகனதாஸின் துக்கத்தைக் கண்டு அவள் தன் உறுதியை மாற்றிக்கொண்டிருப்பாளென்பதில் சந்தேகமில்லை. ஆனால் உண்மையிலேயே அவள் தினகரம்பிரபுவை விரும்பாமையால் தன் காதலனாகிய மோகனதாஸிடம் அவளுக்கு அனுதாபமும் ஆர்வமும் அதிகரித்தது. ஆகவே அவள், 'இல்லை. இல்லை. நீங்கள் இவ்வளவு துக்கப்படும்படியாக உங்களை விடமாட்டேன். இப்போது நாம் இருவரும் காதலைப்போல் நடந்துகொண்டதற்காக நான் வருத்தப்படப் போவதில்லை' என்று கூறினாள்.

இதைக்கேட்டதும் அவன் அளவிலா ஆனந்தமடைந்தான். அவள் தனது அழகிய கரத்தை அவனிடமே ஒப்படைத்து விட்டிருந்ததால் அவன் அதைப் பலமுறை எடுத்துத் தன் வாயினருகில் கொண்டுபோய் அன்பு கனிந்த பல முத்தங்களை ஈந்தான். பிறகு அவன், 'ஓ, அப்படியானால் நீ என்னை மனமார நேசிக்கிறாய்போலும். ஆனால் எதையும் யோசித்துச் செய். நீ என்னைக் காதலித்தால் உன் அந்

தஸ்தையெல்லாம் இழந்து கேவலம் சித்திர ஆசிரியனுகிய ஒருவனுடைய மனைவியாகத்தான் இருக்கவேண்டும். அதற்கு உனக்குச் சம்மதமா?' என்று கேட்டான். உடனே ஷண்பக வல்லி உண்மை உணர்ச்சியுடன் மெதுவான குரலில், 'அந் தஸ்தைப்பற்றி எனக்குக் கவலை இல்லை. நான் என் மனமார நேசிக்கும் ஒருவருடைய மனைவியாக இருப்பேனன்றோ?' என்று சந்தோஷத்துடன் கூறினுள்.

அப்போது மோகனதாஸ், 'அப்படியானுல் நீ கேவலம் எனக்காக அவ்வளவு பெரிய ஜமீனை சொந்தமாக உடைய தினகரம் பிரபுவையும் துறந்து விடுவாயோ?' என்று சந் தோஷ மிகுதியால் கேட்டான். அதற்கு அவள், 'ஐயா! உங்களுக்காக நான் விலையுயர்ந்த தேவலோக இன்பத்தையும் துறந்துவிடத் தயாராக இருக்கிறேன். உண்மைக் காதலுக்கு முன் பணம் என்ன செய்யும்?' என்றுள். அதைக் கேட்ட தும் அளவிலா ஆனந்தமடைந்த மோகனதாஸ் மறுபடியும் அப் பெண்மணியின்முன் முழங்காலிட்டுப் பணிந்து புன்சிரிப் புடன், 'ஓ, அப்படிப்பட்ட அதிர்ஷ்டமும் இவ்வெளியேனுக் குக் கிடைக்குமோ? நான் கனவு காண்கின்றேனு என்ன ? "பொருளிலார்க் கிவ் வுலகமில்லை" என்பதுபோல் உலகத் தாரால் அதிகம் விரும்பப்படும் செல்வத்தை நீ எனக்காகத் துறப்பதாக இருந்தால், அதிலும் கேவலம் சிறிதும் சொத்து இல்லாமல் சித்திரம், சங்கீதம் முதலியவைகளைக் கற்றுக் கொடுத்து அதனுல் கிடைக்கும் வருவாயைக் கொண்டு ஜீவிக் கும் என்னிடம் கொண்டுள்ள உண்மை அன்புக்காக நீ உலக மக்களால் போற்றப்படும் பெரிய அந்தஸ்தை இழப்பதாயிருந் தால் நான் உனக்குப் பிறகு என்றென்றும் கடமைப்பட்டவ னுக நேரிடும். நான் மனமார உன்னை நேசிப்பதைத் தவிர்த்து வேறு என்ன கைம்மாறு செய்யமுடியும்? எனக்காக நீ செய்

யும் தியாகத்துக்கு இது ஒரு பொருட்டாகுமா? என் செய்வது? நான் என் மனமார்ந்த அன்பையும் விசுவாசத்தையும் தவிர வேறு எவ்விதமான செல்வத்தையும் அளிக்க இயலாதவனாக இருக்கிறேன். என் மனமென்னும் கோயிலில் சதா சர்வ காலமும் உன்னுடைய உருவமாகிய விக்கிரகமே வீற்றிருக்குமென்பதிலும், உன்னைச் சதா சர்வ காலமும் சந்தோஷமாக வைப்பதிலேயே என் சக்தியும் ஆற்றலும் செலவழிக்கப் படுமென்பதிலும் சிறிதும் ஐயமில்லை. நீ என்னை நேசிப்பதற்குப் பதிலாக நான் செய்யக்கூடியது இவ்வளவு தான்?' என்று தெரிவித்தான்.

அப்போது ஷண்பகவல்லி, தன் எதிரில் முழங்காலிட்டிருக்கும் காதலனை நோக்கவும் அவனும் அவளைப் பார்க்கவும் இருவருடைய கண்களும் பரஸ்பரம் சந்திக்க அவள் மெதுவான இனிய குரலில், 'அன்பரே! நான் வேறு என்ன உங்களிடமிருந்து எதிர்பார்க்க முடியும்? நான் இன்பமாக வாழ்வதற்காகவே உங்களுடைய ஆற்றல் முழுதும் செலவழிக்கப்படும் என்று சொல்லும்போது வேறு என்ன எனக்கு வேண்டி யிருக்கிறது. வேறு யாரேனும் என்னைக் கலியாணம் செய்துகொண்டு என் விதியை அடக்கியாளக் கருதி எனக்குத் துன்பத்தையும் கவலையையும் உண்டாக்க விரும்பினால், அப்போது நான் உண்மையில் எனக்கு இன்பத்தை அளிக்கக்கூடிய ஒருவரையே யன்றோ தேர்ந்தெடுக்க வேண்டும்? அம்முறையில் உங்கள் சம்பந்தமே எனக்கு மற்றவைகளைவிட உயர்வானது. ஆதலின் அச் சம்பந்தம் ஒன்றே போதுமானது,' என்று கூறினாள். உடனே அவன், 'ஓ, பெண்ணரசியே! நீ பேசும் ஒவ்வொரு வார்த்தையும் உனக்கு என்பால் எவ்வளவு ஆழ்ந்த அன்பு இருக்கிறதென்பதையே காண்பிக்கிறது' என்று கூறிக்கொண்டே

மெதுவாகத் தன் கையைத் தூக்கி எதிரில் குனிந்து நின்றிருந்த அப்பெண்மணியின் அழகிய கழுத்தில் போட்டு அவளது முகத்தைத் தன் முகத்தின் பக்கமாகச் சாய்க்கவே இருவருடைய அதரங்களும் பரஸ்பரம் முட்டிக்கொண்டன. அன்புகனிந்த முத்தமிட்டுக் கொண்டனர்.

அச்சமயம் ஷண்பகவல்லி தன் காதலனை நோக்கி, 'காதல! மோகனதாஸ்! எழுந்திருங்கள்; எழுந்திருங்கள். இப்படி முழங்காலிட்டுப் பணிந்து கிடப்பது சிறிதும் நியாயமன்று. உடனே எழுந்திருங்கள்' என்றாள். அவனும் அவளது கட்டளைக் கிணங்க எழுந்து அப் பெண்ணின் அருகில் இருந்த ஒரு ஆசனத்தில் உட்கார்ந்தான். ஆனால் அளவு கடந்த சந்தோஷமும், எதிர்பாராத ஆச்சர்யமும் அவன் இருதயத்தில் புகுந்திருந்ததால் சொற்ப நேரம்வரை வாய்திறந்து பேசவும் அவனால் முடியவில்லை. அவன் மௌனமாக இருந்த அந்த சொற்ப நேரத்தில் அவனுடைய அங்கங்களெல்லாம் செயலற்றுக் கிடக்கவில்லை. ஆனால் அவனுடைய மனமானது ஆனந்தக் கடலில் மூழ்கி நீந்திக்கொண் டிருந்தது. அவன் வாயில் அப்பெண்மணி கொடுத்த முத்தத்தின் சாயல் இன்னமும் மறையாமலேயே இருந்தது. அவள் அழகிய வாய் திறந்து தன் பெயரைச் சொல்லி யழைத்த இன்பத்தொனி அவன் காதுகளில் ஒலித்துக்கொண் டிருந்தது. எல்லாவற்றிற்கும் அதிகமாக ஷண்பகவல்லியின் உருவமே அவன் மனக்கண் முன் நின்று என்றும் அழியாத வகையில் தாண்டவ மாடிக்கொண் டிருந்தது. இவைகளை யெல்லாம் கண்டு களித்திருந்தான், ஆதலால் அவன் பேசமுடியாமல் மௌனமாய் இருந்தானென்றாலும், இனி எத்தகைய கஷ்ட நஷ்டங்கள் ஏற்பட்டாலும் பெண்ணரசியாகிய ஷண்பகவல்லியை விட்டுப் பிரிவதில்லை என்று நிச்சயித்துக் கொண்டிருந்தான்.

மோகனதாஸ் இவ்வாறு பற்பலவிதமாகச் சிந்தித்துக் கொண்டிருந்தபோது அவனது காதலியாகிய ஷண்பகவல்லி யும் இதைப்போலவே பற்பல எண்ணங்களை நினைத்துக் கொண்டிருந்தாள். தான் மனமார நேசிக்கும் மோகன தாஸை விவாகம் செய்துகொள்வதில் எப்படிப்பட்ட இடை யூறுகள் ஏற்பட்டபோதிலும் அவைகளைப் பொருட்படுத்தா மல் தன் இச்சையை நிறைவேற்றிக் கொள்வதென்றும், அன்பு இன்னும் அதிகரித்தால் எப்படிப்பட்ட தடங்கலையும் சமாளிக்கக்கூடிய சக்தி அதற்கு ஏற்படுமென்றும் நினைத் தாள். மேலும் தன் பந்துக்கள் ஏற்பாடு செய்திருக்கும் அந்த விகார சொரூபமும், வெறுக்கத்தக்க குணங்களுமுடைய தினகரம் பிரபுவைவிட அழகிற் சிறந்தவனும் நற்குண நல் லொழுக்கங்களுடையவனுமான மோகனதாஸ் இன்ப வாழ்க் கையை அளிப்பதற்கு எவ்வளவோ மேலானவன் என்பதை யும் சிந்தித்தாள். இப்படிப் பலவாறு சிந்தித்ததால், எப்போ தும் சிந்தனையே பேச்சாக வெளிவருமாதலால், அவளும் திடீரென்று தன் மௌனத்தை ஒழித்துப் பின்வருமாறு கூற லானாள்:—“ஆ, நான் அளவு கடந்து பணிந்துவிட்டேன். அவ்வளவு கேவலமாக ஒரு அடிமையைப்போல் அவர்க ளுடைய கட்டளைக்குப் பணிந்துவிட்டதற்காக இப்போது வெட்கப்படுகிறேன். என் சித்தி மதனவல்லிச் சீமாட்டியும் சகோதரன் சந்திரசேகரம் பிரபுவும் கூறிய மொழிகளைக் கேட்டு என்னை மணப்பதற்குச் சிறிதும் யோக்கியதையில் லாத அந்த தினகரம் பிரபுவை மணப்பதாக ஒப்புக்கொண் டதைப்போன்ற முட்டாள்தனம் வேறொன்றுமே இருக்க முடியாது. நான் என் பந்துக்களின் சொற்களுக்கு உட்பட் டிருப்பதுபோலவே தினகரம் பிரபுவையும் அவனது தாயார் ஹேமவதி சீமாட்டி இவ் விஷயத்தில் கட்டுப்படுத்தி யிருக் கிறாள். மண மக்களின் அபிப்பிராய மென்ன வென்பதையே

அறியாமல் இவ்விரு குடும்பங்களிடையே ஒருவித சம்பந்தத்தை ஏற்படுத்துவதற்காகப் பெரியவர்கள் இவ்வாறு முடிவு செய்திருக்கிறார்கள். இல்லை, இல்லை. நான் ஒருகாலும் இதற்கு இணங்கமாட்டேன். என்னை இவர்கள் இப்படி விற்று விடுவதற்கு நான் இடந்தரேன். கேவலம் சமூகப் பழக்க வழக்க மென்பதற்காக நான் என் பிற்கால இன்ப வாழ்க்கையைக் கெடுத்துக்கொள்ள மாட்டேன். என் சித்தியும் சகோதரனும் என்னை அடக்கி ஆளமுடியாது."

இவ்வாறு அவள் பேசும்போது ஆத்திரமும் மனோ உறுதியும் அதிகப்பட்டதால் அவளுடைய அங்கம் முழுதும் பூரித்தது, மார்பு வீங்கிற்று. கண்கள் அகன்றன. ஆகவே அவள் மோகனதாஸின் கண்களுக்கு என்றுமில்லாத வகையில் அவ்வளவு அழகுடையவளாகத் தோன்றினாள். உண்மையிலேயே அவள் மனஉறுதியுடன் இருந்ததால் அந்த உறுதியே அவளது முகத்தில் ஒருவித ஒளியைத் தந்தது. கண்கள் சூரியப் பிரகாசம்போல் ஜ்வலித்தன. ஆகவே அவள் அழகுடன் காணப்பட்டாள்.

அன்று ஷண்பகவல்லி எழுதி முடிக்கவேண்டிய சித்திரத்திலும் அதிகமான வேலையே செய்யப்பட்டது. மோகனதாஸும் அவனது காதலியின் இஷ்டப்படியே இரண்டுமணி நேரம்வரை அங்கேயே இருந்தான். அவர்கள் எப்படிக் காலங் கழித்திருப்பார்கள் என்பதைப்பற்றி நாம் கூறாமலே வாசகர்கள் யூகித்துக் கொள்வதே நலம். அவர்கள் இருவரும் சொற்பநேரம் திக்பிரமையுடன் ஒன்றும் பேசாமல் வாய் மூடி மௌனிகளாய் ஒருவரை யொருவர் இமைகொட்டாது பார்த்துக்கொண் டிருப்பார்கள். பிறகு சொற்பநேரம் சித்திரம் வரைவதில் கவனம் செலுத்துவார்கள். அதன் பின்னர் இருவரும் அருகில் அமர்ந்து காதலர்கள் பேசக்கூடிய வகை

யில் இன்பமாகச் சம்பாஷணை செய்வார்கள். பிறகு சிற்சில சமயங்களில் இருவரும் கட்டியணைத்து முத்த மிடுவார்கள். இவ்வாறாக அவர்கள் இரண்டுமணி நேரத்தையும் சொற்ப நிமிஷங்களில் கழித்ததேபோல் கழித்துவிட்டார்கள்.

இரண்டு மணி நேரத்துக்குப் பின்னர் மோகனதாஸ் அவ்விடத்தைவிட்டுச் செல்வதற்காக எழுந்தான். ஆனால் இனி அவர்கள் எவ்வாறு நடந்துகொள்வது என்பதுபற்றி ஒருவித முடிவும் செய்து கொள்ளவில்லை. அவர்கள் அப்போது ஏற்பட்ட சந்தோஷத்திலேயே மூழ்கி அதே கவனமாக இருந்துவிட்டார்களே யொழிய அவள் தினகரம் பிரபுவை விட்டு இந்த மோகன்தாஸையே விவாகம் செய்து கொள்வதன் சம்பந்தமாய் எத்தகைய முடிவுக்கும் வரவில்லை. ஆனால் இத்தகைய காதல் சம்பந்தமான விஷயங்களிலெல்லாம் அன்பை இரகசியமாகத்தான் வைத்துக்கொண்டு தங்களுக்குச் சௌகரியமான காலத்தை எதிர்பார்த்துக்கொண்டிருக்க வேண்டியதாகவே இருக்கிறது. காதலர்கள் இருவரும் உண்மையாக ஒருவரை யொருவர் நேசிக்கிறார்கள். ஆனால் அவர்களுடைய காதலை வெளிப்படுத்துவதற்குரிய சந்தர்ப்பம் சௌகரியமாக இருப்பதில்லை. ஆதலின் அவர்கள் அதை வெளிக்குக் காட்டிக்கொள்ளாமல் பரிசுத்தமான மனதில் பதியவைத்துக்கொண்டு சௌகரியமான காலத்தை எதிர்பார்த்துக்கொண்டிருப்பார்கள். காதல் எப்போதுமே தெய்விக சக்தி பெற்றதாதலால் அவர்களுடையது உண்மைக் காதலாக இருக்குமாயின் அது என்றைக்காயினும் வெற்றியே அடைந்து தீருமென்பது நிச்சயம். இவ்விடத்திலும் மோகனதாஸும் ஷண்பகவல்லியும் உண்மைக் காதலுடையவர்களாகவே இருக்கிறார்களென்றாலும் ஷண்பகவல்லியின் பந்துக்கள் அதற்கு இடையூறாக இருந்ததால் அவர்

கள் சொற்பகாலம்வரை தங்கள் காதலை இரகசியமாகவே வைத்துக்கொள்ள வேண்டியதாய் இருந்தது. ஆதலின் அவர்கள் அதைப்பற்றி எத்தகைய முடிவுக்கும் வாராமல் வழக்கம்போல் ஆசிரியனும் மாணவியுமாகவே பழகிவந்தார்கள்.

ஆகவே மோகனதாஸ் வெளியில் செல்வதற்காக எழுந்ததும் அவ்விரு காதலரும் அன்புடன் ஒருவரை யொருவர் ஆலிங்கனம் செய்துகொண்டனர். பிறகு மோகனதாஸ் அம்மாளிகையை விட்டுச் சென்றான். ஷண்பகவல்லி மட்டும் அவ்வறையிலேயே தனியாக இருந்துகொண்டு சொற்ப நேரத்துக்குமுன் நடைபெற்ற இன்ப மயமான விஷயங்களைப் பற்றிச் சிந்தித்துக்கொண் டிருந்தாள்.

என்னே காதலின் சிறப்பு! ஷண்பகவல்லி ஒரு பெரிய பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்தவள், பிரபுப் பட்டம் பெற்ற உயர்ந்த அந்தஸ்துள்ள குடும்பத்தினள். மோகனதாஸோ பரம ஏழை. எத்தகைய அந்தஸ்துமில்லாதவன். ஆயினும் உண்மைக் காதலுக்கு முன் பணமும் அந்தஸ்தும் இதர வித்தியாசங்களும் என் செய்யும்? அவைகளெல்லாம் மனிதர்களால் ஏற்படுத்தப் பட்டவைதானே? தெய்விகம் வாய்ந்த உண்மையின்முன் இந்த வித்தியாசங்களெல்லாம் பறந்து போக வேண்டியதுதான். கடவுளால் எத்தகைய வித்தியாசமுமின்றி ஆக்கப்பட்ட ஆத்மாக்கள் சமமாகவே இருக்கும்போது அந்த ஆத்மாக்களே உண்மையாக நேசிக்க ஆரம்பித்தால் மனிதர்களால் தோற்றுவிக்கப்பட்ட வித்தியாசங்களும் உயர்வு தாழ்வுகளும் மறைந்து விடுகின்றன. நம் நாட்டிலும் இப்போது வேண்டப்படுவது உண்மையான சகோதரத்துவமும் சமத்துவமுமே யாகும். உண்மையையே தெய்வமாகக் கொண்டாடும் மகாத்மா காந்தியடிகளும், ஜனங்கள் ஜாதி மத வித்தியாசங்களை மறந்து அனைவரும் இந்தியரே

என்னும் சகோதா பாவத்தை யடைய வேண்டுமென்று விரும்புகிறார். இந்த உண்மையின் முன் போலிகளாகிய வித்தியாசங்கள் விரைவில்தொலையுமென்பது நிச்சயம்.

25-வது அத்தியாயம்

—:o:—

ஒரு ஆச்சர்ய சம்பவம்

மோகனதாஸ் ஷண்பகவல்லிக்குச் சித்திரம் கற்றுக் கொடுப்பதற்காக அன்று பகல் பன்னிரண்டு மணிக்கு ஷண்பகவல்லியின் மாளிகைக்குச் சென்றானென்றும், அங்கு அவன் இரண்டுமணி நேரம்வரையில் இருந்துவிட்டானென்றும், முன் அத்தியாயத்தில் கூறினோமல்லவா? ஆகவே அவன் அம்மாளிகையைவிட்டு வெளிவரும் போது பகல் மணி இரண்டு ஆகிவிட்டது. அந்த நேரத்தில் அவன் கிருஷ்ணகிரி ஜமீன்தார் குமாரிகளான ராஜேஸ்வரி, கற்பகம் ஆகியவர்களுக்குப் பாடம் சொல்வதற்காக அங்கே இருந்திருக்கவேண்டும். ஆயினும் என்ன செய்வது? இன்பமாகக் காதல் சம்பந்தமான பேச்சுகளில் ஈடுபட்டுவிட் டிருந்ததால் அவனுக்கு மணியே தெரியவில்லை. ஷண்பகவல்லியின் அழகிய உருவம் அவனது மனக்கண்முன்நின்று இதா விஷயங்களை யெல்லாம் மறைத்ததால் கிருஷ்ணகிரி ஜமீன்தார் குமாரிகளின் ஞாபகமே அவனுக்கு வரவில்லை. இருந்தாலும் அவன் இரண்டு மணிக்குப் பிறகாவது அங்குபோய்ச் சேர்ந்துவிடலாமென நினைத்து அவர்களுடைய மாளிகையை நோக்கி நடந்தான். வழியில் எவ்வளவோ ஜனங்கள் நடமாடிக் கொண்டிருந்தார்கள். பற்பல விசேஷங்களும் நடைபெற்

றுக்கொண்டிருந்தன. ஆயினும் அவன் எதிலும் கவனம் செலுத்தவில்லை. அவன் தேகம் அங்கு நடந்துகொண்டிருந்ததே யொழிய அவனுடைய மனமெல்லாம் ஷண்பகவல்லியினிடமே நாடி யிருந்தது.

இவ்வாறாக அவன் கிருஷ்ணகிரி ஜமீன்தார் மாளிகையினருகில் சென்றான். ஆயினும் அவன் அம்மாளிகையில் நுழையாமல் அருகிலிருந்த ஒரு நந்தவனத்தில் புகுந்துகொண்டு தன்னையே அறியாதவன்போல் சொற்ப நேரத்துக்கு முன்பு ஷண்பகவல்லியின் மாளிகையில் நடைபெற்ற சம்பவங்களைப்பற்றியே பலவாறு சிந்தித்துக்கொண்டு அந்த நந்தவனம் முழுவதிலும் அங்கு மிங்குமாகச் சுற்றிக்கொண்டிருந்தான். சொற்ப நேரத்துக்குப்பிறகு ஜமீன்தார் வீட்டுக்குப் போகவேண்டுமே யென்னும் ஞாபகம் வந்தது. அப்போது அவன் தன் கைக் கடிகாரத்தைப் பார்த்தான். மணி மூன்றரை ஆகிவிட்டிருந்தது. அவன் என்ன செய்வது? பாடம் கற்றுக்கொடுக்க அம்மாளிகைக்குச் செல்வதா? இல்லையா? என்னும் சந்தேகம் பிறந்தது, ஆனால் போகமலேயிருந்து அவர்களுக்கு ஏமாற்றத்தை அளிப்பதைவிடப் போய், நேரமானதற்காக மன்னிப்புக் கேட்டுக்கொள்வதே நலமெனக் கருதினான். எனவே அவன் அம்மாளிகைக்குச் சென்றான். வெளியில் காவல் இருந்த வேலைக்காரன் அவனை மாடிமீது வழக்கப்படி அவன் அவ்விரு பெண்களுக்கும் பாடம் கற்பிக்கும் அறைக்கு அழைத்துச் சென்றான். அவ்வறையில் மோகனதாஸ் தன் சிஷ்யைகளான ராஜேஸ்வரி, கற்பகம் ஆகியவர்களைக் காணமல் தான் ஜமீன்தாரிணியாகிய ஹேமவதிச் சீமாட்டியின்முன் நிற்பதைக் கண்டான்.

அவனைக் கண்டதும் ஹேமவதி சீமாட்டி ஒருவிதமான அதிகாரத்துடன் கூடிய குரலில், 'மோகனதாஸ், இன்று நீர்

சற்று தாமதமாக வந்திருக்கிறீரே' என்றாள். அதைக் கேட்டதும் அவன், தான் தாமதமாக வந்ததுபற்றி அச் சீமாட்டி கோபங்கொண்டிருக்கிறாள் என நினைத்தான். ஆகவே அவன் மரியாதையும் அடக்கமுமான முறையில், 'சீமாட்டியே! நான் சற்று தாமதமாக வந்ததற்காகப் பலமுறை உங்களிடம் மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன்,' என்று சொன்ஞன்.

உடனே அம்மாது அருகிலிருந்த ஒரு நாற்காலியைச் சுட்டிக் காண்பித்து, 'மோகனதாஸ்! பாதகமில்லை. இதற்காகவெல்லாம் நான் உம்மீது கோபித்துக்கொள்ள மாட்டேன். என் குமாரிகளிருவரும் அதிக நேரம்வரை உம்மை எதிர்பார்த்துக் காத்திருந்தார்கள். ஆனல் நீர் வாரமற் போகவே அவர்கள் இப்போதுதான் காற்றில் உலாவுவதற்காக வெளியே சென்றனர். இதோ இந்த ஆசனத்தில் உட்காருங்கள்' என்றாள். அதற்கு அவன், 'சீமாட்டியே! நீங்கள் இவ்வளவு கூறியதற்காக வந்தனம். நான் அதிகநேரம் இங்கிருந்து உங்கள் காலத்தை வீணில் கழிக்க விரும்பவில்லை. நாளையதினம் ஒருமணி நேரமாவது என்னை அனுமதிக்க உங்கள் குமாரிகள் ஒப்புக்கொண்டிருக்கிறார்களா?' என்று கேட்டான். அவள், 'ஆம்; அவசியம் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். நாளை பகல் இரண்டு மணிக்கு வாலாம். ஆனல் இப்போது இதோ இந்த நாற்காலியில் உட்காரும்' என்று ஒருவிதமான குரலில் சொன்னாள். அதனல் அவளது உள்நோக்கமென்ன வென்பதையறிய முடியாமல் மோகனதாஸ் மனக் குழப்பமடைந்தான். எனினும் அச் சீமாட்டியின் கட்டளைப்படியே அவன் அவளால் சுட்டிக் காண்பிக்கப்பட்ட நாற்காலியில் உட்கார்ந்தான். அவளும் தான் உட்கார்ந்திருந்த நாற்காலியை மோகனதாஸின் அருகில் இழுத்துக்கொண்டு உட்கார்ந்தாள்.

பிறகு அவள் அவளிடம் முழுநம்பிக்கை கொண்டவள் போன்ற தோற்றத்தில் அவனைப்பார்த்து, 'நான் இப்போது உம்முடன் சில முக்கிய விஷயத்தைப்பற்றிப் பேச விரும்பு கிறேன். அதைக் கேட்டால் நீர் ஆச்சர்யமும் திக்பிரமையும் அடைவீர் என்பதில் சந்தேகமில்லை. ஆயினும் நீர் அதை அவசியம் கேட்டுத்தான் ஆகவேண்டும்' என்றாள். அவள் அவ்வாறு கூறும்போது அவனைத் தன் இருகண்களின் சக்தி முழுதையும் அவன் மீது வீசுவதேபோல் கூர்ந்து நோக்கிய துடன், அந்தப் பார்வையில் ஏதோ ஒரு விதமான விஷமத் தனமும் காணப்பட்டபடியால் கள்ளங்கபட மற்றவனும், பரி சுத்த குணமுடையனுமான மோகனதாஸ் உண்மையிலேயே பயந்தான். அவள் எந்த விஷயத்தைப்பற்றிப் பேசுவாளோ என்று அஞ்சினன். அதனால் அவன் தேகம் முழுதும் நடுங் கியது. அப்படியே அவன் மெதுவாக அவளைப் பார்த் தான். அவளுடைய கண்களில் ஏதோ ஒருவிதமான பிர காசம் ஜ்வலித்தது. அவள் உதடுகள் நடுங்கிக் கொண்டிருந் தன. அவள் மார்போ பெருமூச்சினால் வீங்கியது. இதை யெல்லாம் கண்ட மோகனதாஸ் அவ்விடத்தை விட்டுப் போய் விடலாமா என்றும் நினைத்தான். ஆனால் ஒரு பெரிய சீமாட்டியின் முன் நின்றிருப்பவன் அவளுடைய அனுமதி யின்றி எப்படிப் போய்விட முடியும்.

மறுபடியும் ஹேமவதி சீமாட்டி மெல்லிய குரலில், 'மோகனதாஸ்! உயர்ந்த அந்தஸ்திலுள்ள குடும்பத்தைச் சேர்ந்தவளும், உம்முடன் சம்பந்தம் வைத்துக்கொள்ள பகி ரங்க சௌகரிய மில்லாதவளுமான ஒருமாது உம் விஷயத்தில் அன்புடையவளாகவே இருந்தால் அப்போது நீர் என்ன செய்வீர்?' என்று கேட்டாள். இதைக் கேட்டதும் மோகனதாஸ் ஆச்சர்யமும் அச்சமும் அடைந்தான். முத

வில் ஹேமவதி சீமாட்டியே தன்னிடம் ஆசை கொண்ட தாகக் கூறுவாளோ என்று நினைத்தான். ஆனால் அடுத்த நிமிஷமே அவனுக்கு வேறு பயம் தோன்றியது. அதாவது அவன் ஷண்பகவல்லியிடம் கொண்டுள்ள இரகசியக்காதல் எப்படியாவது வெளியாய்ப் போய் அதைப்பற்றி ஹேமவதி சீமாட்டி விசாரிக்கப் போகிறாளோ என்று பயந்தான்.

அவன் மனக்குழப்பம் அடைந்திருந்த தன்மையை அறிந்த அவள், 'என் வார்த்தையைக்கேட்டு நீர் ஆச்சர்ய மும் கவலையும் அடைந்திருப்பதாகத் தெரிகிறதே. இதைப் பற்றி என்னிடம் பேச நீர் சிறிதும் கவலைப்பட வேண்டாம். நம் இடையே எல்லா வகையான அந்தஸ்து வேற்றுமை களும் மறைந்து விடட்டும்' என்று கூறினாள். அப்போது அவளுடைய உருவம் முழுதும் காமம் என்னும் பேயால் பிடித்தாட்டப்பட்டது. அவள் மெய்மறந் திருந்தாள். அப் போது மோகனதாஸனும் தான் சொல்வது இன்னதெனத் தனக்கே விளங்காத முறையில் வாய் குழற, தேகம் நடுங்க, 'சீமாட்டியே! நீங்கள் சொல்வது ஒன்றும் எனக்குப் புரிய வில்லையே' என்றான். அதற்கு அவள், 'இல்லை. இல்லை. நான் சொன்னதை நீர் அறிந்து கொள்ளாமலிருக்க முடியாது. இப் போது நான் பிரஸ்தாபித்த விஷயத்தைப்பற்றி நீர் அறிந்து கொள்ளவில்லை யென்றால் அது ஆச்சர்யமாக வல்லவோ இருக்கும் ஏன் இப்படிப் பயந்த முறையில் பார்க்கிறீர். நான் உம்முடைய ஹிருதயத்திலுள்ள சரியான விஷயத்தைக் கண்டுபிடித்து விட்டேன் போலும்!' என்று கூறினாள். அவள் கடைசியில் சொன்ன வார்த்தை அவனுக்கு அதிக சந்தேகத்தையும் அச்சத்தையும் உண்டாக்கி விட்டபடியால் தான் ஷண்பகவல்லியை நேசிப்பதையே அவள் கூறுகிறாள் என நினைத்து நடுங்கினான். அவன் உள்ளத்தில் இவ்வித சிந்

தனைகள் தோன்றுவதையும், அதற்கேற்ப அவன் முகத்தில் பலவித குறிகள் வெளிப்படுவதையும் அச்சீமாட்டி கவனித்துக் கொண்டிருந்தாள். எனினும் அவன் தன் அச்சத்தைச் சமாளித்துக்கொண்டு சிறிது தைரியத்துடன், சீமாட்டியே! நீங்கள் எதைச் சொல்வதாக இருந்தாலும் சிறிது விளக்கமாகச் சொல்லி விடுங்கள். எனக்கு விஷயம் தெரியாமல் இருக்கிறது' என்றான்.

அதைக்கேட்ட சீமாட்டி பொறுமை இழந்தவளாய் இன்னும் இனிய குரலில், 'நீர் இவ்வளவு அறியாமை நிரம்பியவராக இருப்பீர் என்று நான் நினைக்கவேயில்லை. இவ்வளவு அதிகமான அன்பு உம்மிடம் ஏற்பட்டிருப்பதற்கு நீர் குற்றவாளியன்று. அஞ்சாதீர்; என் வார்த்தைகளை முழுதும் கேளும். ஏதோ தெய்வச் செயலாக நீர் ஏழைக்குடும்பத்தில் அந்தஸ்து குறைவான இடத்தில் தோன்றிய போதிலும், உம்முடைய அழகும், குணாதிசயங்களும், பெருந்தன்மையும் நோக்கும்போது நீர் உயரிய அந்தஸ்துள்ள குடும்பத்தினரைப் போலவே காணப்படுகிறீர். இதை மிகைப்படுத்திக் கூறியதாகக் கருதவேண்டாம். இது வரை எவரையும் நேசியாத ஒரு ஆத்மா உம்மிடம் இயற்கையாகவே அன்பு கொண்டிருக்கிறதென்றால் உம்முடைய சிறப்பைப் பற்றிக் கூறவேண்டுமா? அந்த அன்பு நீண்டகாலமாகவே குறைத்து வைக்கப்பட்டு வந்தது இனி ஒரு நிமிஷமும் பொறுக்க முடியாமையால் அது இன்று உம்மிடம் வெளியாக்கப்பட்டது' என்று சொன்னாள்.

மோகனதாஸ் இதைக் கவனமாகக் கேட்டுவந்தான். அச்சீமாட்டி கூறிய ஒவ்வொரு வார்த்தையும், அவள் பிரஸ்தாபித்த விஷயம் தான் ஷண்பகவல்லியிடம் கொண்டுள்ள காதலைப்பற்றியதே என்று நிச்சயமாக நம்பும்படியான

இருந்ததால் ஹேமவதி சீமாட்டி அதையே கூறப்போகிறாள் என்று நினைத்தான். ஆனால் அவள் வேறு எதைப்பற்றி யேனும் பிரஸ்தாபித்தாலும் பிரஸ்தாபிக்கக் கூடுமாதலின் மீண்டும் அந்த விஷயத்தைப் பகிரங்கமாகச் சொல்லி விடும் படி கேட்கலாமென்றாலும் அதற்கும் அவனுக்குத் தைரி யம் வரவில்லை. ஆகவே அவனுடைய நிலைமை மிகச் சிக்கலான தாக இருந்தது. மனக்குழப்பம் அதிகரித்து விட்டது. என்ன செய்வதென்று தோன்றாமல் சும்மா இருந்துவிட் டான். இதையெல்லாம் சீமாட்டியும் அவனது முகக்குறி யால் ஒருவாறு அறிந்துகொண்டாள்.

ஆகவே அவள் அவனைப்பார்த்து, 'மோகனதாஸ்! நீர் ஏன் இவ்வாறு மனக்கவலை கொள்கிறீர்? என் வார்த்தைக ளைக் கேட்டதும் நீர் மனங் கலங்குவதன் காரணமென்ன? நான் சொல்வது உமக்கு விளங்கவில்லையென்பது ஆச்சர்ய மாகவல்லவோ இருக்கிறது,' என்றாள். அப்போது அவன், 'ஆம்; அம்மா! நான் சொல்வது உண்மையே; நீங்கள் சொல் வது எனக்கு விளங்கவில்லை. தயவு செய்து விளக்கமாகக் கூறுங்கள்' என்று கேட்டான். அதற்கு அவள், 'ஓ! நீர் ஏன் என் உணர்ச்சியை என் வாயின் சொற்களினின்றும் பெற விரும்புகிறீர்? எப்போதும் உணர்ச்சியே அதிக சக்தி வாய்ந்தது. அந்த உணர்ச்சியை அறிகுறிகளாலேயே அறிய வேண்டும். அதைச் சொற்களால் வர்ணிப்பதென்றால் அதன் வேகம் குறைந்துவிடுகிறது. இருக்கட்டும். சொல் கிறேன் கேளும். ஐயா! நான் உம்மை மனமார நேசிக்கி றேன்' என்று தன் மனதிலுள்ளதை விளக்கினாள்.

அவள் கடைசியில் பேச ஆரம்பித்தபோதே இதைத் தான் சொல்லப் போகிறாள் என்பதை அவன் எதிர்பார்த்தா னாதலால் 'நான் உம்மை நேசிக்கிறேன்' என்று அவள்

சொன்னதும் அவன் சர்ப்பத்தை மிதித்தவன்போல் திடுக்கிட்டதுடன் அவனுக்கும் தெரியாமல் 'ஆ' என்னும் கவலைச் சொல் அவனது வாயினின்றும் வெளிப்பட்டது. அவன் இமைகொட்டாமலும் சிறிதுநேரம் அவளையே உற்றுப் பார்த்தான். அவன் அவ்வாறு அவஸ்தைப் படும்போது அவள் நினைத்ததிதம் வேறு, சாதாரணமாக இதர பெண்கள் நினைப்பது போலவே அவளும் நினைத்தாள். அவன் தன்னைப் பெறும் பாக்கியம் கிடைத்ததுபற்றி அளவிலா ஆனந்தமடைந்து அச் சந்தோஷத்தில் மூழ்கி யிருக்கிறான் எனக் கருதினாள். உடனே அவள் மறுபடியும், 'ஆம், மோகனதாஸ்! நான் உம்மை மனமார நேசிக்கிறேன். சொற்பகாலமாகவே உம்மீது எனக்கு அன்பு ஏற்பட்டிருக்கிறது. ஆனால் இன்றுவரை அதை வெளியாக்க முடியவில்லை. என்னை உலகத்தார் அதிகம் மதித்திருக்கிறார்கள். நான் பெருமையுடன் கௌரவமாக வாழ்க்கையை நடத்துவதால் என் கற்பில் எவருக்கும் சந்தேகம் கிடையாது. நானும் அதற்கேற்றபடியே இதுவரை ஒருவரையாவது நான் நேசிப்பதாக எவரிடமும் அறிவித்ததில்லை. ஆனால் உம்மிடம் எனக்கு ஏற்பட்ட அன்பை அடக்கிக் கொள்ளவும், மறைக்கவும் நான் என்னாலியன்றவரையில் முயன்றேன். ஆனால் முடியவில்லை. என் கர்வம் உம்முன் பணிந்துவிட்டது. இனி என்னால் ஒரு நிமிஷமும் தாங்கமுடியாது. நான் உம்முடைய பாதங்களில் பணிகின்றேன். உம்மிடம் எனக்கு ஏற்பட்ட நேசம் வெல்ல முடியாதது? என்று சரசரவென்று தன் மனதிலுள்ளதையெல்லாம் வெளிப்படுத்திவிட்டாள்.

அவள் அவ்வாறு பேசியபோது இடையில் குறுக்கிட்டுப் பேச்சை நிறுத்தும்படி சொல்லவேண்டுமென்று விரும்பினானென்றாலும் அவள் மூச்சுவிடாமல் மிக உற்சாகத்

துடன் பேசியதால் அவன் குறுக்கிடவும் பயந்தான். அவள் பல வருஷங்களாக அடக்கிவைத்திருந்த காமவிகாரம் முழுதும் அப்போது ஒருங்கே திரண்டு வெளிப்பட்டதுபோல் மிக்க வேகத்துடன் அவளுக்கு உணர்ச்சியை யூட்டியதால் அவள் காமம் என்னும் பேய் பிடித்தவள்போல் பேசவே அவளது அழகு முழுதும் வெளிப்படவும் அவள் அசல் இரதி தேவியைப்போல் தோன்றினாள். ஆகவே அவன் ஒன்றும் பேசாமல் அவள் உட்கார்ந்திருந்த நாற்காலியின் அருகில் திக்பிரமை பிடித்தவன்போல் நின்று கொண்டிருந்தான்.

அப்போது ஹேமவதி சீமாட்டி மிக்க ஆர்வத்துடன் மோகனதாஸைப் பார்த்து, 'மோகனதாஸ்! என் இவ்வாறு பேசாமல் நிற்கிறீர். நான் இப்போது வெளிப்படுத்திய அன்பு விஷயத்தில் உமக்குத் திருப்தி யில்லையோ? நான் கூறியதில் வேறுவிதமாக நினைக்கவேண்டாம். நீர் எனக்குக் கணவனாக வேண்டுமென்று நான் கோரவில்லை. நான் உம்முடைய மனைவியாக இருக்கவேண்டுமென்று நினைத்ததில்லை. உலகம் நம்முடைய நேசத்தை அறியலாகாது. உம்முடைய வைப்பாகவே நான் இருக்க விரும்புகிறேன். பெண்களுக்குக் கற்பும் கண்ணியமுமே சிறப்பானது. அதற்காக அவர்கள் உயிரையும் தியாகம் செய்யச் சித்தமாக இருக்கவேண்டும். அப்படியிருந்தும் நான் எனக்கு உம்மிடம் ஏற்பட்டுள்ள அளவுகடந்த அன்பின் காரணமாகவே எல்லாவற்றையும் இழந்து என்னை உம்மிடம் ஒப்புவிக்கத் தயாரானேன். நீர் என்னுடைய இத்தகைய அன்பை ஏற்றுக்கொள்ள மறுத்து விடுவீரோ? முடியாது. ஒருகாலும் நீர் மறுக்கலாகாது. நான் வேடிக்கையாகப் பேசுகிறேனோ என்று நீர் சந்தேகிக்கவேண்டாம். நான் உண்மையாகவே

இவ்வாறு கூறுகிறேன் என்பதை ருஜுப்பிக்கிறேன். வாருங்கள். நான் உம்மை இறுகத் தழுவிக்கொள்கிறேன்' என்று கூறிக்கொண்டே காமப் பித்தம் தலைக்கேறிய அவள் அவ் வாலிபனைக் கட்டித் தழுவச் சென்றாள். ஆனால் அவன் திடுக்கிட்டு விலகிச் சென்று உறுதியான குரலில் சிறிதும் அஞ்சாமல், 'முடியாது, முடியாது,' என்றான்.

அதைக் கேட்டு ஆத்திரமடைந்த ஹேமவதி சீமாட்டி ஒருகால் அவன் அவள் வார்த்தையை இன்னும் நம்பாததால் அத்தகைய பதில் கூறினானோ என நினைத்து, 'என்ன ! என் அன்பை ஏற்றுக்கொள்ள மறுக்கிறீரா? நான் இன்னமும் உங்களுடன் வேடிக்கை செய்கிறேனென்று நினைக்கிறீரோ ! ஒருகால் நீர் என் குமாரிகளுக்குப் பாடம் கற்பிக்கத்தக்க யோக்யதையுடையவரோ என்று சோதிக்கிறேன் என நினைக்கிறீரோ ? அப்படியொன்றுமில்லை. நான் கடவுள் சாட்சியாக உண்மையாகவே உம்மை நேசிக்கிறேன். என்ன? இன்னமும் திக்பிரமையுடன் நிற்கிறீரே ? என் அன்பை மறுக்க உங்களால் முடியவே முடியாது. எனக்கு ஏற்பட்டுள்ள காமம் என்னை நெருப்புபோல் எரிக்கின்றது. மன்மதன் எய்தும் பாணத்தின் வேகத்தைத் தாங்க என்னால் முடியவில்லை. இத்தகைய கஷ்டத்தை நான் எப்போதும் அடைந்ததேயில்லை. அன்பையே ஒரு தெய்வமாகக்கொண்டு அதன் முன் எத்தகைய தியாகத்தையும் செய்யத் தயாராக இருக்கிறேன். என்னுடைய கர்வத்தையும், பெருந் தன்மையையும், எவருக்கும் அடங்காத்தன்மையையும் பற்றி நீர் கேள்விப்பட்டிருக்கலாமே. அவ்வளவும் இப்போது பெட்டியிற் போட்ட பாம்புபோல் அடங்கிவிட்டன. ஏனெனின் எனக்கு உம்மிடம் ஏற்பட்டுள்ள அன்புக்கு அவ்வளவு சக்தி இருக்கிறது. நான். இவ்வளவு தியாகம் செய்வதற்குப் பதிலாக

விரும்புவதெல்லாம் உங்கள் அன்புதான்' என்று வேண்டிக் கொண்டாள்.

அவள் அவ்வாறு பேசிக்கொண்டே அவனைத் தன் மார்புடன் தழுவி அணைத்துக்கொள்ள விரும்பி அவனை நோக்கிச் சென்றதால் அவன் சற்று பின்னால் விலகிக் கொண்டே, 'ஹேமவதி சீமாட்டியாரே! நீங்கள் இவ்வாறு உங்களையே அடியோடு மறந்து உங்கள் அந்தஸ்துக்குத் தகாத வேலையில் ஈடுபடுவது நியாயமாகுமோ? ஏதோ மயக்கத்தில் இருக்கும்போது கூறும் வார்த்தைகளை நான் ஏற்றுக் கொள்வதும் தகாது. நீங்கள் சிறிது நிதானமடையுங்கள்' என்று சமாதானம் கூறினான். காமமென்னும் பேய்க்கு இரையாகி இருக்கும் அவள் காதில் இச் சமாதானமெல்லாம் நுழையுமா? அவள் மிக்க பரபரப்புடன், 'ஆம்; மயக்கம்தான். இது சாதாரண மயக்கமல்ல. எனக்கு உம்மிடம் இப்போது ஏற்பட்டிருக்கிற இந்த ஆசையை வேறு எந்த உபாயத்தாலும் அடக்க முடியாது. நீர் என்னைத் திரும்பி நேசித்து என் இஷ்டத்தைப் பூர்த்தி செய்தால்தான் என மயக்கம் தீரும்' என்று கூறினாள். அவள் அதிகம் பேச ஆரம்பித்து விடவே மோகனதாஸ் அதிக கோபத்துடன், 'அம்மணி! இம்மாதிரி இனி பேசவேண்டாம்-நாம் உடனே பிரியவேண்டியதுதான். இனி ஒரு நிமிஷமும் இங்கிருக்க என்னால் முடியாது' என்றான்.

திடீரென்று ஹேமவதி சீமாட்டியின் தோற்றத்தில் ஒரு வித மாறுதல் ஏற்பட்டது, அவளுடைய சந்தோஷமெல்லாம் இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிட்டது. அவள் தன் உற்சாகத்தை இழந்தாள். அவள் முகத்திலும் கண்களிலும் காணப்பட்ட பிரகாசமும் மங்கிற்று. ஆனால் உக்கிரம் அதிகமாயிற்று. அடக்கமுடியாத கோபத்துடன், 'ஓ,

அப்படியானால் நீர் என் மோகத்தைப் பரிகசிக்கிறீர்போலும்! என்னைக் கேவலப்படுத்தவும் உமக்குத் தைரியம் வந்துவிட்டதா?' என்று ஆத்திரத்துடன் கேட்டாள். அதற்கு அவன் நிதானமாக, 'சீமாட்டியாரே! நான் உடனே சரேலென்று வெளியே போய்விடாமல் இச் சொற்ப நேரம் இங்கு நின்றதற்கும் காரணம் என்னவென்றால், நான் வெளியேபோனதும் இங்கு நடந்த இவ்விஷயத்தைப்பற்றி எங்கேனும் சொல்லிவிடுவேனோ என்று நீங்கள் நினைக்கக்கூடாது என்பதே. நான் உங்களைக் கேவலப்படுத்திவிட்டதாகக் கூறுகிறீர்கள். அப்படியொன்றுமில்லை. இவ்விஷயத்தில் உங்கள் பேச்சைக் கேட்கவில்லையே தவிர வேறொன்றுமில்லை. ஏதோ புத்தி தடுமாறி இருக்கும் இச்சமயத்தில் நீங்கள் பேசியதையும் செய்ததையும் நான் இங்கேயே மறந்துவிடுவேன். நீங்களும் நிதானமடைந்து இதர வேலையில் புத்தியைச் செலுத்துங்கள் இதோ நான் விடை பெற்றுக்கொள்கிறேன்' என்று கூறிக்கொண்டே அங்கிருந்து விலக முயன்றான்.

அப்போது ஹேமவதி சீமாட்டி காமவிகாரமென்னும் சமுத்திரத்தின் அடியில் மூழ்கியவளாய்க் கண்மண்தெரியாதபடி மோகனதாஸ் கரத்தைப் பிடித்திழுத்து, 'நில்லுங்கள். ஒரே ஒரு நிமிஷம் இருங்கள். நீர் என்னை இந்தக் கோலத்தில் விட்டுவிட்டுப் போகக்கூடாது. நான் நடுக் காட்டில் அலைவதுபோல உணர்கிறேன். நான் மனமார நேசித்த மனிதர் நீர் ஒருவர்தான். முதன் முதலாக நான் நேசிக்கும் மனிதரே இவ்வாறு என்னை அலட்சியம் செய்துவிட்டால் என் மனம் எவ்வாறு இருக்கும்? முடியவே முடியாது. கடவுள் மீது ஆணையாக நீர் என் அன்பைப் புறக்கணிக்கலாகாது' என்று கூறிக்கொண்டே தன் காலால் கீழே விரிக்கப்பட்டிருந்த கம்பளியின் மீது அறைந்தாள். இச் சம்பவங்களை

யெல்லாம் கண்டு மோகனதாஸ் வெறுப்பும் பீதியும் அடைந்து இனி ஒரு நிமிஷமும் அங்கு இருக்கலாகாதெனக் கருதி ஹேமவதி சீமாட்டியின் பிடியினின்றும் தன்னை விலக்கிக் கொண்டு அவ்வறையினின்றும் வெளியேசெல்ல முயன்றான்.

அப்போது அவள் ஒரே பாய்ச்சலாய் அவன் மீது பாய்ந்து அவனை மீண்டும் இறுகப் பிடித்துக்கொண்டு, 'நீர் இங்கேயே நிற்க வேண்டுமென்று நான் கட்டளை யிடுகிறேன். எனக்கு ஆத்திரமும் வெறுப்பும் உண்டாகும்படி நீர் நடந்து கொள்கிறீர் என்று எச்சரிக்கை செய்ய விரும்புகிறேன். நான் சொல்லவேண்டிய விஷயங்கள் இன்னும் சில இருக்கின்றன. அதைக் கேட்பதற்கு முன் நீர் வெளியில் செல்ல முயன்றால் ஒரு பெரிய போராட்டம் நடக்கும் என்பது நிச்சயம். பிறகு வருத்தப்படுவதில் எத்தகைய பிரயோசனமுமில்லை. கேவலம் ஒரு பெண்மணியினிடம் முரட்டுத்தனத்தைக் காட்டுவது ஆண்களுக்கு அழகல்ல என்பது உமக்குத் தெரிந்த விஷயமே' என்று கூறினாள். இதைக்கேட்ட இளைஞனை மோகனதாஸ் இன்னது செய்வதென்று தோன்றாமல் வருத்தத்துடன், 'ஜமீன்தாரிணியே! நான் இன்னும் சற்று நேரம் இங்கிருந்து நீங்கள் சொல்லப் போவதைக் கேட்பதில் ஆட்சேபமில்லை, ஆனால் நீங்கள் சிறிது நிதான புத்தியை அடையவேண்டும். சற்று சமாதான மடையுங்கள். இதை யாரேனும் பார்த்து விட்டால் உங்களுக்கு அவமானம் ஏற்படுமே என்று அஞ்சுகிறேன். மேலும் உங்களுக்கு அவமானத்தைக் கொடுப்பதும் எனக்குக் கேவலத் தன்மை யுண்டாக்குவதுமான பதங்களை இனி உபயோகிக்க வேண்டாம் என்று அறிவிக்க விரும்புகிறேன்' என்று கூறினான்.

அதைக் கேட்ட ஹேமவதி அதிக கோபத்துடன், 'உம்மை நான் அவமானப்படுத்துகிறேன் என்று கூறுகிறீர்?

நம் இருவருடைய் வயதில் அதிக வித்தியாசமிருப்பதால் என் அன்பை ஏற்றுக்கொள்ள மறுக்கிறீரா? நமக்குள் வயது வித்தியாசம் அதிகமிருக்கிறதென்பது வாஸ்தவமே. ஆனால் நான் இன்னமும் சிறிதும் அழகு குறையாதவளாக இல்லையா? என்னுடைய ரூபலாவண்யத்தில் ஏதேனும் குறைவிருக்கிறதா? இதோ என் கூந்தலைப் பாருங்கள். ஒரு நரைத்த மயிர்கூட இல்லை. என் முகத்தில் திரை ஏதேனுமிருக்கிறதா? அது மட்டுமா? என் உருவத்திலே வயது சென்றதற்கு அறிகுறியாக ஏதேனும் இருக்கிறதா? இல்லவே இல்லை. நான் உம்மை நேசிப்பதுடன் உம்மால் நேசிக்கப் படுவதற்கும் யோக்ய முடையவளாகவே இருக்கிறேன். எத்தனையோ பிரபுக்களெல்லாம் என் அழகின் இன்பத்தை அனுபவிக்கக் கருதி என் ரூபலாவண்யத்தைப்பற்றி எவ்வளவோ சிலாகித்துப் பேசியிருக்கிறார்கள். மோகனதாஸ் இப்போது நீர் என்ன சொல்கிறீர்?' என்று கேட்டாள். அதற்கு அவன் அவளுடன் பேசும் ஒவ்வொரு நிமிஷமும், தன் மனமார்ந்த காதலியாகிய ஷண்பகவல்லிக்குத் துரோகம் செய்ய நினைத்ததாகும் எனக் கருதியவனாய், 'இல்லவே இல்லை, ஒருகாலும் முடியாது' என்று வெறுப்புடன் கூறினான்.

அவன் தன் வழிக்கு வரமாட்டான் என்று தெரிந்து கொண்ட அவள் மிக்க துக்கத்துடனும் கோபத்துடனும், 'உம்முடைய மனம் கல்லோ இரும்போ தெரியவில்லை. சிறிதும் அசைக்க முடியாததுபோ லிருக்கிறதே. ஆனால் நீர் வேறு யாரையோ நேசிக்கிறதுபோல் தெரிகிறது' என்றாள். உடனே அவன் தன் இரகசியம் வெளிப்பட்டுவிடுமோ என்னும் அச்சத்துடன், 'மற்றொருவரை நேசிப்பதா?' என்று அலறிக் கொண்டே கூறினான். ஹேமவதி சீமாட்டியும், 'ஆம்; நீர் வேறொருத்தியை நேசிக்கிறீர் என்று நன்றாகத்

தெரிகிறது. அப்படித்தான் இருக்க வேண்டுமென்று எனக்குத் தெரிவதால்தான் நான் அதைக் கூறுகிறேன். உம்முடைய பீதியுடன்கூடிய முகத்தைப் பார்க்கும்போதே இருதயத்திலுள்ள இரகசியம் தெரிகிறது. அப்படியானால் எனக்கு இவ்விஷயத்தில் யாரோ எதிரி இருக்கிறாளென்று தெரிகிறதல்லவா? இப்படிப்பட்ட காம விஷயத்தில் எதிரி இருந்தால் ஆத்திரமும் பொச்சரிப்பும் அதிகப்படுவது சகஜமல்லவா? வேறு ஒரு பெண்ணுக்காக நீர் என் அன்பை ஏற்க மறுப்பதென்றால் கடவுள் சாட்சியாக நான் என் பழியைத் தீர்த்துக் கொள்வதில் மிக்க கடுமையாக நடந்துகொள்வேன் என்பது நிச்சயம்' என்று பொறுமையுடனும் ஆத்திரத்துடனும் கூறினாள். அப்போது அவன் தன் காதலியாகிய ஷண்பகவல்லியை இருதயத்தில் நினைத்துக் கொண்டு அவளுக்கு எத்தகைய ஆபத்தும் வரக்கூடாதே என்னும் எண்ணத்துடன், 'ஐயோ கடவுளே! சீமாட்டியாரே, நீங்கள் பேசுவது இன்னதென்று உங்களுக்கே தெரியவில்லைபோலிருக்கிறது' என்று கேட்டான்.

அதற்கு அவள், 'தெரியாமலென்ன? நான் என்ன செய்வேன் என்பதை இப்போது கூறவில்லையா? நீர் என் அன்பை இவ்வாறே அலட்சியம் செய்தால் கஷ்டமாக முடியும் என்று எச்சரிக்கை செய்கிறேன். இப்போதும் காலங் கடந்துவிடவில்லை. இனிமையாகப் பேசிவிடுங்கள். இதுவரை நடந்ததையெல்லாம் மறந்துவிடுகிறேன்' என்றாள். அப்போது அவன் அவள் பிடியினின்றும் தன்னை விலக்கிக் கொண்டு, 'அம்மணி! நீங்கள் இவ்வாறெல்லாம் பேசுவதை நான் இனியும் கேட்டுக் கொண்டிருக்க முடியாது' என்று கூறிக்கொண்டே அங்கிருந்து புறப்பட முயன்றான். உடனே அவள் மிக வேகத்துடன் மூன்றும் முறையாக அவனது

காத்தை இறுகப் பிடித்துக்கொண்டு, 'நில்லுங்கள். ஒரே வார்த்தை. நீர் என்னை நேசித்து என் அன்பை ஏற்றுக் கொண்டால் உம்மை தெய்வமாகப் போற்றுவேன். அதை விடுத்து நீங்கள் அதை மறுத்தால் இன்று முதல் நான் உம்முடைய பரம விரோதி என்று நிச்சயமாகத் தெரிந்து கொள்ளுங்கள்' என்று மிக்க ஏமாற்ற மடைந்தவன்போல் கூறியதுடன் அதிக வருத்தத்துடன் தன் தேகம் முழுதும் நடுங்கக் கண்களில் நீர் வடிய அவள் தானகவே அவனைத் தன் பிடியினின்றும் விட்டுவிட்டாள்.

மோகனதாஸ் விலகிநின்று ஹேமவதி சீமாட்டியைப் பார்த்து, 'சீமாட்டியாரே! இப்போது உங்களுக்குத் தோன்றியுள்ள காமவிகாரம் அடங்கியதும் நீங்களே இப்போது இங்கு நேர்ந்த சம்வத்துக்காக வருத்தப்படுவீர் என்பது நிச்சயம்' என்று சமாதானம் கூற முயன்றான். ஆனால் அவள் சிறிதும் சமாதானமடைய முடியாதவளாய் ஏமாற்ற மடைந்த ஆத்திரத்தால், 'அப்படி நினைக்காதீர். நான் வருத்தப்படுவதற்குப் பதிலாக என் அன்பைப் புறக்கணித்த உம்மைப் பழிவாங்க என்னால் இயன்றவரை முயற்சி செய்வேனென்பது திண்ணம். நீர் என் அன்பை மறுக்க எப்படி முடிவு செய்தீரோ அப்படியே உம்மைப் பழிவாங்குவதெனத் தீர்மானித்திருக்கிறேன். உம்முடைய இன்பத்தை அனுபவிப்பதற்காக நான் எதையும் தியாகம் செய்ய முன்வந்திருப்பேன். ஆனால் இப்படிக் கேவலப்படுத்துவதைச் சகித்துக் கொண்டிருக்க என்னால் முடியவே முடியாது. ஆகவே நான் எவ்வளவுக் கெவ்வளவு நேசித்தேனே அவ்வளவுக் கவ்வளவு இப்போது வெறுக்கிறேன்' என்றாள்.

அவன் அதையெல்லாம் லட்சியம் செய்யாமல் ஒரே பிடிவாதமாக, 'அம்மணி! இவ்வாறு பேசுவதை நான் கேட்டுக்

கொண்டிருக்கத் தயாராக இல்லை. என் விஷயத்தில் நீங்கள் இப்படிப் பேசுவது என்னை அவமதிப்பதாகவே இருக்கிறது' என்று சொன்னதும் அவள் தன் கண்களின் தீப்பொரி பறக்க கோபாவேசத்துடன், 'அப்படியானால் என்முன் நிற்க வேண்டாம். உடனே புறப்படுங்கள். நான் உம்மை வெறுக்கிறேன்' என்றாள். மோகனதாஸ் மனதில் சிறிதும் கவலையோ அச்சமோ கொள்ளாதவன்போல் சீமாட்டிக்கு வணக்கம் செலுத்திவிட்டு அவ்வறையைவிட்டுப் புறப்பட்டான். இரண்டொரு நிமிஷங்களுக்குள் அவன் அவ் வீதியைக் கடந்து அதன் கோடியிலிருந்த ஒரு நந்தவனத்தில் தங்கி, சற்றுமுன் அவன் அனுபவித்த பல சம்பவங்களைப்பற்றிச் சிந்திக்கலானான்.

மோகனதாஸின் பரிசுத்த குணத்தைப் போற்றுமலிருக்க முடியுமா? செல்வத்திற் சிறந்தவளும், ரூபலாவண்யத்தில் சிறிதும் குறையாதவளுமான ஹேமவதி சீமாட்டி தானாக அவனை மோகித்துத் தன் அன்பை வெளிப்படுத்திய போதும், அவனை அவள் கட்டியணைக்க முயன்று கேட்டுக் கொண்டபோதும், அவள் அவனைப் பழிவாங்குவதாகப் பய முறுத்தியபோதும் அவன் சிறிதும் இணங்காமல் ஒரே பிடிவாதமாகத் தன் ஒழுக்கத்தைக் காப்பாற்றிக் கொண்டான் அதுதான் உண்மையாளர்க்கு அழகாகும். இப்படித்தான் பல சோதனைகள் ஏற்படும். அச் சோதனைகளுக் குட்படாமல் ஒரு கொள்கையை நிலைநிறுத்துவதுதான் ஆறறிவு படைத்த மக்கள் கடமையாகும். சோதனைக்கிணங்கி விடுவரேல் மிருகங்களுக்கும் அவர்களுக்கும் என்ன வித்தியாசமிருக்கப்போகிறது? ஹேமவதி சீமாட்டி தன்னைக் கலியாணம் செய்துகொள்ளும்படி மோகனதாஸைக் கேட்கவில்லை. அவர்களுடைய சம்பந்தத்தை உலகம் அறியக் கூடாதென்

றும், இரகசியமாக அவளுடன் இன்பத்தை அனுபவிக்கலா மென்றும் கேட்டுக் கொண்டாள். மோகனதாஸ் ஷண்பக வல்லியைக் காதலிக்கிறு னென்றுலும், ஹேமவதி சீமாட்டி யின் விருப்பத்தையும் நிறைவேற்றி வைத்து அவளிடமிருந்து வேண்டிய அளவு பணத்தையும் சுகசௌகரியங்களையும் பெற்றிருக்கலா மல்லவா ? ஆனால் ஒழுக்கம் என்பது எங்கே இருக்கும்? அவனுக்கு ஒழுக்கமே பெரிதாகத் தோன்றிய தால் அவன் பிற இன்பங்களைப் பொருட்படுத்தவில்லை. இக் காலத்து வாலிபர்கள் இவ்வளவு மன உறுதியுடன் இருப் பார்களா? இவ்விடத்தில் வாசகர்கள் அறிந்துகொள்ள வேண்டிய படிப்பினை ஒழுக்கத்தைக் காப்பதற்காக இவ்வ ளவு மனஉறுதி அடையவேண்டும் என்பதே.

மோகனதாஸ் நந்தவனத்தில் இருந்து பல விஷயங்க ளைச் சிந்தித்தபோது, ஏமாற்றமடைந்த ஹேமவதி எவ்வித மாகப் பழி வாங்குவாளோ என்று அஞ்சினான். அவள் தனக்குமட்டும் ஏதேனும் தொந்தரை செய்தாலும் பாதக மில்லை. தன் மனமார்ந்த காதலியாகிய ஷண்பகவல்லியை ஏதேனும் தொந்தரை செய்தால் என்ன செய்வது என்னும் கவலையே அவனுக்கு அதிகமாய்விட்டது. ஹேமவதி சீமாட்டி பணக்காரியாகவும் செல்வாக்குடையவளாகவும் இருப்பதால் எத்தகைய வேலையையும் அவளால் செய்து முடிக்க இயலும், அவள் தன் காமவிகாரம் முழுதும் ஒன் கத் திரண்டு வெளிப்பட்டபோது அதைத் தீர்த்துக்கொள்ள முடியாமல் ஏமாற்ற மடைந்துவிட்டா ளாதலால் அந்த ஏமாற்றம் அவளை எதையும் செய்யும்படி தூண்டும். மேலும் அவள் ஏதேனும் செய்யவேண்டுமென்று விரும்பினால் அதை எப்படியாவது செய்து முடிக்கக்கூடிய சுபாவமுடையவள். ஆகவே மோகனதாஸ் சிறிது அஞ்சினான்.

ஆனால் அவன் என்ன செய்வது? எவ்விதமாக எச்சரிக்கையுடன் இருப்பது? என்பன ஒன்றும் அவனுக்குத் தோன்றவில்லை. அப்போது நடந்த சம்பவங்களை யெல்லாம் இரகசியமாகத் தன் காதலியாக ஷண்பகவல்லியிடம் தெரிவித்து ஜாக்கிரதையாக இருக்கும்படி கூறலாமா என்று நினைத்தான். ஷண்பகவல்லி ஹேமவதி சீமாட்டியின் குமாரனுக்கே மனைவியாக வேண்டுமென்று ஏற்பாடு செய்திருப்பதால், இந்நிலையில் அவள் மோகனதாஸைக் காதலிக்கிறாள் என்று ஹேமவதிக்குத் தெரிந்தால் கட்டாயம் பழிவாங்குவாளல்லவா? ஆகவே முன்னெச்சரிக்கை செய்வது நலமென நினைத்தான். ஆனால் அவன் பெருந்தன்மையே அவதாரமாகத் தோன்றியவனாதலால், இந்த விபரீத சம்பவத்தைப் பரிசுத்த இருதயமும் கள்ளங் கபடமற்ற தன்மையுமுடைய ஷண்பகவல்லியிடம் சொல்லி அவள் மனத்தில் கறை ஏற்படும்படி செய்ய அவன் விரும்பவில்லை. ஆகவே கிருஷ்ணகிரி ஜமீன்தாரின் மாளிகையில் நடந்த எதிர்பாராத சம்பவத்தைப்பற்றி இரகசியமாகவே வைத்துக்கொள்வதென்று நிச்சயித்தான்.

அப்போது மணி ஐந்து இருக்கும். மோகனதாஸ் அந்த நந்தவனத்தை விட்டுப் புறப்பட்டும் இரத்தினபுரியின் மத்தியில் அவன் தன் காரியாலயத்துக்காக வென்று வாடகைக்கு வாங்கி வைத்திருந்த கட்டடத்துக்குச் சென்றான். அவன் எப்போதுமே அங்கு வசிக்கும் வழக்கமில்லை. இரத்தினபுரிக் கடுத்த ஒரு சிற்றூரில் அவன் குடியிருந்தான். தன் காரியாலயத்தைமட்டும் நகரின் மத்தியில் வைத்திருந்தான். அவன் காரியாலயத்தில் மூன்று அறைகள் இருந்தன. ஒரு அறையில் அவன் மாணவ, மாணவியர்க்குச் சித்திரம், சங்கீதம் முதலியவற்றைக் கற்பிப்பான். மற்றொரு

அறையில் தன்னை யாரேனும் சந்திக்க விரும்பினால் அவர்களுடன் பேசுவான். வேறொரு அறை அவனது படுக்கையறை. பகற்காலத்தில் ஓய்வெடுத்துக் கொள்ளவும், எப்போதேனும் இராக்காலத்தில் வீட்டுக்குப் போகாமல் அங்கேயே தங்கிவிட்டால் படுக்கவும் அதை உபயோகிப்பான். அவன் அங்கு சென்றதும் தன்னுடன் தொழில் சம்பந்தமாய்ப் பேச இரண்டொருவர் காத்திருப்பதைக் கண்டு அவர்களுடன் பேசி முடிந்து அவர்களை அனுப்பியதும் சிறிது சிற்றுண்டியை வரவழைத்து அருந்திவிட்டுத் தன் படுக்கையறையில் ஒய்வெடுத்துக் கொண்டான். அவன் படுக்கையில் சாய்ந்தபடியே அன்று பகல் இரண்டு இடங்களில் நடைபெற்ற இருவிதமான சம்பவங்களைப்பற்றி யோசித்துக் கொண்டிருந்தான்.

மணி ஒன்பது ஆனதும் தன் வீட்டிற்குச் செல்லப் புறப்பட்டான். அன்று இரவு நிலா வெளிச்சமுடையதாயும், மனோரம்ய முடையதாயும் இருந்ததால் தன் வீட்டிற்கு நடந்தே போய்விடுவதென நினைத்து அவ்வாறே நடந்துசென்றான். அவன் செல்லும் வழியில் நகரத்துக் கப்பால் ஒரு தனியான இடத்தில் அழகிய மாளிகை ஒன்று இருந்தது. அது அன்று அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. அவ்வீட்டினின்றும் சங்கீத ஒலி வெளியே வந்து கொண்டிருந்தது. மோகனதாஸுக்குச் சங்கீதத்தில் அதிக பிரியமாதலாலும், அவனும் அக்கலையில் தேர்ச்சிபெற்றவனாதலாலும் தனக்கும் தெரியாமல் அங்கேயே நின்று அச் சங்கீதத்தைக் கேட்டுக்கொண்டிருந்தான். அங்கு பல பெண்களும் பாடுவது அவனுக்குக் கேட்டது. ஆகவே அவன் அக்கட்டடத்தின் நான்கு பக்கங்களிலும் சுற்றித் திரிந்து கொண்டே சங்கீதத்தைக் கவனித்தான். அப்போது அவ

னுக்குத் திடீரென்று ஒரு விஷயம் ஞாபகத்துக்கு வந்தது. அதாவது அவன் அன்று பகல் ஷண்பகவல்லியுடன் பேசிக்கொண்டிருந்தபோது, அவள், தன் சித்தியாகிய மதனவல்லி சீமாட்டியுடன் அன்றுமாலை அச்சீமாட்டியின் நண்பர் வீட்டுக்குச் சங்கீதக் கச்சேரிக்குச் செல்வதாகத் தெரிவித்திருந்ததுதான். அப்போது அவன், 'ஆ! என் அன்பிற் சிறந்த ஷண்பகவல்லி இங்கேதான் சங்கீதம் பாடிக்கொண்டிருக்கிறாள் போலும்! இயற்கைத் தேவிதான் என்னை இவ்வழியே செல்லும்படி தூண்டினாள் போலிருக்கிறது' என்று நினைத்துக்கொண்டே உலாவிக் கொண்டிருந்தான்.

திரை நீக்கப்பட்டுத் தன் காதலியின் உருவம் தன் கண்முன் தோன்றுமோ என்று ஆவல் கொண்டான். அவன் இஷ்டப்படியே அவ்வேளையில் திடீரென்று திரை நீக்கப்பட்டது. சங்கீதத்திலும் நடனத்திலும் கலந்துகொண்டு அதனால் சோர்வடைந்த ஒருமாது காற்று வாங்கும்பொருட்டு வெளிப்புறத் தாழ்வாரத்தில் வந்து நின்றாள். அவள் தான் காதலிக்கும் ஷண்பகவல்லியாகவே இருக்கக்கூடாதா என்று நினைத்து ஆவலுடன் அவளைக் கூர்ந்து நோக்கினான். என்ன ஆச்சர்யம்! கடவுள் ஏற்பாட்டின் மகிமை என்னே! அவள் தன் மனதில் வீற்றிருக்கும் ஷன்பகவல்லிதான். அவள் தன்னை அழகாக அலங்கரித்துக் கொண்டு தன்னைக் கண்டோர் மனம் கவரும்படி அழகுடன் விளங்கினாள். சாதாரணமானவர்களே அவளைக் கண்டதும் அவள் அழகில் ஈடுபட்டுவிடுவார்களென்றால் அவளிடம் காதல் கொண்டவனும், அவளால் காதலிக்கப்படுகிறவனுமான மோகனதாஸ் அவள் அழகைக் கண்டு உடனே அவளுடன் பேசவேண்டுமென்று விரும்பியதில் ஆச்சர்யமொன்றுமில்லை. ஆனால் அப்போது எப்படிப் பேச முடியும்? அவர்களிருவருடைய காதலும்

இரகசியமானதாகவல்லவோ இருக்கிறது. மேலும் அவள் தன் சித்தியுடன் பிறருடைய வீட்டுக்கு வந்திருக்கும் வேளையில் தற்செயலாக அவனைச் சந்தித்ததற்காக எப்படி அவனை நெருங்கிப் பேசமுடியும்? ஆனால் அவர்கள் மனப்பூர்த்தியான காதலர்களாயிற்றே. கண்களாலாவது பேசாவிடில் அவர்களுடைய மனம் நிம்மதியடையுமா? ஆகவே அவன் மெதுவான குரலில், ஆனால் அவளுக்குக் கேட்கும்படியான வகையில் அவள் பெயரைச் சொல்லிக் கூப்பிட்டான். உடனே அவளும் திரும்பிப் பார்த்தாள். நிலா வெளிச்சத்தில் அவன் முகம் நன்றாகத் தெரிந்தது. தன் காதலன் தான் மிக்க ரூபலாவண்யத்துடன் விளங்கும்போது தன் எதிரில் தற்செயலாய் நிற்பதைக் கண்டு சந்தோஷமடைந்தாள். அவள் அப்போதுள்ள நிலைமையில் ஒன்றும் பேச முடியாதாகையால் தன் வெண்மையான கைக்குட்டையை ஆர்வத்தின் மிகுதியால் ஆட்டினாள். அவனும் தன் கைக்குட்டையை அவ்வாறே அசைத்தான். அன்பர்களிருவரும் தங்களுக்குரிய தனி பாஷையில் பேசிக் கொண்டாய் விட்டது.

ஷண்பகவல்லி இனியும் வெளியில் தனியாக இருப்பது நியாயமல்ல வெனக் கருதித் திரையை மூடிக்கொண்டு உள்ளே சென்றாள். அவனும் தன் காதலியைக்கண்ட சந்தோஷத்துடன் தன் இல்லம் நோக்கிச் சென்றான். அவன் தன்னுடைய சிறிய ஆனால் அழகிய மாளிகையில் புகுந்ததும் அழகிற் சிறந்தவளும், வசீகரத் தோற்ற முடையவளுமான ஒரு பெண்மணி அவனை அன்புடன் வரவேற்றதுடன், அவன் அவ்வளவு தாமதமாக வந்ததற்காக அன்பு கனிந்த முறையில் கண்டிக்கவும் துணிந்தாள். மோகனதாஸனும் அப்பெண்மணியை மார்புறத் தழுவிக் கொண்டு தான் தாமதமாக வந்ததற்காக ஏதோ ஒரு பொருத்தமான சமாதானமும் கூறினான்.

இப்பெண்மணி யார்? மோகனதாஸ் ஷண்பகவல்லியிடம் கொண்டது உண்மைக் காதலா என்னும் சந்தேகம் இதனால் வாசகர்களுக்கு உண்டாகலா மென்றாலும் அவனுடைய மாளிகையில் காணப்பட்ட அப்பெண்மணியின் சம்பந்தமான மர்மத்தை இப்போது வெளிப்படுத்த இடமல்ல வாதலால் சிறிது பொறுத்துக்கொண்டு பின் வரும் அத்தியாயங்களில் அம் மர்மத்தைக்கண்டு கொள்ளும்படி வாசகர்களைக் கேட்டுக் கொண்டு அடுத்த அத்தியாயத்தில், மோகனதாஸ் ஒப்பாததால் வெறுப்படைந்த ஹேமவதி சீமாட்டியின் நிலைமையை விவரிப்போம்.

26-வது அத்தியாயம்

ஹேமவதி சீமாட்டியின் சூழ்ச்சி

:o:

மோகனதாஸ் தன்னைச் சிறிதும் லட்சியம் செய்யாமல், தானாகக் கோரிக்கொண்டும் தன் அன்பை ஏற்றுக்கொண்டு தனக்கு விரகதாபத்தைத் தீர்க்கும் மன்மதனாக இருக்க சம்மதப்படாததால் ஹேமவதி சீமாட்டி அவனிடம் அளவிலா கோபமும் வெறுப்பும் கொண்டாள். எப்படியாவது அவனைப் பழி வாங்கவேண்டுமென்று நினைத்தாள். இப்போது மோகனதாஸ், ஹேமவதிசீமாட்டி சம்பந்தமான சில விஷயத்தை நாம் விவரிக்கவேண்டியது அவசியமா யிருக்கிறது. மோகனதாஸ் எப்போது ஹேமவதி சீமாட்டியின் குமாரிகளுக்குச் சித்திரமும், சங்கீதமும் கற்பிக்க ஆரம்பித்தானோ அதுமுதலே ஹேமவதி அவனிடம் ஒருவிதமான அபிமானமும் ஆர்வமும் ஏற்பட்டது. ஆனால் அவள் பற்பல நிலைமைகளையும் உத்தேசித்து அந்த அபிமா

ணத்தையும் ஆர்வத்தையும் அடக்கிக்கொள்ள தனக்குள்ளேயே முயன்றுவந்தாள். எனினும் அது அவளுக்கும் தெரியாமலே அவளது உள்ளத்தில் வளர்ந்துகொண்டே வந்தது. ஆகவே அவள் தனக்கு உண்மையாகவே மோகனதாஸினிடம் அன்பு ஏற்பட்டுவிட்டதை யறிந்தாள். இவ்வாறு அவளுக்கு அவனிடம் அன்பு அதிகப்பட்டுக் கொண்டே வருவதைத் தடுக்க அவளால் இயன்றவரை முயன்றாள் என்பதில் ஆட்சேபமில்லை. ஆனால் அந்த அன்போ அவளது சக்திக்குமீறி இருந்தது. ஆதலால் அவள் முயற்சி பலிக்கவில்லை. மேலும் தான் அதுவரை எவரையும் நேசித்ததில்லை என்று மோகனதாஸிடம் கூறியதும் உண்மை தான். விவாகம் செய்துகொண்ட கிருஷ்ணகிரி ஜமீன்தாரான சுந்தரம் பிரபுவையும் அவள் தன் அன்பின் மிகுதியால் விவாகம் செய்து கொள்ளவில்லை யென்பது யாவர்களுக்குத் தெரிந்த விஷயம்.

அவள் அப்பிரபுவினிடம் அன்புடனும் உண்மையாகவும் நடந்துகொண்டு அவருக் கேற்ற நல்ல மனைவியாக இருந்ததும் அவரிடம் அவளுக்கு விசுவாசமும் மரியாதையும் இருந்தது காரணமேயன்றி அவரிடம் ஏற்பட்ட காதல் காரணமல்ல. அவர் இறந்துபோன பிறகும் அவள் இளம் வயதினளாயும் அழகுடையவளாயும், பணக்கார விதவையாகவும் இருந்தும் அவள் அவ்வாறு பிற புருஷர்களைவிரும்பாததன் காரணம் அவளை விரும்பி வந்த ஆடவர்களில், ஒருவராவது எவ்விதத்திலும் அவளைவிட உயர்ந்தவராக இருக்கவில்லை. அன்பு விஷயத்திலும் அவளது உள்ளத்தில் அன்பை உண்டாக்கும்படி செய்ய ஒருவராலும் முடியவில்லை. ஆகவே அவள் புருஷ சம்பந்த மின்றியே கௌரவமாகத் தன் வாழ்க்கையை நடத்தி வந்தாள். இதனால் அவளுக்குப் பெருமை அதிகரித்

தது. அவள் தனது ஒரே குமாரனை தினகரம் பிரபுவை அன்புடன் வளர்ப்பதிலேயே தன் கவனம் முழுதையும் செலுத்தி வந்தாள். அவன் வயது ஏற ஏற சில தீச்செயல் களில் ஈடுபட்ட போதெல்லாம் அவளுக்கு அதிக துயரம் ஏற்பட்ட தென்றாலும் அவன் எப்படியாவது தீர்க்காயுளு டன் நன்றாயிருந்து தன் ஆஸ்தியை ஆண்டு அனுபவித்தால் போதுமென்று கருதி அவனை ஆதரித்து வயர்த்து வந்தாள்.

இக்காரணத்தாலேயே அவள் தன் மகனுக்கு ஷண்பக வல்லியை மனைவியாக ஏற்றுக்கொள்ளத் தயாராக இருந்தாள். ஷண்பகவல்லி உயர்ந்த அந்தஸ்தில் பிறந்தவள். தினகரம் பிரபு நோயாளியாகவும், தீய குணங்களுடையவனாகவு மிருந் தாலும் அவனுக்குப் பெரிய ஜமீன் இருப்பதனால் ஷண்பக வல்லியின் பந்துக்களும் அவளைத் தினகரம் பிரபுவுக்கே கொடுப்பதென நிச்சயம் செய்தனர். ஷண்பகவல்லிக்கும் தினகரம் பிரபுவுக்கும் கலியாணம் செய்து வைத்து அவர்க ளுடைய கூட்டுறவால் ஒரு ஆண் குழந்தை அதாவது தனக் குப் பேரன் பிறந்து விட்டால் அதுவே போதுமானதென்று ஹேமவதி சீமாட்டி கருதினாள். ஆனால் அவள் சாதாரண மான இந்த உலக விவகாரமான அன்பு முதலிய விஷயங் களில் தன் மனதை அதிகம் செலுத்தாமலேயே இருந்து விட்டாள். ஆனால் அவளுக்குக் காம உணர்சி இல்லாமற் போய் விட்டதா? இருந்ததென்பதில் சிறிதும் தடையில்லை. எனினும் அதையும் நாம் அடக்கிக் கொண்டோம் என்னும் பெருமை யடைவதில் அவளுக்கு ஆசை அதிக மிருந்தது. அவள் கற்பின் பெருமையை உணர்ந்து கற்புடன் இருக்க வேண்டுமென்னும் எண்ணத்துடன் பரிசுத்தமாக இருக்க வில்லை. ஆனால் உலகத்தில் தன் நிலைமையைக் கேவலப் படுத்திக் கொள்ளலாகா தென்னும் எண்ணத்துடன் தன்

வாழ்க்கையை மிக ஜாக்கிரதையுடன் நடத்தி வந்தாள். ஆகவே அவள் சாதாரண தூண்டுதல்களுக்கெல்லாம் இடம் கொடுத்து விடாமல், ஆசை தோன்றும் போதெல்லாம் அதை அடக்கிக்கொண்டு வந்தாள். தன் வாழ்க்கையைக் கௌரவமாகவும் பெருமையாகவுமே கழித்தாள்.

ஹேமவதி சீமாட்டியின் கணவர் இறந்தது முதல் அவள் அவ்வாறே பத்தொன்பது வருஷ காலம் காமத்துக்கோ அன்புக்கோ இடம் தாராமல் வாழ்ந்து வந்தவள் மோகன தாஸைச் சந்தித்ததுமுதல் அன்புக்கு இடம் கொடுத்துவிட்ட துடன் அதை அடக்க முடியாதவளாகவும் திண்டாடினுள், ஆகவே அவள் இந்த அன்பையும் அடக்கிக்கொள்ள அவ ளால் இயன்றவரை முயற்சித்தாள் என்று பலமுறையும் நாம் துணிந்து கூறலாம். மோகனதாஸ் தன் குமாரிகளுக் குப் பாடம் கற்பிக்க அம்மாளிகைக்கு வரும்போதெல்லாம் அவனைக் காணுமலிருக்க அவள் எவ்வளவோ முயற்சிப்ப துண்டு. ஆனுல் அவனிடம் அவளுக்கு ஏற்பட்ட மோக மானது அவன் எந்த அறையில் இருக்கிருனே அங்கு அவ ளைக் கொண்டுபோய் விட்டுவிடும். அவனது உருவமே அவள் மனக்கண்முன் தோன்றலாகாதெனை அவள் பலவகையிலும் முயற்சி செய்வாள். ஆனுல் அதுவும் அவளால் முடியாமற் போகும். நாளடைவில் அவளது மனேசக்தி குறைந்து அவளுக்கு மோகனதாஸினிடம் ஏற்பட்ட மோகமே அவளை ஆட்கொண்டு விட்டது. அதற்கு அவள் பணிந்துவிட்டாள். அன்பு என்பது ஒன்று உண்டென்றுல் அது அவளுக்கு அவனிடம் ஏற்பட்ட பாசமே யாகும் என நினைத்து அவனி டம் அதைத் தெரிவித்துத் தன் இச்சையைப் பூர்த்தி செய்து கொள்வதென நினைத்தாள். தான் உயர்ந்த அந்தஸ்திலும் செல்வத்திலும் பேர் பெற்றிருப்பதால் சாதாரண நிலைமையி

ளுள்ள மோகனதாஸ் சந்தோஷத்துடன் இச் செய்தியை வரவேற்றுத் தன்னைக் காமக் கிழத்தியாகக் கொள்வான் என்றும் நிச்சயமாக நம்பினுள். அவள் அவ்வாறு நம்பியதில் ஆச்சர்ய மொன்றுமில்லை. இக்காலத்தில் நம் நாட்டில் எத்தனையோ கல்விமான்க ளென்பவர்களும், மதாசார சீலர்க ளென்பவர்களும் சமயக் கொள்கைகளுக்கும் ஒழுக்க முறைமைக்கும் முற்றும் முரணுகப் பணத்தை முன்னிட்டு இத்தகைய தகாத சம்பந்தங்களை யெல்லாம் வைத்துக்கொள்வதில்லையா? எத்தனையோ வாலிபர்கள், பெரிய பணக்கார மாதர்கள் அகப்பட்டால் போதுமென்று காத்திருக்கிறுர்கள். பணத்தின்முன் ஒழுக்கம், சமயம் எல்லாம் பறந்து விடுகின்றன.

ஹேமவதி சீமாட்டி அவ்வளவு நம்பியிருந்தும் அவன் அவள் கோரிகைக்கு ஒப்பாமல் அவளை நடுக்கடலில் தவிக்கும் கப்பலைப்போல மோகாந்தகார மென்னும் சமுத்திரத்தில் அலையவிட்டுவிட்டதால் அவளுக்கு அவனிடம் கோபமும், வெறுப்பும், ஆத்திரமும் அதிகரித்துவிட்டது. மேலும் மோகனதாஸ் தன் ஒழுக்கத்தின் காரணமாகவே அவளை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டா னென்பதை அவள் உணராமல், அவன் வேறு யாரையோ காதலிப்பதால்தான் தன்னை நேசிக்க மறுக்கிறுன் என நிச்சயித்து அவனுடைய காதலி யாராயினும் சரி, அவள் தன் பரம விரோதியே என ஹேமவதி சீமாட்டி நினைத்து அப்பெண்ணைப் பழிவாங்குவதென்றும் தீர்மானித்தாள். பெண்கள் சாகசத்தில் சிறந்தவர்களென்று நாம் சொல்லத் தேவையில்லை. தான் நினைத்த காரியத்தை எப்படியாவது சாதித்துக்கொள்ளும் ஆற்றல் அவர்களுக்குண்டு. ஹேமவதி சீமாட்டிக்குப் பொறுமையும், பொச்சரிப்பும், வயிற்றெரிச்சலும் அதிகரித்துவிட்டது. அவள்

எப்படிப் பழிவாங்க நினைத்திருக்கிறளோ அப்படியே அவ னும் தனக்குப் பாதகம் செய்ய நினைப்பான் என அவள் கருதி முன்னுடியாகவே அதற்கு எதிரிடையாக ஏதேனும் செய்து வைக்கவேண்டுமென்று நினைத்தாள். தான் அவனை மோகித்துக் கேட்டுக்கொண்டதையும் அவன் மறுத்துவிட்ட தையும் வெளியில் போய்ப் பெருமையாகச் சொல்லிக்கொண் டால் என்ன செய்வதென்று அஞ்சினுள். ஆகையால் அச் சம்பவத்திலேயே அவன்மீது குற்றம் ஏற்படும்படியாகக் கதையைக் கட்டி அவன் அவ்விஷயத்தை வெளியிடுவதற்கு முன்னரே தான் அதைப் பிரசித்தப்படுத்தி அவன்மீது பல ருக்கும் வெறுப்புண்டாகும்படி செய்துவிட வேண்டுமென்று முடிவு செய்தாள்.

இதற்கு முன் அத்தியாயத்தில் கூறியபடி மோகனதாஸ், கிருஷ்ணகிரி ஜமீன்தார் மாளிகையைவிட்டுச் சென்றதும், ஏமாற்றமும் ஆத்திரமுமடைந்த ஹேமவதி சீமாட்டி தன் னையே தான் தேற்றிக்கொண்டு ஒரு சம்பவமும் ஏற்படாத வள்போல் சமாதான நிலையை அடைந்து, எதிரிலிருந்த மணியை அடித்தாள். ஒரு சேவகன் ஓடி வந்ததும் வெளி யில் சென்றிருந்த அவளது குமாரிகள் திரும்பி வந்துவிட்ட னரா என விசாரித்தாள். அவர்கள் இன்னும் வரவில்லை யெனத் தெரிந்தது. ஆகவே அவள் அவர்கள் வரும்வரை பொறுமையுடன் காத்திருந்தாள். அப்பெண்கள் மாளிகைக் குத் திரும்பியதும் தாயார் தங்களைப்பற்றி விசாரித்தாள் என்பதை யறிந்த அவர்கள் தங்கள் தாய் இருந்த அறைக்குச் சென்றூர்கள். அவள் அவர்களைக் கண்டதும் என்றுமில் லாத வகையில் மிக அன்புடன், 'என் பிரியமுள்ள குமாரி களே! நீங்கள் மாளிகையில் இல்லாதபோது நடந்த ஒரு ஆச் சர்ய சம்பவத்தைப்பற்றி நீங்கள் அறிந்தால் திக்பிரமை யடை

வீர்கள்' என்ருள். உடனே இளைய குமாரியாகிய கற்பகம், 'அம்மா! நீங்கள் சொல்லும் தோரணையி லிருந்து அச் சம்பவம் திக்பிரமை யடையக் கூடியதாக இருந்திருக்குமென்று நினைக்க முடியவில்லை. அதைப்பற்றி நீங்கள் சந்தோஷமாக வல்லவோ பேசுகிறீர்கள். ஆகவே அது என்ன விஷயமென்று அறிய நான் மிக ஆவலுடையவளாக இருக்கிறேன்' என்று கேட்டாள்.

உடனே ஹேமவதியும், 'ஆம்; அது வேடிக்கையான சமாசாரம்தான். ஒருவர் என்னை நேசிப்பதாகவும், நான் அவரை விவாகம் செய்துகொள்ள வேண்டுமென்றும் கேட்டார். அது விசேஷ ஆச்சர்ய சம்பவமல்லவா?' என்று கூறியதும் ராஜேஸ்வரி ஆச்சர்ய மடைந்தவளேபோல், 'அம்மா! உங்களுக்கா கலியாணம்? யாரேனும் வயதான ஒரு பெரியவர் அவ்வாறு உங்களைக் கேட்டாரோ?' என்று வினவினுள். உடனே ஹேமவதி சீமாட்டிக்குக் கோபம் வந்துவிட்டது. ஆதலால், 'ஆ! அப்படியா? வயதான பெரியவர் தான் என்னை விவாகம் செய்து கொள்ள முன்வருவார் என்று நீ கருதிவிட்டாயோ?' என்று ஆத்திரத்துடன் கேட்டாள். அப்போது ராஜேஸ்வரி, 'அப்படியானுல் உண்மையில் நடந்த சம்பவத்தை எங்களிடம் விவரித்துக் கூறுங்கள். விஷயம் தெரிந்தபிறகு அதைப்பற்றிப் பேசலாம்' என்ருள். தன் தாயினிடம் அதிக அன்புடனும் மரியாதையுடனும் நடந்து கொள்பவளான கற்பகமும், 'ஆம், அம்மா! தயவு செய்து என்ன சம்பவம் நிகழ்ந்தது என்பதை விவரமாக அறிவியுங்கள். அதை அறிந்துகொள்ள வேண்டுமென்னும் ஆவல் அதிகமாக இருக்கிறது' என்று கேட்டுக்கொண்டாள்.

ஹேமவதி சீமாட்டி தன் குமாரிகளிருவரையும் பார்த்த

வண்ணம், 'நான் இப்போது சொல்லப்போவது உண்மையான விஷயமாகும். என்னை விவாகம் செய்துகொள்ள ஒருவர் முன்வந்தார். ஆனால் அவர் யார் என்று சொல்லும் போதுதான் நீங்கள் ஆச்சர்யப்படுவீர்கள்' என்றதும் இரு குமாரிகளும் ஆவலுடன், 'அது யார்? அது யார்?' என்று கேட்டார்கள். உடனே ஹேமவதி சீமாட்டி, 'உங்கள் ஆசிரியரான மோகனதாஸே இவ்வாறு என்னிடம் தெரிவித்துக் கொண்டார்' என்று வாய்கூசாமல் பொய் கூறினாள். இச்சொல் அக்குமாரிகளின் காதில் விழுந்ததும், 'ஆ, அப்படியா!' என்று அவர்களிருவரும் ஆச்சரியத்துடன் கூறித் திக்பிரமையுடன் அதற்குமேலொன்றும் பேச முடியாமல் நின்றார்கள்.

அதுதான் சமயமெனக் கருதிய ஹேமவதி சீமாட்டி பின்வருமாறு கூறலானாள்:—'நான் சொல்வதில் சிறிதும் பொய் இல்லை. அவர் உங்களுக்குப் பாடம் சொல்ல வருவாரென்று நீங்கள் சொற்ப நேரம் காத்திருந்து பிறகு வெளியில்போய்விட்டீர்களல்லவா? அப்போது அவர் வந்தால் நாளையதினம் வரும்படி சொல்லவேண்டுமென்றும் தெரிவித்தீர்கள். அவர் அடக்கமுடையவரென்றும், யோக்கியமானவரென்றும், சிறிதும் தவறான வழியில் செல்லமாட்டாரென்றும் நான் நினைத்திருந்தேன். ஆதலால் ஒரு சேவகன் அச்செய்தியைச் சொல்லி அவரை அனுப்பிவிடுவதைவிட அதை நானே சொல்லலாமென நினைத்தேன். அவர் வந்ததும் எனது அறைக்கு வரும்படி சொல்லியனுப்பி அவர் எதிரில் வந்ததும் நாற்காலியில் உட்காரவைத்து மரியாதையாகச் செய்தியைத் தெரிவித்தேன். நான் சிறிது தாராளமாகப் பேசிவிட்டேனோ என்னமோ தெரியவில்லை. அவர் நாற்காலியில் உட்கார்ந்து வேறுபல விஷயங்களை யெல்லாம் என்னி

டம் அதிக பழக்கமுடையவர்போல் பேச ஆரம்பித்துவிட்டார். அப்படிப் பேசிக்கொண்டு வரும்போது எப்படியோ என்னை மயக்கிக் காதல் சம்பந்தமான பேச்சையும் ஆரம்பித்துவிட்டார். நானும் எதிர்த்துப் பேசாமல் என்னதான் சொல்கிறுர் என்று கவனிப்போமெனக் கேட்டுக்கொண்டிருந்துவிட்டேன். அப்போது அவர் நான் எதற்கும் சம்மதிப்பேனென நினைத்துத் திடீரென்று என் பாதத்தில் வீழ்ந்து முழங்காலிட்டுப் பணிந்து, நாவல்களிலும் காதற் கதைகளிலும் காணப்படும் பலவகையான காதல் சொற்களைப் பிரயோகித்து நான் அவர்மீது இரக்கங்காட்டி அவரை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும் இன்றேல் தற்கொலை செய்துகொண்டு விடுவதாகவும் கூறினர்.'

இதைக் கேட்டதும் ராஜேஸ்வரி தன் தாயின் முகத்தைச் சந்தேகத்துடன் பார்த்துக்கொண்டே, 'இதென்ன ஆச்சர்யம்! இப்படியும் நடந்திருக்குமா?' என்ருள். ஆனல் தாயார் கூறிய வார்த்தைகளையெல்லாம் அப்படியே நம்பிய இளைய குமாரியாகிய கற்பகமோ, 'ஐயோ கடவுளே! இதென்ன அக்கிரமம்! இப்படியும் செய்யலாமா?' என்ருள். அப்போது ஹேமவதி சீமாட்டி, ராஜேஸ்வரி சொன்னதைக் கவனியாதவள்போல் கற்பகம் கூறியதற்குப் பதிலாக, 'ஆம்; பெரிய அக்கிரமம்தான். அவர் செய்தது பெருந்தவறு என் பதில் சிறிதும் ஆட்சேபமில்லை. ஆகவே நான் அவரை மரியாதையாக வெளியே பக்குவமாய் அனுப்பிவிட்டதுடன் இனி அவர் நம் மாளிகைக்கு வரக்கூடாதென்றும் கண்டிப்பாக அறிவித்துவிட்டேன்,' என்ருள். உடனே கற்பகமும், 'அம்மா! அவரை நான் அதிகம் மதித்திருந்தேன். சாதாரணமாகத் தற்கால இளைஞர்கள் பலரைவிட அவர் எவ்வளவோ சிலாக்கியமானவரென்று நினைத்திருந்தேன். அதிக

புத்திசாலி என்று கருதினேன்,' என்று சொல்லி முடிப்பதற்குள் ராஜேஸ்வரி தன் தாயின் முகத்தை உற்றுப் பார்த்துக் கொண்டே, 'அவர் அப்படியெல்லாம் செய்யமாட்டார் என்று நான் நினைத்தேன், இப்போதும் அவர் புத்திசுவாதீனத்துடன் இருந்து இப்படிச் செய்திருப்பாரென்று நான் நினைக்கவில்லை. ஏதேனும் பைத்தியம் பிடித்து அப்மாதிரி செய்துவிட்டாரோ என்று சந்தேகிக்கிறேன்,' என்றாள். உடனே ஹேமவதி சிமோட்டியும், 'ஆம்; அப்படித்தான் இருக்கலாம்.' என்று கூறிவிட்டுச் சிறிது நேரம் அதைப் பற்றித் தன் குமாரிகளிடம் பேசியிருந்துவிட்டு இரவு போஜனத்துக்காக வேறு உடையை அணியும் பொருட்டு மற்றொரு அறைக்குச் சென்றாள். ஆனால் அவள் மனதில் வேறொரு விதமான கவலை வேலை செய்யத் தொடங்கிவிட்டது. அதாவது தான் திரித்துக்கூறியதைத் தன் மூத்த குமாரி நம்பவில்லை என்பதே.

தாயார் அவ்வறையை விட்டுச் சென்றதும் சகோதரிகள் மட்டும் தனியாக இருந்ததால் மூத்தவளான ராஜேஸ்வரி தன் இளையவளைப் பார்த்து, 'கற்பகம்! இப்போது நமது தாயார் சொன்ன கதையைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய்?' என்று கேட்டாள். ராஜேஸ்வரி எந்த நோக்கத்துடன் இக்கேள்வியைக் கேட்டாளென்பதை யறியாத கள்ளங்கபடமற்ற கற்பகம், 'நமது ஆசிரியர் மோகனதாஸ் நடந்துகொண்டவிதம் கண்டிக்கத்தக்கதாகவே இருக்கிறது' என்று பதிலளித்தாள். உடனே மூத்தவள், 'நமது தாயார் இப்போது நம்மிடம் கூறியவை யெல்லாம் உண்மையாகவே நடந்திருந்தால் மோகனதாஸ் நடந்துகொண்ட விதம் தவறானதே' என்று குதர்க்கமாகப் பேசினாள். அப்போதுதான் அவளது உள்ளத்தை உணர்ந்த கற்பகம் ஆச்சரியத்துடன்,

'நீ கூறுவதன் அர்த்தம் என்ன? ஏதோ விசேஷ பொருள் இருக்கும்போலிருக்கிறதே' என்றாள். அதற்கு அவள், 'ஆம்; நான் கூறுவதில் விசேஷமிருக்கிற தென்பதில் சந்தேக மில்லை. நம் தாயார் நம்மிடம் கூறியதைவிட வேறுவித மான சம்பவமே நடைபெற்றிருக்கவேண்டு மென்று கருது கிறேன். மோகனதாஸ் போன்ற ஒரு நற்குண நல்லொழுக்க முடைய இளைஞன், நமது தாயாரைப் போன்ற வயதான ஒரு மாதை மோகித்து அவளடியில் பணிந்தார் என்றால் அதை நம்பமுடியுமா?' என்றாள். உடனே கற்பகம், 'அப்படி யொன்றுமில்லை. நமது தாயார் என்ன அவ்வளவு வயதான வரா? அவர் வயது நாற்பதுதானே. மேலும் அவர் அழ கும் ரூபலாவண்யமுடையவராகவுமிருக்கிறாரல்லவா?' என்று கேட்டாள்.

இதற்கு ராஜேஸ்வரி, 'இருக்கட்டும், நமது தாயாருக்கு வயது நாற்பது என்றால் மோகனதாஸருக்கு வயது இருபது தானே. அவர் தன்னைவிட இருமடங்கு அதிக வயதான ஒரு மாதினிடம் அவள் காலில் விழுந்து பணியும்படியான அவ்வளவு மோகங் கொள்வாரென்பது நம்பத்தக்கதா யில்லை. அவர் மிதமீறிய அன்புடையவராய் இருந்தால்தான் இப் படிக் கேட்டிருக்க முடியும். விளக்கமாகக் கூறவேண்டு மாயின் நான் இக்கதையை நம்பவில்லை. விரைவிலேயே உண்மையில் என்ன நடந்த தென்னும் விஷயம் வெளியாகப் போகிறது பார்,' என்று தன் மனதில் தோன்றிய சந்தேகத் தைத் தெரிவித்துவிட்டாள். அப்போது கற்பகம் தன் தமக்கையைக் கண்டிக்கும் முறையில், 'ஆனால் நமது தாயார் ஏன் இவ்வளவு பொய்யான ஒரு கதையைச் சொல்லவேண் டும்?' என்று கேட்டாள். ராஜேஸ்வரி ஆத்திரத்துடன், 'கற்பகம்! யார் எதைச் சொன்னாலும் நீ ஏன், ஏன் என்று

கேட்கிறாய். ஒருவர் ஒரு விஷயத்தில் சந்தேகமடையலாம். ஆனால் உடனே அதற்குக் காரணம் தெரிந்திருக்கவேண்டு மென்பது அவசியமில்லை. நமது மாளிகையில் சமீபத்தில் விருந்து நடந்தபோது திடீரென்று தாயார் வெளியேபோய் யாரோ ஒரு மாதைப் பார்த்துப் பேசினாரே அது என்ன விசேஷம்?' என்றாள்.

இவர்கள் இவ்வாறு பேசிக்கொண்டிருந்தபோது ஒரு வேலைக்கார மாது அவ்விடம் சென்று இரவு போஜனத்துக்கு வரும்படி அழைத்ததால் அவர்கள் தங்கள் சம்பாஷணையை நிறுத்திவிட்டுச் சாப்பிடச் சென்றனர். அன்றிரவு முழுதும் ஹேமவதி சீமாட்டிக்குத் தூக்கமே வரவில்லை. படுக்கையில் புரண்டுகொண்டே கிடந்தாள். சாதாரணமாகப் பாயின்மீது படுத்த எத்தனையோ ஏழைகள், பஞ்சணையில் படுத்த ஹேம வதியை விடச் சுகமாகத் தூங்கியிருப்பார்கள். இதனால் சுக மோ துக்கமோ ஏற்படுவதற்கு மனமே காரணமென்று தெரி கிறதல்லவா? ஹேமவதி சீமாட்டி படுத்தது பஞ்சணையாக இருந்தும் மனக் கஷ்டத்தினால் அவள் முள்மீது படுத்தது போலக் கருதினாள். இரவு முழுதும் அவளுக்குப் பலவித மான சிந்தனைகள் தோன்றலாயின. மோகனதாஸை அவள் வெறுப்பதாகவும், பழிவாங்கப் போவதாகவும் வாயாற் சொன்னாளே யொழிய அந்த அழகிய இளைஞனிடம் அவ ளுக்கு ஏற்பட்டுவிட்ட மோகம் சிறிதும் குறையாமல் அவ ளைத் தகிக்கச் செய்ய ஆரம்பித்துவிட்டது. அவனுடைய உருவமே அவள் முன்வந்து நிற்கிறது. அவனுடைய ஞாப கமே அதிகமாய்விட்டது அவனுடன் கூடித் தன் விரக தாபத்தைத் தீர்த்துக்கொள்ள முடியவில்லையே என்று இரவு முழுவதும் கண்ணீர் விட்டுக்கொண்டிருந்தாள். மேலும் அவன் வேறு ஒரு பெண்ணை நேசிப்பதாகத் தெரிந்ததால்

அவளுக்குப் போட்டியாக ஏற்பட்ட அப்பெண்ணின் மீதும் ஒருவித பொறாமையும் ஆத்திரமும் அவளுக்கு ஏற்பட்டது. எப்படியாவது அந்த எதிரியைத் தண்டிக்கவேண்டும் என்றும் தோன்றியது. ஆகவே அவள் இரவெல்லாம் இவ்வாறு அவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்தாள்.

அந்த இரவில் ஒன்றிரண்டு மணி நேரங்கள் மட்டும் அவள் உபாயமாகத் தூங்கியிருக்கலாம். ஆனால் அந்த நேரத்திலும் அவள் பல கனவுகளைக் கண்டதால் அதுவும் திருப்தியான தூக்கமாகாது. மறுநாள் காலை பொழுது விடிந்ததும் அவள் முகம் பார்க்கும் கண்ணாடியில் தன்னைப் பார்த்துக் கொண்டாள். முகம் தெளிவில்லை, வெளுத்திருந்தது. ஏதோ பலவித கவலைக் குறிகள் காணப்பட்டன. ஆகவே அவள் மனவெறுப்புடன் தன் காலால் பூமியின்மீது அறைந்த வண்ணம், 'எனக்குப் பலவித கவலைகள், சிந்தனைகள் தோன்றி வாட்டுகின்றன. அதுகூடவே கூடாது. அனைத்தையும் மறக்கவேண்டும்,' என்று சொல்லிக்கொண்டாள். ஆனால் அவள் அவ்வாறு சொல்லிக்கொண்டாளேயொழிய மோகனதாஸ் விஷயத்தில் பழிவாங்குவதென்னும் எண்ணத்தை விட்டுத் தொலைத்து மன நிம்மதியை அடையவில்லை. அவள் நீண்டகாலமாகவே அடக்கிவந்த காமம் மீறிப்போனதாலும் இப்போது முழுச் சக்தியுடன் வெளிப்பட்டிருப்பதாலும் அவள் அதற்கு இரையாய்ப் போனதால் அவளுக்கு ஏற்பட்ட மோகத்தை யடக்கமுடியாமல் திண்டாடினாள். அதனால் பழிவாங்கவேண்டுமென்னும் எண்ணமும் மாறவில்லை.

அன்றுபகல் சுமார் மூன்றுமணிக்கு ஹேமவதி சீமாட்டி வீற்றிருந்த வண்டி மதனவல்லி சீமாட்டியின் மாளிகையின் முன் வந்து நின்றது. ஹேமவதியும் அம்மாளிகையின் மாடி மீது ஏறிச் சென்றாள். அவள் மனதில் ஏதோ ஒரு விஷயம்

வேலை செய்துகொண்டிருப்பது அவள் முகத்திலேயே தெரிந்தது. ஹேமவதி மாடிமீதுள்ள அறையில் நுழைந்த போது அங்கிருந்த மதனவல்லியும், ஷண்பகவல்லியும் அவளை மரியாதையாக வரவேற்றதுடன் அவள் முகக்குறியால் அவளது நிலைமையையும் உணர்ந்து, மதனவல்லி ஹேமவதியை நோக்கி, 'அன்புள்ள மாதே! ஏதேனும் அதிருப்திகாமான விஷயம் நடைபெற்றதோ' எனக் கேட்டாள். உடனே அவள் ஆச்சர்யப்படுபவள்போல், 'அதிருப்தியா? நான் வண்டியில் வந்துகொண்டிருந்தபோது பலவித யோசனைகளைச் செய்துகொண்டு வந்ததால் என் முகத்தில் ஏதேனும் மாறுதல் ஏற்பட்டிருக்கிறதுபோலும்! அவ்விஷயத்தை உங்களிடம் சொல்வதாக எனக்கு எண்ணமில்லை. ஆனால் இதை இரகசியமாக வைத்திருப்பதிலும் எனக்கு இஷ்டமில்லை' என்று பரிகாசச் சிரிப்புடன் கூறினாள். அதற்கு மதனவல்லி, 'அப்படியொன்றும் அதிருப்திகாமான விஷயம் ஏற்பட்டுவிடவில்லையே,' என்று கேட்டாள். அப்போது ஹேமவதி, 'அதிருப்திகாமான விஷயமொன்றுமில்லை, எல்லாம் வேடிக்கையான சமாசாரமே. ஆயினும் சிறிது மன வருத்தம் ஏற்படுவதாகவும் இருக்கிறது. நான் அம்மாதிரி விஷயங்களுக் கெல்லாம் சிறிதும் ஆதரவு கொடுக்கமாட்டேனாதலால் எனக்கு வருத்தமே' என்று சொல்லி முடித்ததும் மதனவல்லி, 'அம்மா! நீங்கள் சொல்வது எனக்கும் ஷண்பகவல்லிக்கும் இன்னதென்றே விளங்கவில்லை. ஆனால் நம்மைப் போன்ற அந்தஸ்திலுள்ள பெண்களுக்கே ஏதேனும் மனக் கவலைகள் தோன்றுவது சகஜமாய்ப் போய்விட்டது. இன்று காலையில் இதோ இந்த ஷண்பகவல்லியும் சிறிது விசாரத்துடன்தான் இருந்தாள்,' என்றாள்.

ஷண்பகவல்லியின் பெயரைச் சொன்னதும் ஹேமவதி

சீமாட்டியும் ஏதோ புதிய விஷயத்தைப்பற்றி ஞாபகமடைந்தவளேபோல் திடீரென்று அவள் பக்கமாகத் திரும்பி, 'ஷண்பகவல்லி! மோகனதாஸ் என்பவர் உனக்குப் பாடம் கற்பிக்கிருரல்லவா?' என்று கேட்டாள். திடீரென்று அவள் அவ்வாறு கேட்டதால் ஷண்பகவல்லி, தானும் மோகனதாஸும் பரஸ்பரம் காதலிப்பது அவளுக்குத் தெரிந்துவிட்டதோ என்று பயந்து அச்சத்துடன் முகம் வெளுக்க ஹேமவதி சீமாட்டியை உற்றுப்பார்த்தாள். அப்போது அப்பெண்மணியின் முகத்தில் தோன்றிய மாறுதலை நன்கு கண்டுகொண்ட ஹேமவதி அவளிடம் ஏதோ விசேஷமிருக்கிறதென சந்தேகங்கொண்டு, 'ஷண்பகவல்லி! ஏன் இவ்வாறு பேசாமல் திக்பிரமை யடைந்திருக்கிருய்' என்று கேட்டாள். அதற்கு அப்பெண், 'நீங்கள் திடீரென்று சம்பாஷணையை மாற்றி வேறுவிஷயமாகப் பேசியதால் இதென்ன ஆச்சர்யமென்று நான் திக்பிரமையடைந்தேனே யொழிய விசேஷ மொன்றுமில்லை' என்று சமாதானம் கூறிக்கொண்டே மெதுவாகத் தன் முகத்தில் ஏர்பட்ட மாறுதலை மாற்றிக்கொண்டு சிறிது புன்சிரிப்பும் சிரித்தாள்.

அப்போது மதனவல்லியும், 'ஷண்பகம்! உன் முகத்தில் திடீரென்று ஒருமாறுதல் ஏற்பட்டதை நானும் கவனித்தேன். ஒருவர் ஒரு விஷயத்தைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கும் போது திடீரென்று வேறு விஷயம் பேசினுல் திடுக்கிடுவது சகஜமே. ஹேமவதி சீமாட்டி உனக்கு பாடம் கற்பிக்கும் மோகனதாஸைப் பற்றி எதையோ கூறப்போவதாகத் தெரிகிறது,' என்ருள். உடனே ஹேமவதியும் ஷண்பகவல்லியை உற்றுப் பார்த்துக்கொண்டே இருவரையும் பார்த்துப் பேசுவதுபோல், 'ஆ, என்ன ஆச்சர்யம்! உலகிலேயே இது ஒரு வேடிக்கையான சம்பவம்! நான் சொல்லப்போவதை நீங்

கள் நம்புவீர்களா? மோகனதாஸ் நல்லவனென்று பெயர் எடுத்திருக்கிறான். பெரிய அந்தஸ்திலுள்ள வீட்டுப் பெண்களுக்கே அவன் சித்திரத்தையும் சங்கீதத்தையும் கற்றுக் கொடுத்து அதிக வருவாயைப் பெறுவதால் அவன் மூளை புரண்டுவிட்டதுபோலிருக்கிறது. அவன் மிக யோக்கியனென்றும், உயரிய குணநிசயங்களையுடையவனென்றும் நினைத்திருந்தேன்,' என்று சொன்னபோது மதனவல்லியும், 'ஆம், நானும் அவனைப் பற்றி அப்படித்தான் நினைத்திருக்கிறேன். அந்த அபிப்பிராயத்தை மாற்றவேண்டுமென்றால் நான் உண்மையில் வருத்தப்படுவேன். என்ன விசேஷம், அவன் என்ன செய்துவிட்டான்' என்று மிக ஆவலுடன் கேட்டாள்.

ஷண்பகவல்லி ஒன்றும் பேசவில்லையென்றாலும் தன் சித்தி கேட்ட கேள்விக்கு ஹேமவதி சீமாட்டி என்ன பதில் அளிக்கப்போகிறாள் என்பதை யறிய மிக ஆவலுடன் காத்திருந்தாள். அந்த பதில் வெளிவர ஏற்பட்ட சொற்ப நேரத்துக்குள் பரமயோக்கியனான மோகனதாஸைப் பற்றி அச் சீமாட்டி என்ன சொல்லப்போகிறாளோ என்று பலவிதமாகச் சிந்தித்தாள். ஆனால் அவள் முகத்தில் எத்தகைய விபரீதக் குறிகளும் காணாமலிருக்கும்படி செய்ய முயன்றாள். ஷண்பகவல்லி மனதில் என்ன நினைக்கிறாள். ஆனால் அவள் முகத்தில் எப்படிப்பட்ட குறிகள் தோன்றுகின்றன என்பதில் மதனவல்லி சிறிதும் கவனம் செலுத்தவில்லை. ஹேமவதியும் அவ்வாறே கவனம் செலுத்தாதவள்போலக் காணப்பட்டாளென்றாலும் மிகத் தந்திரமாக அதையே கவனித்து வந்தாள். அப்போது ஹேமவதி மதனவல்லியைப் பார்த்து, 'அன்புள்ள சிநேகிதையே! என்ன நடந்ததென்று கேட்டீரல்லவா? நான் அதைப்பற்றிச்

சொல்லும்போது அதை எப்படி நம்புவதென்றே நீங்கள் நினைப்பீர்கள். அதைப்பற்றி நீங்கள் பலவிதமாகவும் நினைக்கலாம்,' என்றதும் மதனவல்லி, 'அம்மணி! நீங்கள் சொல்லப்போவது இன்னதென்று இப்போது எனக்குத் தெரிகிறது. ஆனால் அப்படி ஏதேனும் நடந்திருக்க முடியுமா? என்றுதான் தோன்றுகிறது' என்றாள்.

அதற்கு ஹேமவதி, 'நடந்திருக்குமா என்று கேட்பானேன். நிச்சயமாகவே இத்தகைய சம்பவம் நடைபெற்றது' என்று துணிந்து கூறினாள். இவர்கள் இவ்வாறு பேசிக்கொண்டிருந்தபோது ஷண்பகவல்லிக்குப் பெருங் கஷ்டமாக இருந்தது. விஷயம் இன்னதென்று தெரியவில்லை. அவளைப்பற்றி எதை எதையோ பேசுவதால் அவளுக்குக் கஷ்டமாகத் தோன்றியதால் அவள் முகத்தில் பலவித குறிகள் தோன்றலாயின. இதையெல்லாம் ஹேமவதி தன் பூனைக் கண்களால் தந்திரமாகப் பார்த்துவிடவே ஷண்பகவல்லிதான் மோகனதாஸ் காதல் விஷயத்தில் தன்னுடைய எதிரி என்னும் சந்தேகம் அதிகரிக்கத் தொடங்கியது. ஆகவே விஷயத்தை நேரடியாகச் சொல்லாமல் இவ்வாறு பல விஷயங்களைச் சூசனை செய்துகொண்டிருந்தால் ஷண்பகவல்லி திண்டாடுவாளாதலால் அதில் ஹேமவதிக்கு ஒருவித ஆனந்தம் ஏற்பட்டது. தன் தந்திரத்தால் ஷண்பகவல்லி எவ்வளவு மனத்துயரமடைகிறாள் என்பதும் தெரிந்ததால் அவளுக்கு அதிலேயே சந்தோஷமாய்விட்டது.

மீண்டும் ஹேமவதி மதனவல்லியைப் பார்த்து, 'என தன்புள்ள சினேகிதையே! ஆம்! நீங்கள் நினைக்கும் விஷயம் உண்மையாகவே நடந்ததுதான். மோகனதாஸ் இப்படிச் செய்திருப்பானென வெருமே நினைக்கமாட்டார்கள், நல்லவனென்றும் நற்குணமுடையவனென்றும் பெயர் எடுத்த

அவன் இப்படிச் செய்வதென்றால் எல்லாருக்குமே ஆச்சர்ய மாயிருக்கும்,' என்றாள். அதற்கு மதனவல்லி, 'ஆம், ஆச் சர்யமாகத்தான் தோன்றும். ஆனால் நம்முடன் பழகும் சிலர் சிற்சில சமயங்களில் இவ்வாறு செய்வதும் சகஜமாகத் தானே இருக்கிறது' என்று கூறினாள். அதற்கு அவள், 'மோகனதாஸும் இப்படித்தான் செய்துவிட்டான். அவன் நல்லவனாயிற்றே என்று நம்மைப்போன்ற உயர்தர அந்தஸ் துடைய வீடுகளில் அவனைத் தாராளமாகச் சேர்த்துக் கொண்டதால் அவன் வேறுவிதமாக நினைத்துக்கொண்டு விட்டான்,' என்று கூறிக்கொண்டே ஷண்பகவல்லியின் முகத்தை உற்று நோக்கினாள். அவள் தன் காதலனாகிய மோகனதாஸைப் பற்றிக் கேவலமாகப் பேசியதால் அவள் மனம் நொந்தவளாய் அவஸ்தைப்பட்டுக்கொண்டிருந்தது ஹேமவதிக்குத் தெரிந்தது. அச்சமயத்தில் மதனவல்லி குறுக்கிட்டு, 'அம்மணி! மோகனதாஸ் என்ன காரியத்தைச் செய்துவிட்டானென நீங்கள் திட்டமாகச் சொல்லவில்லையே? ஆயினும் அவன் என்ன செய்திருப்பானென்று தெரிந்து கொள்வதில் கஷ்டமொன்றுமில்லை. நீங்கள் அவனை நேசிக் கிறீர் என்று அவன் கருதிவிட்டான் போலும்!' என்றாள்.

ஷண்பகவல்லிக்கு தான் மனமாரக் காதலிக்கும் மோகனதாஸ் மற்றொரு மாதாகிய ஹேமவதியின் மீது பிரி யம் வைத்திருக்கிறானே என நினைத்துத் துக்கமடையவே அவளுக்கும் தெரியாமல் கண்ணீர் வடியலாயிற்று. அதை அவள் சர்வ ஜாக்கிரதையாகத் துடைத்துக்கொண்டாளென் றாலும் அதையும் ஹேமவதி சீமாட்டி எப்படியோ பார்த்து விட்டுத் தன் எதிரி அழும்படி செய்துவிட்டதில் ஒருவித திருப்தி யடைந்தவளாய், 'ஆம்; அப்படித்தான் அந்த மூடன் நினைத்துவிட்டான். இச்சம்பவம் நேற்று நடைபெற்றது.

என் குமாரிக ளிருவரும் மாலையில் காற்று வாங்க வெளியில் உலாவச் சென்றிருந்தபோது மோகனதாஸ் அங்கே வந்தான். மறுநாள் இத்தனை மணிக்கு அவன் வரலாமெனச் சொல்வதற்காக அவனை நேரில் என் அறைக்கு அழைத்தேன். அதுதான் தப்பிதமாகப் போய்விட்டது. அவன் உள்ளே வந்ததும் நான் விஷயத்தைத் தெரிவித்துவிட்டேன். அவன் உடனே வெளியே போய்விடாமல் அங்கேயே நின்று கொண்டதுடன் ஏதோ பேச விரும்புபவன் போலவும் ஆனால் அதற்குத் தைரியமில்லாதவன் போலவும் தடுமாறியதைக் கண்டேன். நான் அவன் ஏதேனும் என் தயவை நாடுகிறானோ எனக் கருதி அவன் விரும்பும் உதவியைச் செய்யும் நோக்கத்துடனேயே அவன் தைரியமாக எதையும் கேட்கலாமெனத் தெரிவித்தேன். உடனே அவன் பைத்தியக்காரன்போல் பல காதல் சம்பந்தமான பேச்சுகளைப் பேச ஆரம்பித்தான். அவைகளைக் கேட்க என்னால் சகிக்கவில்லை. ஆகவே நான் அவ்விடத்தைவிட்டுப் போய்விடலாமென நினைத்து எழுந்தபோது அவன் என் காலில் விழுந்து முழங்காலிட்டுப் பணிந்து அவனுடைய உயிரே என் கையில் இருப்பதாகவும், நான் அவனிடம் அனுதாபம் காட்டி அருள் செய்யாவிட்டால் அவன் தற்கொலை செய்துகொள்ளப் போவதாகவும் கூறினான்' என்று கூறியபோது மதனவல்லி சீமாட்டி, 'ஆ, இப்படிப்பட்ட சம்பவத்தை நான் எப்போதும் கண்டதே யில்லை. ஆ, அப்படிப்பட்ட ஒருவனை எனது அருமை ஷண்பகவல்லிக்குப் பாடம் கற்பிக்கும்படியும், அதிலும் சிற்சில சமயங்களில் அவனுடன் தனியாக இருக்கும்படியும் அனுமதித்தேனே என்று இப்போது என் மனம் கஷ்டப்படுகிறது' என்றாள்.

186570

மனமோகினி

ஓர் மாதாந்த நாவல் சஞ்சிகை.

இதில் இனிய நாவல்களே வெளிவரும். நாவலுக்கென்றே
ரு சஞ்சிகையை வெளிப்படுத்தி வந்தால், அது தமிழபிமானிகட்
த் திருப்தி யளிக்கக் கூடியதா யிருக்குமென்று நமது "ஆனந்த
பாதினி"ச் சந்தாதாரர்களிற் பலர் கேட்டுக்கொண்டபடி இதனை
922ஞு பிப்ரவரிமீ 1உ முதல் ஆரம்பித்து நடத்தி வருகிறோம்.
திதில் ஒவ்வொரு பெரிய நாவல் தொடர்ச்சியாகவந்து ஆறுமாதங்க
நக் கொருமுறை ஒவ்வொரு முழுப் புத்தகம் முடிவுபெறும். இதற்கு
மன் மகா அற்புதம்பொருந்திய அநேக நாவல்களின் ஆசிரியரான
நீமான் ஆரணி - குப்புசாமி முதலியாரவர்களால் இயற்றப்பட்ட
அமராவதி" "பவளத்தீவு" "ஞான செல்வாம்பாள்" "அற்புதமர்
ங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள்" "கற்பகச்
சோலையின் அற்புதக் கொலை" "கடற்கொள்ளைக்காரன்" "இரா
ஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம்" "இரத்தினபாய் அல்லது
இரகசிய சங்கம்" 'சந்திராபாய் அல்லது சங்காதாஸின் வெற்றி"
இரத்தினபுரி இரகசியம் 3-ம்,4-ம்,5-ம்,6-ம் பாகம் நாவல்கள் முடிவு
பெற்று இப்பொழுது இரத்தினபுரிரகசியம் 7-ம்பாகம் என்கிறநாவல்
ஆரம்பமாகி நடந்துவருகிறது. முடிவான நாவல்கள் வேண்டுவோர்
புத்தகமாகவே வாங்கிக்கொள்ளவேண்டும் ; அவற்றின் தனிச் சஞ்சி
கைகள் கிடையா. இச்சஞ்சிகைகள் ஒவ்வொன்றும் கிரௌன் 80-பக்
ங்கொண்டது. அடியிற்கண்ட விலாசத்திற்கு உடனே எழுதி வி-பி-
யிலோ முன்பணம் அனுப்பியோ பெற்றுக் கொள்ளுங்கள்.

ஒவ்வொரு வருஷத்திலும் பிப்ரவரிமீ ஆரம்பமே இச்சஞ்சி
கைக்கு வருஷ ஆரம்பம். எப்பொழுது சந்தாதாரராகச் சேர்ந்தா
லும் அந்த வருஷம் பிப்ரவரிமாதம் முதற்கொண்டு கணக்கு வைக்
கப்படும். உள் நாட்டிற்கு வருஷ சந்தா ரூ. 2—8—0
வெளி நாட்டிற்கு ,, 3—0—0

இதுவரையில் சஞ்சிகை ரூபமாக வெளிவந்திருக்கும் புஸ்தகங்கள்.

அமராவதி 2 பாகமும் ரூ. 4 0 பவளத்தீவு 2 பாகமும் ரூ. 3 0

ஞானசெல்வாம்பாள் 5 பாகமும்	ரூ.	9	10	0
அர்ஜுனஸிங், சுந்தர்	,,	0	2	0
அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள்		1	12	0
கற்பகச்சோலையின் அற்புதக்கொலை	ரூ.	1	4	0
கடற் கொள்ளைக்காரன் 2-பாகமும்	,,	3	4	0
இராஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம்	,,	2	0	0
இரத்தினபாய் அல்லது இரகசிய சங்கம்	,,	1	12	0
சந்திராபாய் அல்லது சங்காதாஸின் வெற்றி	,,	2	0	0

மானேஜர்:—"ஆனந்த நிலயம்," தபால்பெட்டி நெ. 167, மதராஸ்

"ஆனந்தபோதினி"

ஓர் இனிய மாதாந்தத் தமிழ்ச் சஞ்சிகை.

இச்சஞ்சிகை 1915௵ ஜூலை௴ முதல் சென்னையில் பிரசு
கப்பட்டு வருகிறது. தற்காலம் குன்றியிருக்கும் நமது தமி
பாஷையின் அபிவிர்த்தியையும், நமது நாட்டாருடைய இலெ
கீக ஆசார ஒழுக்கங்களின் சீர் திருத்தத்தையும், ஆண்மார்,
ஞானபிவிர்த்தியையும், பெண்கல்வியையும் நோக்கமாய்க்கொண்
இச்சஞ்சிகை பிரசுரிக்கப்பட்டு வருகிறது. பிரதி சஞ்சிகையிலு
மேற்கண்ட விஷயங்களோடு, நமது சிறுவர். சிறுமிகளுக்கு
ஸ்திரீகளுக்கும் அவசியமான நீதிகளும், புத்திமதிகளும் காணல
எல்லா விஷயங்களும் உலக அனுபவமுடைய கல்வியாளர
வரையப் படுகின்றன. இவையன்றி பேர்பெற்றவர்களால் எழு
பட்ட அறிவு விருத்திக்கான மிக்க நேர்த்தியான புது நா
களும் தொடர்ச்சியாய் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன. இப்
போது இது நமது நாட்டில் பிரசுரிக்கப்படும் எல்லாத் தமிழ்ச்
சஞ்சிகைகளையும் விட அதிகமான சந்தாதாரரை யுடையது. இது
ஜாதிமத பேதமின்றி ஒவ்வொரு மாணவனும், புருடனும், ஸ்திரீ
யும் அவசியம் வாசிக்கத் தக்கது. இது நமது நாட்டாரது நன்
யொன்றைமட்டும் கருதியே பிரசுரிக்கப்படுவதால், டெம்மி 8 ப
கம் அளவில் 80 பக்கம் விஷயங்களுள்ள இச்சஞ்சிகைக்குத் தபா
கூலி யுள்பட வருட சந்தா 1 ரூபாதான் ஏற்படுத்தப்பட்டிருக்கிற
பினாங்கு, ஸிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு ரூபா 2-
மாதிரிக்காப்பி இனாம்.

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியார் இயற்றிய நாவல்கள்.

	ரூ.	அ.		ரூபா
இரத்தினபுரி இரகசியம்			தினகரசுந்தரி	1
6-பாகமும் ...	11	10	தபால்கொள்ளைக்காரர்	0
பவளத்தீவு 2-பாகமும் ...	3	0	ரத்தினாபாய் ...	1
கற்கோட்டை ...	2	0	வீரநாதன் ...	0
மின்சார மாயவன் ...	1	8	குணசுந்தரன் ...	0
தேவசுந்தரி ...	1	4	மஞ்சள் அறையின் மர்மம்	1
கனகபூஷணம்2பாகம் ...	3	8	கமலசேகரன் ...	1
இராஜாமணி ...	2	0	பூங்கோதை ...	0
ஆனந்தஸிங் ...	2	0	இந்திராபாய் ...	2
மதனபூஷணம் ...	1	0	அமராவதி 2 பாகமும்	4
ஞானசெல்வாம்பாள்			மதனாம்பாள் 2 பாகமும்	3
5 பாகமும் ...	9	10	லோகநாயகி	1

விலாசம் : மானேஜர், "ஆனந்தபோதினி" ஆபீஸ்
லாயர் சின்னதம்பி முதலி வீதி, சௌகார்பேட்டை, மதரா